GOKULAM

கோகுலம்



நவம்பர் '97

ரூ. 5.00



கோகுலம்

நவம்பர் 1997

மலர்: 15

இதழ்: 10

அருமைச் சிறுவர், சிறுமியரே!

இந்தப் பக்கத்தின் கீழே ரேவதி என்ற கையெழுத்தைக் காணாமல் நீங்கள் ஆச்சர்யம் அடையலாம். ரேவதி என்ற புனை பெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் ஹரிஹரன், பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு உங்கள் சார்பிலும் நல்வாழ்த்துக் கூறி வழியனுப்பி வைக்கிறோம். அவரைப் பற்றிய ஒரு சிறு கட்டுரையை இந்த இதழின் இன்னொரு பக்கத்தில் எழுதியிருக்கிறேன். நீங்கள் எல்லோரும் படித்துப் பார்த்து மகிழ வேணும். ரேவதிக்கு வாழ்த்துச் சொல்லி நீங்கள் அனுப்பும் கடிதங்களை அவரிடம் பத்திரமாகக் கொண்டு போய்க் கொடுப்பேன்.

கோகுலம் பத்திரிகையில் அதன் வாசகர்களாகிய உங்களுடைய எழுத்து இன்னும் அதிகமாக இடம் பெற வேண்டும் என்று விரும்புகிறேன். கதை, கட்டுரை, நாடகம், துணுக்கு, புதிர், சம்பவங்கள், அனுபவங்கள், கவிதைகள், சிரிப்பு வெடிகள் என்று எதை வேணுமானாலும் எழுதலாம். ஆனால் கண்டிப்பாக இரண்டு விஷயங்களை மறக்கக் கூடாது. 'சொந்தக் கற்பனை' அல்லது 'தழுவல்' என்று அவசியம் குறிப்பிட வேண்டும். தழுவல் எனில் எதை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதோ அது பற்றிய முழு விவரமும் தர வேண்டும். இரண்டாவதாக, உங்கள் பெயர், வீட்டு விலாசம், பள்ளி விலாசம், வகுப்பு, வயது ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிட வேண்டும்.

இது நவம்பர் இதழ் என்றாலும் தீபாவளிக்கு முன்னதாகவே உங்கள் கரங்களை அலங்கரிக்கிறது. ஒரே உற்சாகமாக இருப்பீர்கள்! பட்சணம், பட்டாசு, புத்தாடை முதலியன வாங்குவதிலும் அவற்றைப் பார்த்துப் பார்த்து ரசிப்பதிலும் நேரம் பரபரப்பாக ஓடும். அந்தப் பரபரப்பின் இடையிலும் கோகுலம் படிக்க நேரம் ஒதுக்கிக் கொள்வீர்கள், நிச்சயம். ஏனென்றால் இந்தக் கோகுலம் இதழில் தீபாவளி பற்றித்தானே நிறைய, சுவையான விஷயங்கள் இடம் பெற்றுள்ளன! அதனால் கோகுலம் படித்தால்தான் தீபாவளியை ரொம்ப நன்றாகக் கொண்டாடின திருப்தி கிடைக்கும்!

அன்புடன்

(கி. ராஜேந்திரன்)

ஆசிரியர்.



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.




கோகுலம்

நவம்பர் 1997

இந்த இதழில்....

* அருமைச் சிறுவர் சிறுமியரே – 1
* இந்த இதழில் – 2
* சிரிப்...! – 2
* பிருந்தாவனக் கதையரங்கம் – 3
* ரேவதிக்கு ஒரு 'தேங்க் யூ!' – 6
* என்ன பழமொழி? – போட்டி முடிவு – 7
* காகித டம்ளர் – 8
* தேனீ கொட்டுமா? – 9
* தீபாவளி சிரிப்...! – 12
* குறுக்கெழுத்துப் புதிர் – 14
* என்ன செய்யப் போறே? – 15
* உயர்வு தந்தது! – 18
* எங்கள் ஊரில் நடந்தது! – 20
* காந்தி படம் – 24
* தவளையும் தங்கப் பந்தும்! - படக்கதை – 25
* தாகம்! – 38
* வாண வேடிக்கை – 39
* பிருந்தாவனக் கவியரங்கம் – 40
* ஒன்பதாம் வீடு! – தொடர்கதை – 43
* தீபாவளி - பாடல் – 49
* கேட்கட்டுமா டாக்டர்? – 50
* ஒளிந்திருக்கும் தீபாவளி பட்சணங்களைக் கண்டுபிடியுங்கள்! - போட்டி – 52
* சார் தபால்! – 54
* சபாஷ் கங்குலி! – 55
* சிரிப்..! – 56
* தானாக... – பரிசுக்கதை – 57
* உங்கள் நூலகம் – 62
* விடை தெரியாது விழித்தவர்! – 63
* ராமு வெடி பற்ற வைக்க வழி காட்டுங்கள்! – 64
* இவ்வளவுதானா? – 65
* குறுக்கெழுத்துப் புதிர் விடை – 68
* சிங்கமான நட்பு! – 68
* கண்டுபிடியுங்கள்! – 68
* மன்னிச்சிடு கறுப்பா! – 69
* பாதுகாப்பாய்க் கொண்டாடுவோம்! – 71
* வெடிச் சிரிப்...! – 72
* பட்டாசு! - நாடகம் – 73
* எப்படி? எதற்கு? ஏன்? – 78
* கலக்கல் பலகாரம்! – 80
* அம்மா அதிர்ந்தாள்! – 80




திறமையை மதிக்கிறேன்!

சங்கரும், தன்னாசியும் நண்பர்கள். ஒருநாள் இருவரும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர். தெருவோரத்தில் ஒருவன் மிகவும் திறமையாக, பல வித்தைகள் செய்து கொண்டிருந்தான்.

வித்தைகளைப் பார்த்த எல்லோரும் விரிக்கப்பட்டிருந்த துணியில் காசுகளை வீசி விட்டுச் சென்றனர்.

சங்கர் மட்டும் குனிந்து பணிவுடன் இரண்டு ரூபாய்த் தாளை வைத்தான். இதைப் பார்த்த தன்னாசிக்கு வியப்பாக இருந்தது. சங்கரிடம் காரணம் கேட்டான்.

அதற்கு சங்கர், "இங்கு வித்தை காட்டிக் கொண்டு இருந்தவர் மிகவும்



திறமையானவராகத் தெரிகிறார். அவருடைய திறமையை நான் மதிக்கிறேன். அதனால்தான் அனைவரும் பிச்சை போட்டது போல் என்னால் பணத்தை எறிய முடியவில்லை" என்றான்.

தன்னாசி அவனைப் பெருமையாகப் பார்த்தான்.

- க. சரவணக்குமார்,
சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

வாய் இருந்தால்..!

சின்னச்சாமி பெரும் பணக்காரர். எப்போதும் கஞ்சத்தனமாகவும், சிடுசிடுவென்றும் இருப்பார். அவரின் பேரக் குழந்தைகளான வேலுவும், பாலனும் கூட அவரிடம் பேசுவதற்கு பயப்படுவார்கள்.

ஒரு நாள் வேலன் தனக்கு பள்ளிக்குச் செல்ல சைக்கிள் வேண்டுமென்று தாத்தாவிடம் பயந்தபடிக் கேட்டான்.

தாத்தா கோபப் பார்வை பார்த்தார். அவ்வளவுதான், வேலன் திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்து விட்டான்.

இதை அறிந்த பாலன் தான் எப்படியும் தாத்தாவிடம் பேசி சைக்கிள் வாங்கப் போவதாகக் கூறினான். வேலன் தடுத்தும் கேட்காமல் ஓடினான்.


சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "தாத்தா எனக்கு ஒரு சைக்கிள் வேண்டும்" என்றான் பாலன்.

தாத்தா தன் வழக்கமான கோபப் பார்வை பார்த்தார். அப்படியும் பாலன்

அசையாது தைரியமாக நிற்கவே "சைக்கிள் உயரம்கூட இல்லே நீ. உனக்கு சைக்கிள் கேட்குதா?" என்று கடுமையாகக் கூறினார்.

"ஏன் தாத்தா! விமானம் ஓட்டறவங்க விமானம் உயரமா இருக்காங்க" என்றான் பதிலுக்கு பாலன்.

தாத்தாவுக்கே சிரிப்பு வந்துவிட்டது!



"சரி, வாங்கித் தரேன்" என்றார்.

பாலன் மகிழ்ச்சியுடன் சென்று வேலன், அம்மா, அப்பாவிடம் செய்தியைக் கூறினான்.

"வாய் உள்ள பிள்ளை பிழைச்சிக்கும்னு சொன்னது சரியாகத்தான் இருக்கு" என்றார் அம்மா.

- எம். சசிரேகா,
கொணலூர், செஞ்சி.

எப்படி அறிந்தார்?

அமைச்சரையும், காவலரையும் வேட்டைக்கு அழைத்துச் சென்றார் அரசர். காட்டிற்குள் சென்று கொண்டிருக்கும்போது, எதிரே புலி வருவதைக் கண்டதும் மூவரும் வெவ்வேறு திசைகளில் பிரிந்து சென்றனர்.

சிறிது நேரம் கழித்து மூவரும் ஒருவரை ஒருவர் தேட ஆரம்பித்தனர்.

காவலன் தேடிக் கொண்டு வரும்போது அங்கு முனிவர் தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டான்.

அருகில் சென்ற காவலன் "யோவ் சாமியாரே! இந்தப் பக்கம் யாராவது வந்தார்களா" என்று கேட்டான்.

கண்களைத் திறக்காமலேயே "இல்லை" என்று கூறினார் முனிவர்.

சிறிது நேரத்தில் முனிவரிடம் அமைச்சரும் வந்து சேர்ந்தார். "தவ முனிவரே! இந்தப் பக்கம் யாரும் வந்தார்களா?" என்று கேட்டார் அமைச்சர்.

"ஒரு காவலன் வந்தான்" என்று கண்களை மூடியபடியே கூறினார் முனிவர்.

அமைச்சர் சென்றவுடன் அரசர் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவரும் முனிவரிடம் சென்று "பெரியவரே! தங்கள் தவத்தை கலைப்பதற்கு மன்னிக்க வேண்டும். இந்தப் பக்கம் யாராவது வந்தார்களா?" என்று பணிவுடன் கேட்டார் அரசர்.

"ஆம் அரசே! உங்கள் காவலனும் அமைச்சரும் வந்தார்கள்" என்று முனிவர் கூறியதும் நன்றி கூறி புறப்பட்டார் அரசர்.

சிறிது நேரத்தில் மூவரும் ஒரு இடத்தில் சந்தித்தனர். முனிவர் கண்களை மூடிக் கொண்டே காவலன், அமைச்சர், அரசர் என்பதை எப்படி அறிந்தார் என்று வியந்தபடி விவாதித்தனர்.

இந்த சந்தேகத்தை அவரிடமே கேட்டு விட முடிவு செய்து மீண்டும் முனிவரைச் சந்தித்தனர்.

"அரசே! இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் மூவரும் பேசிய வார்த்தைகளையும், தொனியையும் வைத்து அறிந்து கொண்டேன். . காவலன் சாதாரணமாகக் கேட்டான். அமைச்சர் சற்று மரியாதையுடன் கேட்டார். நீங்களோ தொந்தரவு செய்வதற்கு மன்னிப்புக்



கேட்டுவிட்டு பணிவுடன் கேள்வி கேட்டீர்கள். இதை வைத்தே அறிந்தேன்" என்றார் முனிவர்.

செ. சுந்தர்ராஜ், 9ஆம் வகுப்பு, கிருஷ்ணாபுரம், விருதுநகர் மாவட்டம்.

தூசியைத் துடைக்கணும்!

முத்துவும் ராமுவும் நண்பர்கள். வகுப்பில் முத்துவிற்கும் ராமுவிற்கும் சின்னத் தகராறு ஏற்பட்டது. தவறு ராமு மீதுதான். இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

இரண்டு நாட்களாக தனியாகவே பள்ளிக்குச் செல்லும் முத்துவிடம் காரணம் கேட்டார் அம்மா. அவன் நடந்ததைக் கூறினான்.

"இரண்டு நாட்களுக்கு முன் என்னுடைய கணக்கு நோட்டை வாங்கிட்டுப் போனான். மறுநாள் பள்ளிக்கு நோட்டை கொண்டு வர மறந்து விட்டான். அதனால் கணித வகுப்பு முழுவதும் நான் வெளியில் நின்றேன். செய்யாத தப்புக்கு தண்டனை அனுபவித்த கோபத்தில் திட்டினேன். அதிலிருந்து அவன் என்னுடன் பேசவில்லை. நானும் பேசவில்லை" என்றான் முத்து.

"உன்னோட நண்பன்தானே! நீதான் விட்டுக் கொடுத்துப் போகக் கூடாதா?" என்றார் அம்மா.

"தப்பு செஞ்ச அவனே பேசாமல் இருக்கும்போது, நான் ஏன் அவன்கிட்ட போய்ப் பேசணும்" என்றான் முத்து.

"சரி. உங்க சண்டையை அப்புறம் பார்த்துக்கலாம். நாளைக்கு உங்க தாத்தா, பாட்டி வர்றாங்க. பரண் மேலே போட்டு வச்சிருக்கிற பாத்திரத்தை எடுத்துக் கொடு. நாளைக்குத் தேவைப்படும்."



நாற்காலி மீது ஏறி நின்று ஒவ்வொரு பாத்திரமாக எடுத்துக் கொடுத்தான் முத்து.

"ஐய்யோ! பாத்திரமெல்லாம் ஒரே தூசியா இருக்கே! இப்ப என்ன பண்றது?" என்று வருத்தம் மேலிடக் கூறினார் அம்மா.

"இதுல என்னம்மா பிரச்சனை! தூசியை துடைச்சிட்டு கழுவி பயன்படுத்த வேண்டியதுதானே" என்றான் முத்து.

"அதே மாதிரிதான், உன் நல்ல நண்பன் தூசி மாதிரி சின்ன தவறு செஞ்சிட்டான். அதை மன்னிச்சு பேச வேண்டியதுதானே" என்றார் அம்மா.


"சரியாச் சொன்னீங்கம்மா. சின்ன தவறுக்காக நல்ல நண்பனை இழக்க இருந்தேன். ராமு வீட்டுக்குப் போய் விட்டுப் பாடம் செஞ்சிட்டு வரேன்" என்று கிளம்பினான் முத்து.

பா. கவிதா, 8ஆம் வகுப்பு ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி, சென்னை.

"பூனைக்குட்டி பேர் என்ன?"

"சௌ'மியா'!"


- பொறையாறு கானா. கணேசன்



ரேவதிக்கு ஒரு 'தேங்க் யூ!'

பெரியவர்களுக்காகப் பத்திரிகை நடத்தி விடுவது சுலபம். ஒப்புநோக்க குழந்தைகளுக்குப் பத்திரிகை நடத்துவதுதான் ரொம்பக் கஷ்டம். காரணம், குழந்தைகள் பத்திரிகை, குழந்தைகளை மட்டும் திருப்தி செய்தால் போதாது; பெரியவர்களிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டும். அப்போதுதான் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பார்கள்!

இந்த சிரமமான காரியத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் உழைத்து சாதனை புரிந்தவர் அழ. வள்ளியப்பா. சொந்தத்தில் குழந்தைகளுக்காகப் பத்திரிகை நடத்தி வெற்றி பெற்றார். ஆனால் உத்யோகத்திலும் இருந்து கொண்டு பத்திரிகையும் நடத்துவது சிரமமாக இருக்கவே சில காலம் சென்று பத்திரிகையை நிறுத்தி விட வேண்டியதாயிற்று. இந்தியன் வங்கியிலிருந்து அவர் ஓய்வு பெற்ற சமயம் கோகுலம் பத்திரிகைக்கு கௌரவ ஆசிரியராகப் பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொண்டோம். உடனே மகிழ்ச்சியோடு சம்மதித்தார். அற்புதமாக நடத்திக் காட்டினார். கோகுலம் விற்பனை இதழுக்கு இதழ் அதிகரித்து மிகப் பிரபலமடைந்தது.



எதிர்பாராத விதமாக வள்ளியப்பா அகால மரணமடைந்த போது, 'அவர் இடத்தை இட்டு நிரப்ப யார் இருக்கிறார்கள்?' என்ற எங்கள் அச்சத்தைப் போக்க முன் வந்தவர் ஹரிஹரன். பள்ளி மாணவராக இருந்த காலத்திலிருந்தே வள்ளியப்பாவின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டு குழந்தைகளுக்காக எழுதுவதை லட்சியமாகக் கொண்டு அனுபவப்பட்டவர். மின் வாரியத்தில் பொறுப்பான பணியில் இருந்தபடியே 'ரேவதி' என்ற பெயரில் குழந்தைகளுக்காக நிறைய எழுதி வந்தவர். மின் வாரியத்திலிருந்து பணிக்காலம் முடியுமுன்னரே தன்னிச்சையாக ஓய்வு பெற்றிருந்த அவரை அணுகினோம். குழந்தைகளுக்காக நிறைய

எழுதியிருந்தபோதிலும் பத்திரிகைத் துறை அவருக்குப் புதிதுதான். எனினும் வெகு சீக்கிரம் இதன் நெளிவு சுளிவுகளைப் புரிந்துகொண்டு சிறப்பாகச் செயலாற்றி வந்தார்.

விஞ்ஞான விஷயங்களை எளிய தமிழில் குழந்தைகளுக்குப் புரிகிற மாதிரி எழுதுவதில் ரேவதி நிகரற்றவர். குழந்தைகளுக்கான அவருடைய பல நூல்கள் வெளி வந்திருக்கின்றன. பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றவர். தவிர 'சின்னபாபு' என்ற பெயரில் சிரிப்புக் கதைகள் எழுதினார். சித்திரக் கதை, கவிதை, கேள்வி-பதில், தொடர் கதை என்று அவர் தொடாத விஷயம் இல்லை. பல ஆண்டுகள் இடைவிடாத கடின உழைப்புக்குப் பிறகு தற்போது கௌரவ ஆசிரியர் பொறுப்பிலிருந்து பணி ஓய்வு பெற்றுள்ளார் ரேவதி.

எழுத்தில் எப்படி எளிமையைக் கையாண்டாரோ அப்படியே குண நலனிலும் எளிமையானவர் ஹரிஹரன். ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டாலும் துடித்துப் போவார். இத்தனை ஆண்டுகள் பழக்கத்தில் அவர் எந்த ஒரு விஷயத்துக்காகவும் வருத்தப்பட்டோ கோபப்பட்டோ நான் பார்த்ததில்லை. அவர் சிந்தனை, சிறு தவறுகளையும் தயக்கமின்றி ஏற்பதாகவும் எதிர்காலத்தை எப்போதும் நினைப்பதாகவுமே இருந்தது. அதுவே அவர் வெற்றிக்கும் அடிப்படைக் காரணம். சாந்தமான புன்னகையுடன் தான் எந்தப் பதிலும் அவரிடமிருந்து வரும்.

சிலருக்கு பணிக்காலத்தை விடவும் ஓய்வுக்காலம் அதிகப் பயனுள்ளதாக அமைவதுண்டு. ஒரு காரியாலயத்தின் சட்ட திட்டங்களிலிருந்து விடுபட்டு சுதந்திரமாகச் செயல்படும்போது, இன்னும் அதிகமாகவே குழந்தைகளுக்காக ரேவதி சாதிப்பது சாத்தியமாக லாம். அவரது சிரிப்புக்கதைகளையும் சிறப்புக் கட்டுரைகளையும் கோகுலம் பத்திரிகையும் அவ்வப்போது தாங்கி வந்து பெருமையடையும்.

— கி. ராஜேந்திரன்

என்ன பழமொழி?

- போட்டி முடிவு

இந்தப் போட்டியில் ஏராளமான வாசகர்கள் கலந்து கொண்டனர். பெரும் பாலானவர்கள் சரியான விடையையே தந்திருக்கிறார்கள். எனவே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கக் குலுக்கல் முறையே கை கொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்


1. சம்சத் பேகம், தொண்டமான் துறை, பெரம்பலூர்.
2. ஜெ.பி. சிவகுமார், காட்டூர், நாமக்கல்.
3. எஸ். சியாமளா தேவி, காந்திகிராமம்.
4. அ. இக்பால், காரிமங்கலம், தருமபுரி.
5. கே. ராஜேஸ்வரி, கோவிலூர்.
6. கே. சின்னப்பன், திருவிளைக்கோயில், திருச்சி.
7. ஜெ. விக்டோரியா, முதலூர், தூத்துக்குடி.
8. கே. வெள்ளையன், கேசவ சமுத்திரம், திருநெல்வேலி.
9. எஸ். மீனா, ஜலந்தர், பஞ்சாப் மாநிலம்.
10. ஞா. மாடசாமி, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர்.
11. ஆர். அபினயா, சித்தூர்.
12. வி.கே. ரகுராமன், கல்பாக்கம்.
13. ஆர். அகஸ்டா, சாயர்புரம்.
14. சி. நிர்மல் சுந்தர், மதுரவாயல், சென்னை.
15. ரா. வித்யா முத்துமாரி, சிவகங்கை.

சரியான விடை

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

காகித டம்ளர்



தண்ணீர் குடிக்க நாமே ஒரு டம்ளர் தயாரிக்கலாமா?

ஒரு சதுர வடிவ தாளை எடுத்துக் கொள்ளுங்கள். (காகிதத்தை மடிக்கும் போது தரையில் வைத்தோ அல்லது டேபிளில் வைத்தோ மடிக்கவும். அப்போது தான் மடிப்பு சரியாக வரும்.)

1. படத்தில் காட்டியபடி தாளை வைத்துக் கொள்ளவும்.

2. கீழ் முனையை மேல் நோக்கி மடிக்கவும். இரு சமபக்க முக்கோணம் கிடைத்திருக்கும்.

3. முக்கோணத்தின் வலது பக்க முனையை எதிர் பக்கத்தைத் தொடும்படி மடிக்கவும்.

4. மடித்தபின் படம் 4-ல் காட்டியபடி உருவம் கிடைத்திருக்கும்.

5. அதே போல் பின்புறம் திருப்பி இன்னொரு முனையையும் மடிக்க வேண்டும்.

6. இரண்டு பக்கமும் மடித்த பின் படம் 6-ல் உள்ள உருவம் கிடைக்கும். மேலே நீட்டிக் கொண்டிருக்கும் பகுதியை பக்கவாட்டில் மடித்த பகுதிக்குள் விட்டு மடிக்கவும்.

7. அதே போல் பின்புறமும் மடிக்கவும்.

8. இதோ டம்ளர் தயார்.

இந்த டம்ளருக்குள் தண்ணீர் ஊற்றிக் குடிக்கலாம். ஐந்து நிமிடம் வரை நீர் கசியாது. வண்ணக் காகிதத்தில் செய்து அலங்காரமாகவும் வைக்கலாம்.

தேனீ கொட்டுமா?

அன்று விடுமுறை. தோட்டத்தில் பூக்கள் மணம் வீசிக் கொண்டிருந்தன. பழனி செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான்.

"ராணி ஒரே ஓர் ஆளாக இருந்துக்கிட்டு இங்க என்ன பாடு படுத்தறா?" என்று யாரோ கூறுவதைக் கேட்டதும் சுற்றும் முற்றும் பார்த்தான் பழனி. தோட்டத்தில் வேறு யாருமில்லை! எங்கிருந்து வந்தது அந்தக் குரல் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது -

"ஆமாம்! அவ மட்டும் ஜாலியா கூட்டிலேயே உட்கார்ந்துகிட்டு இருக்கா. நாம மட்டும் இப்படி கஷ்டப்பட்டு நாள் முழுவதும் உழைக்க வேண்டியிருக்குது" என்று மீண்டும் சோகக் குரல் கேட்கவும் பயந்து போனான் பழனி.

"யார் பேசுறது?" என்று சற்று உரக்கவே கேட்டான் பழனி. இப்பொழுது அவன் குரலில் வியப்போடு பயமும் கலந்திருந்தது.

"தம்பி பயப்படாதே! நாங்க ரெண்டு பேரும்தான் எங்க வேதனையை நினைச்சுப் புலம்பிக்கிட்டிருந்தோம்."

"என்ன ஈக்களா பேசறது?" என்று வியப்புடன் கேட்டான் பழனி.

"ஆமாம் தம்பி. நாங்க நோய் பரப்பும் சாதாரண ஈக்கள் இல்லே, தேன் சேகரிக்கும் தேனீக்கள்."

"உங்களுக்கு என்ன பிரச்சனை? ஏன் வருத்தப்பட்டு பேசிட்டு இருந்தீங்க?-" பழனி.

"அது எங்களோட பிரச்சனை. உனக்கும் சொல்லி வருத்தத்தை உண்டாக்கணுமா?" என்றது ஒரு தேனீ.

"அந்த ராணித் தேனீயைக் கல்லால் அடிச்சுத் துரத்தி விட்டால் நிம்மதியாக வாழலாமே!" என்று அவ்வைகளுக்கு உதவி செய்யும் ஆர்வத்தில் கேட்டான் பழனி.

"அப்படி ஏதாவது செஞ்சிடாதே தம்பி! ராணித் தேனீ இல்லாம எங்களால் வாழ முடியாது. இது இல்லைன்னா இன்னொரு ராணித் தேனீயை நாங்கதான் கண்டு பிடிச்சுக் கூட்டிட்டு வரணும்."

"என்னது! ராணித் தேனீ இருந்தாலும் கஷ்டம்னு சொல்றீங்க. இல்லைன்னாலும் வாழ முடியாதுன்னு சொல்றீங்க! புரியும் படியாச் சொல்லுங்க" என்று குழப்பத்துடன் கேட்டான் பழனி. இவ்வளவு தூரம் கேட்கறதுனால சொல்றோம். எங்களுக்கும் மனபாரம் குறைஞ்ச மாதிரி இருக்கும்."

"ஒரு தேன் கூட்டுல மூன்று வகையான தேனீக்கள் உண்டு. ராணித் தேனீ, ஆண் தேனீ, வேலைக்காரத் தேனீ. நாங்க



ரெண்டு பேரும் வேலைக்காரத் தேனீக்கள்தான்!"

"ஒரு கூட்டுல இத்தனை வகையா? சரி! ராணித் தேனீ எத்தனை இருக்கும்?"

"ஒரு கூட்டுல ஒரே ஒரு ராணித் தேனீதான் இருக்கும்."

எஸ். சுஜாதா

"பார்க்கிறதுக்கு எல்லாத் தேனீக்களும் ஒரே மாதிரிதானே இருக்கிங்க!"

"ரொம்ப உயரத்துல தேன் கூடு இருக் குறதுனால, உங்களுக்கு நாங்க எல் லோருமே ஒரே மாதிரிதான் தெரிவோம். ராணித் தேனீ பெரியதாகவும், ஆண் தேனீ அதைவிடச் சிறியதாகவும் எங்களைப் போன்ற வேலைக்காரத் தேனீக்கள் ரொம்ப சிறியதாகவும் இருப்போம்!

"ஏன்? ஒரே ஒரு ராணித் தேனீ மட்டும்தான் இருக்கணுமா?"

"இன்னொரு ராணித் தேனீ இருந்தால் முதல் ராணித் தேனீ அந்த இரண்டாவது ராணித் தேனீயை சண்டை போட்டு விரட்டி விடும். அந்த இரண்டாவது ராணித் தேனீ கொஞ்சம் வேலைக்காரத் தேனீக்களை அழைத்துக் கொண்டு தனியாகச் சென்று விடும்."

"எல்லாத் தேனீயும் கொட்டுமா?" என்று கேட்டான் பழனி.

"ஆண் தேனீக்களுக்கு கொடுக்கு இல்லை. ராணித் தேனீ ஒருமுறை கொடுக்கைப் பயன்படுத்தினால் தன் வாழ்க்கையும் முடிந்து போகும் என்பதால் இன்னொரு ராணியை விரட்ட மட் டுமே பயன்படுத்தும். எங்களுக்கும் கொடுக்கு உண்டு. எங்க கூட்டை யாராவது தொந்தரவு செய்தால் உடனே கொடுக்கைப் பயன்படுத்தி விரட்ட ஆரம்பித்து விடுவோம்."

"ஒரு கூட்டோட தலைவி ராணித் தேனீன்னு புரியுது. ஆண் தேனீக்கள் எவ்வளவு இருக்கும்னு சொல்லலையே?" - பழனி.

"ஒரு கூட்டோட அடிப்பகுதியில இருநூறு ஆண் தேனீக்கள் வரை இருக்கும். எங்களை மாதிரி வேலைக்காரத் தேனீக்கள் எவ்வளவு பேர் இருப்போம்னு சொல்லு பார்க் கலாம்?" என்று கேள்வியுடன் நிறுத் தியது தேனீ.

"ஐநூறு பேர் இருப்பீங்களா?"

"இல்லை"

"ஆயிரம்?"

"நீ சொல்றதுக்குள்ளே நேரமாயிடும் போலிருக்கு! ஒரு கூட்டுல முக்கால் பங் குக்கு மேல் வேலைக்காரத் தேனீக்கள்தான் இருப்போம். நாற்பதாயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் வரை கூட ஒரு கூட்டுல இருப்போம்"

"ஒரு சின்ன கூட்டுல இவ்வளவு தேனீக்களா! ராணித் தேனீ மட்டும்தான் முட்டையிடுமா?" - பழனி

"ஆமாம்! வேலைக்காரத் தேனீக்களான எங்கள் உடலிலிருந்து சுரக்கும் மெழுகால் கூட்டைக் கட்டுவோம். ராணித் தேனீ கூட் டில் இருக்கும் ஒவ்வொரு அறைக்குள்ளும் ஒரு முட்டையிடும். மூன்று நாட்களில் புழு வெளியே வந்து கூழ் போன்ற திரவத்தில் மிதக்கும். இந்த திரவம் இளம் தேனீக் களின் தலையிலிருந்து சுரக்கும். இதற்கு 'அரசக் கூழ்'(Royal Jelly) என்று பெயர். இந்தக் கூழ் தனிப்பட்ட ஊட்டச் சத்தைக் கொண்டது. அரசக் கூழை புழு சாப்பிட்டு ஆறு அல்லது ஏழு நாட்களில் முழு வளர்ச்சியடையும்."



''உடனே பறக்க ஆரம்பிச்சிடுமா?'' என்று அவசரப்பட்டான் பழனி.

''இரு தம்பி. நான் இன்னும் முடிக் கலையே! அந்தப் புழுக்களை நாங்கள் மறு படியும் அறையில் வைத்து மெழுகால் அடைத்து விடுவோம். புழுக்கள் அறைக் குள் கூட்டுப்புழுக்களாகி எட்டு, ஒன்பது நாட்களில் தேனீயாக வெளி வருகின்றன.''

''ராணித் தேனீயின் முட்டையிலிருந்து ராணித் தேனீதான் வருமா?'' - பழனி

''இல்லை. ஒரே வித முட்டையிலிருந்து தான் எல்லாத் தேனீக்களும் உருவாகின் றன. ஆனால் புழுக்களுக்கு ஊட்டப்படும் உணவுகளிலிருந்துதான் அவை ராணித் தேனீயாகவோ, வேலைக்காரத் தேனீ யாகவோ மாறுகின்றன. நன்றாக வளர்ச்சி யடையாத பெண் தேனீக்கள்தான் வேலைக்காரத் தேனீக்கள்!

''ராணித் தேனீ ஒரு நாளைக்கு எத்தனை முட்டையிடும்?'' - பழனி.

''சுமார் ஐநூறிலிருந்து ஆயிரம் முட்டைகள் வரை இடும்.''

''அப்படின்னா ராணித் தேனீக்கு முட்டையிடுவது மட்டும்தான் வேலையா?


''ஆமாம்! அதோட வேலை முட்டையிடுவது மட்டும்தான்!''

''அது எத்தனை வருடம் உயிர் வாழும்?''

''மூன்று வருடங்கள் வரை உயிர் வாழும்.''

''என்னக்கா இவ்வளவு நேரம் இந்தத் தம்பிகிட்டே பேசிட்டு நிக்கறே? வா போக லாம்! நமக்கு நிறைய வேலையிருக்கே'' என் றது அருகிலிருந்த இன்னொரு தேனீ.

''என்ன? பாதியிலே விட்டுட்டுப்





– ஆர். விஸ்வநாதன்

போறீங்க. எல்லாத்தையும் சொல்லிட்டு போகலாமே!" என்று கெஞ்சினான் பழனி.

"தம்பி நம்மோட வாழ்க்கையை எவ்வளவு ஆர்வமா கேட்குது! இன்னும் கொஞ்ச நேரத்துல கிளம்பிடலாம்'' என்றது அக்கா தேனீ.

"ஆண் தேனீயைப் பற்றிச் சொல்லுங்களேன்!'' - பழனி.

"ஆண் தேனீக்கள் குடும்பம் நடத்த மட்டுமே பயன்படும். கூட்டில் உள்ள உணவைச் சாப்பிட்டுக் கொண்டு சோம்பேறிகளாக இருக்கும். நாங்க உணவை நிறுத்தினாலோ, குளிர் அதிகமாக இருந்தாலோ இறந்து போய் விடும்."

"பேரிலேயே வேலை இருக்கிறதால நீங்கதான் தேனைச் சேமிக்கிறீங்களா?"

"சரியாச் சொன்னே! எங்களுக்கு வேலை அதிகம். கூட்டில் உள்ள புழுக்களுக்கு அரசக் கூழையும், மகரந்தம், தேனும் கலந்த உணவையும் கலந்து ஊட்டணும். கூட்டை பாதுகாக்கணும். வெளியே சென்று மலர்களிலிருந்து பூந்தேனை உறிஞ்சி, மகரந்தத்துடன் கலந்து தேனாக மாற்றி கூட்டில் சேமித்து வைக்கணும். மெழுகைச் சுரந்து கூட்டை உருவாக்கணும். இப்படி தொடர்ந்து வேலை செய்து கொண்டிருப்பதால் நாற்பது முதல் எழுபது நாட்களில் நாங்கள் இறந்து போய் விடுகிறோம்."

"பாவம்! உங்களைப் போன்ற வேலைக்காரத் தேனீக்கள்'' என்று வருத்தப்பட்டான் பழனி.

"வேலைக்காரத் தேனீக்கள் கூட்டிலிருந்து வெளியே வந்து இருபது நாட்கள் வரை கூட்டைப் பராமரிக்கும் வேலையைச் செய்யணும். அதன் பிறகே உணவு சேகரிக்கும் வேலைக்குப் போகணும்."

"தேன் எப்படி உருவாகுதுன்னு சொல்லுங்களேன்!"

"மலர்களிலுள்ள பூந்தேனை நாங்க உறிஞ்சி எங்களோட தேனிப்பையில் போட்டுக் கொண்டு வருவோம். அங்கு பூந்தேன் சில மாறுதல்கள் அடைகிறது. மீண்டும் அதை மகரந்தத்துடன் கலப்போம். இப்போ தேன் தயாராகி விடும். இந்தத் தேனைதான் கூட்டில் சேமித்து வைப்போம்."

"தம்பி! நாங்க கிளம்பறோம். ரொம்ப

அறிவியல் உண்மைகள்

• குளவி, எறும்பு போன்ற பூச்சிகளின் இனத்தைச் (HYMENOPTERA) சார்ந்தவை தேனீக்கள்.

• சுறுசுறுப்புக்கும் ஒற்றுமைக்கும் இவை உதாரணமாகத் திகழ்பவை.

• ஒரு கூட்டில் ஒரு ராணித் தேனீயே இருக்கும்.

• அரசக் கூழ், (Royal Jelly) மகரந்தப் பொடி, பூந்தேனே முக்கிய உணவு.

• தேனீயின் உடல் தலை, வயிறு, மார்பு என்று மூன்று பிரிவுகளால் ஆனது.

• தேனீக்களுக்கு ஐந்து கண்கள். கண் பார்வை கூர்மையானது. எந்த மலருக்குள் அதிக உணவு இருக்கும் என்பதைப் பார்த்தவுடனே தெரிந்து கொள்ளும் இயல்புடையது.

• முன் பக்கமுள்ள இரண்டு உணர் கொம்புகள் மூக்கு போல செயல்படுகின்றன.

• ஆறு கால்கள் உண்டு. கால்களைச் சுற்றி முடி நிறைந்திருக்கும். இவை மகரந்தம் சேகரிக்க உதவும்.

• மலர்களிலிருந்து மகரந்தத்தை சேமித்துக் கொண்டு வர இரு பின்னங்கால்களிலுள்ள கூடைப் போன்ற உறுப்புகளும், பூந்தேனை உறிஞ்சி கூட்டிற்குக் கொண்டு வர, நீண்ட குழாய் போன்ற வாய் அமைப்பும், மெழுகைச் சுரக்க சுரப்பிகளும் பயன்படுகின்றன.

• கொடுக்கு வயிற்றின் பின்புறத்தில் இருக்கும். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இதைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

• கூடி வாழும் இயல்புடையது. வேறொரு கூட்டுத் தேனீக்களை இவை தங்களுடன் சேர்ப்பதில்லை. வாசனையைக் கொண்டே கண்டுபிடித்து விரட்டி விடும்.

• தேனீ எங்கு சென்றாலும் தன் பழைய இடத்திற்கே திரும்பி வந்து விடும். கூர்மையான அறிவுடையது.

• தேனில் புரோட்டீன், சர்க்கரை, உப்புக்கள், பல வகையான வைட்டமின்கள் உள்ளன.

• தேன் மருந்தாகவும் பயன்படுகிறது.

• தேனீக்களிலிருந்து கிடைக்கும் மெழுகால் மெழுகுவர்த்திகள், சோப்புகள், மருந்துக் களிம்புகள், நீர் புகாத துணிகள் செய்யப் படுகின்றன.

• மெழுகுப் பூச்சி, கட்டெறும்பு, குதண்டு எனும் வண்டு, தேன் தின்னிப் பறவை, கருங்குருவி, பல்லி, ஓணான் ஆகியவை தேனீக்களின் எதிரிகள்.

• காலை நேரத்தில் பூக்கள் அதிகமாக மலர்வதால் தேனீக்கள் காலையில் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும்.

• தேனீக்களைத் தொந்தரவு செய்தால் கடுமையாகக் கொட்டி விடும்.

• இந்தியாவில் மலைத் தேனீ, அடுக்குத் தேனீ, கொம்புத் தேனீ, கொசுத் தேனீ என்று நான்கு வகைகள் உள்ளன.

• தேனீ தேன் சேகரிக்காது போனால் தேன் முழுவதும் யாருக்கும் பயன்படாது வீணாகும்.

• தேனீ மகரந்த சேர்க்கைக்குப் பெரிதும் உதவுகின்றது.

• தேனீயை வீட்டிலேயே வளர்க்கலாம். பெரிய கருவிகள் தேவையில்லை. தொழிலாகச் செய்வதும் எளிது.


நேரமாயிடுச்சு. எங்க வாழ்நாள்ல இப்படி சும்மா உட்கார்ந்து பேசிக்கிட்டு பொழுது போக்கினதே கிடையாது'' என்று கூறி கிளம்பத் தயாராகின தேனீக்கள்.

"இங்க எங்கே கூடு கட்டி இருக்கீங்க?'' என்று கேட்டான் பழனி.

"இந்த தோட்டத்துலதான்! அதோ நாவல் மரத்துல அடர்த்தியா இருக்குற கிளையிலே கிழ்ப்பாகம் கூடு கட்டியிருக்கோம்.''

"உங்க ரெண்டு பேருக்கும் என் நன்றி. நீங்க சொன்ன பிறகுதான் உங்களோட வாழ்க்கையைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டேன். ராணித் தேனீ இல்லாமல் நீங்க வாழ்றதும், நீங்க இல்லாம ராணித் தேனீ வாழ்றதும் கஷ்டம்னு புரிஞ்சுக்கிட்டேன்'' என்று பழனி சொல்லி முடிப்பதற்குள் வேகமாக இறக்கையை அடித்துக் கொண்டு பறந்தன தேனீக்கள்.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. இந்த ஆண்டு சிவனுக்குச் சொந்தம் (4)

5. மாப்பிள்ளையிடம் இருப்பது. தீபாவளி பலகாரத்தில் ஒன்று (4)

6. சூரியக் குடும்பத்தில் இருக்கும் கோள். கிழமைகளில் கடைசி (2)

8. இது இல்லாத தீபாவளியா? பயங்கரச் சத்தம் போடும் (2)

9.தீபாவளி இனிப்பு. திருப்பதியிலும் கிடைக்கும் (3)

11. இந்த வாயு இனிக்குமோ? தேன் இருக்கிறதே! (4)

16. அர்ச்சுனன் இந்த வித்தையில் சிறந்தவன் (2)

18.தீபாவளி மருந்து (4)

வலமிருந்து இடம்

7. வக்கீலுக்குப் படிக்கும் படிப்பு (4)

4. வெய்யில், மழை இரண்டிற்கும் பயன்படும் (2)

13. மூங்கில், கரும்பு இவ்வகைத் தாவரங்களே! (2)

14. நடனமாடுபவர்களின் காலில் மணி ஒலிக்கும் (4)

15. அரிசியில் இருக்கும். பல்லுக்கு நல்லதல்ல (2)

மேலிருந்து கீழ்

3. இந்த ரசமான தொப்பி குழந்தைகளுக்கு பிடித்த இனிப்பு (5)

7: மஹாவிஷ்ணுவின் கைகளில் இருக்கும். தரையிலும் சுற்றும் (9)

8. இனிப்பு செய்யப் பயன்படும். (4)

10. துப்பாக்கிச் சத்தம் (3)

12. முல்லைக்குப் பாரி கொடுத்த பரிசு (2)

கீழிருந்து மேல்

2. தீபாவளி வாணம் பூப்பூவாய் தூவும் (2)

17. புலவர்கள் பாடுவது (2)

19. சொன்னதைச் சொல்லும் பிள்ளை (2)

— ந. ரமா, சென்னை.

விடை: 68 ஆம் பக்கம்

ஜானகி

என்ன செய்யப் போறே?

செந்தில் அப்பாவிடம் நண்பனை அறிமுகம் செய்து வைத்தான்.

“அப்பா! இவன்தான் என் நண்பன். நேற்று ராத்திரி இவனைப் பற்றி உங்ககிட்டே சொன்னேனே...?”

“உன் பெயர் என்னப்பா?” என்று கேட்டார் அப்பா.

“பார்த்திபன்”

“இந்தக் கோடை விடுமுறையில் தையல் கடையிலே வேலை பார்க்க ஆசைப் படுவதா செந்திலிடம் சொன்னாயாம். உங்கப்பாவுக்கு என்ன வேலை?”

“எல்.ஐ.சியிலே வேலை செய்யறார்”

“நீ, வேலை செய்து சம்பாதிக்கணுமா என்ன?”

“... இந்தக் கோடை விடுமுறைக்கு எந்த ஊருக்கும் போகலை. வீட்டிலே சும்மா இருந்தா ‘போர்’ அடிக்கும். அதனாலதான்...”

“தையல் மெஷின்லே உனக்கு அடிக்கத் தெரியுமா?”

“தெரியுமே. எங்க வீட்டிலேயே தையல் மெஷின் இருக்கு. எங்கம்மாவும் தைப்பாங்க. எனக்கும் பழக்கம் உண்டுங்க”

“அப்படியா! நல்லது. நாளையிலிருந்து வா. நான் சொல்ற வேலையை செய்”

“ரொம்ப நன்றி சார்.”



பார்த்திபன் தையல் கடையில் வேலைக்குச் சேர்ந்து கிட்டத்தட்ட நாற்பது நாட்கள் ஓடிவிட்டன. உண்மையான ஈடுபாட்டுடன் உழைத்தான்.

விடிந்தால்



பார்த்திபனுக்குப் பள்ளி திறக்கப் போகிறார்கள். இந்த வருடம் பாஸ் செய்து பத்தாம் வகுப்பிற்கு வந்து விட்டான்.

"இன்றுதான் இந்த விடுமுறையில் வேலை பார்க்கும் கடைசி நாள்" என்று எண்ணியபடி சட்டைக்கு பட்டன் தைத்துக் கொண்டிருந்தான்.

"பார்த்திபா! செந்தில் சொன்னானே என்றுதான் உன்னை உதவிக்கு வைத்துக் கொண்டேன். நான் எதிர்பார்த்ததைவிட நீ நன்றாகவே வேலை செய்தாய். இந்தா நானூத்தி ஐம்பது ரூபாய். வாங்கிக்க" என்றார் செந்திலின் அப்பா.

பணிவோடு பணத்தைப் பெற்றுக் கொண்ட பார்த்திபன், "என்னோட விடுமுறையைப் பயனுள்ள வகையில் கழிக்க உதவியதுக்கு ரொம்பவும் நன்றிங்க" என்றான் உண்மையான நன்றி உணர்ச்சியோடு.

கடையை விட்டு வெளியே வரும் போது அவன் மனத்தில் மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கி வழிந்தது.

"பார்த்திபா! கோடை விடுமுறையிலே வேலைக்குப் போய் கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டாம் என்று சொன்னேன். யோசித்துப் பார்த்த போது நீ செய்தது சரி என்றே தோன்றுகிறது. ஊரைச் சுற்றிக் கொண்டோ இல்லா விட்டால் டி.வி முன்னாடியே உட்கார்ந்து கொண்டோ இருப்பதை விட பயனுள்ள வேலையில் உன் விடுமுறையைக் கழித்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷமே. நீ சம்பாதித்த பணத்தை என்ன செய்யப் போறே?" என்று கேட்டார் பார்த்திபனின் அப்பா.

"ரொம்ப நாளா சைக்கிள் வேணும்னு கேட்டுக் கொண்டிருந்தே இல்லே... கூட பணம் போட்டு நல்ல சைக்கிளா வாங்கிடலாமா?" - கேட்டார் அவன் அம்மா.

பார்த்திபன் தன் தாய் தந்தை இருவரையும் பார்த்தான்.

"நான் சைக்கிள் கேட்டது உண்மை தான். சைக்கிள் ரேஸிலே கலந்து கொண்டு பரிசு வாங்குவது மாதிரி கனவு கண்டது கூட உண்மைதான். ஆனால், இப்ப எனக்கு சைக்கிள் வேண்டாம். அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.

"ஏம்ப்பா, உன் பணத்தை என்ன செய்யப் போறே?"

ஒரு வினாடி தயங்கியபடி "பிப்ரவரி மாதம் எங்க பள்ளிக்கூடத்துக்கு வந்த கல்வி அதிகாரி கல்வியோட அவசியத்தைப் பற்றிப் பேசியது என் மனசைத் தொட்டு விட்டது."

அம்மாவும் அப்பாவும் பதில் பேசாது அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். பார்த்திபன் தொடர்ந்தான்.

"ஒவ்வொரு மாணவனுக்கும் அரசாங்கம் கல்விக்காகப் பணம் செலவழிக்கிறது. ஆனால் ஒரு சிலர் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விடுகின்றனர். படிக்க விருப்பம் இருந்தும் வசதி இல்லாத காரணத்தால் பள்ளிக்கு வருவதில்லை. கீழே விழுந்தவனைத் தூக்கி நிறுத்தி மறுபடியும் நடக்க நாம் உதவி செய்ய வேண்டும். அதேபோல உங்களுடன் படித்தவர்களோ, தெரிந்தவர்களோ - எந்த மாணவர்களாவது படிப்பைப் பாதியில் விட்டிருந்தால் - அவர்

களுக்கு நீங்கள் உதவி செய்ய முன் வாருங்கள். இது புண்ணியமான செயலாகும். இப்படி உதவி செய்தால் நம் நாட்டை விட்டுக் கல்லாமை என்ற இருள் அகன்று விடும். வருங்கால பாரதம் ஒளியோடு திகழும்''ன்னு சொன்னார்.

''நம்ம தெருவிலே கை வண்டியிலே உப்பு கொண்டு வந்து வியாபாரம் செய்கிறாரே அவரோட மகன்-செல்வம்ன்னு பேரு - எங்க பள்ளியில

இந்தப் பணத்தை அவனுக்காகத்தான் செலவழிக்கப் போறேன். இப்படி நான் செய்ய நினைப்பது தப்பா?''

ஒரு வினாடி திகைத்து நின்றனர் அவனோட அம்மாவும் அப்பாவும்.

''பார்த்திபா! ஆண்டவன் உனக்கு ஏழையான மனசைக் கொடுக்கவில்லை. நீ செய்யப் போற உதவியை நினைச்சு உண்மையிலேயே சந்தோஷப்படறேன்; பெருமைப்படறேன்'' என்றார் அம்மா தழுதழுத்தபடி.



ஏழாவது படிச்சான். அரையாண்டு பரீட்சை சமயத்தில் நின்று விட்டான். மேற்கொண்டு படிக்க வசதி இல்லை. ஓரளவு நன்றாகவே படிப்பான். மேற்கொண்டு படிக்க ஆசைப்படுகிறான். செல்வத்தையும் அவன் அப்பாவையும் பார்த்துப் பேசினேன். "மதிய உணவு ஸ்கூல்லே போட்டுடறாங்க... புத்தகமும் கொடுத்துடறாங்க. ஸ்பெஷல் ஃபீஸ் கட்டி, நோட்டு, யூனிபார்ம் எல்லாம் வாங்கித் தரேன்னு சொன்னேன். 'சரின்னு சொல்லி விட்டார்."

"செல்வத்துக்கு உதவி செய்யத்தான் நான் இந்த வேலைக்குப் போனேன்.

''பார்த்திபா! உங்கம்மா சொல்ற மாதிரி ஆண்டவன் உனக்கு நல்ல மனதைத்தான் கொடுத்திருக்கிறார். நீ பத்தாவது வந்ததும் உனக்கு சைக்கிள் வாங்கித் தருவதாக முன்பே தீர்மானித்திருந்தேன். அதனால உனக்கு சைக்கிள் வாங்கித் தரப் போகிறேன். அது மட்டுமல்ல... செல்வம் பத்தாம் வகுப்பு முடிக்கும்வரை அவனுக்கும் முடிந்த உதவி செய்வதா இருக்கேன்'' என்றார் உறுதியான குரலில் அவன் அப்பா.

பார்த்திபனின் உள்ளம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

உலகப் புகழ் வாய்ந்த காலிஃபா ஹாருல் அல்ரஷீத் மிகவும் நல்லவர்; மக்களின் நலனில் அக்கறை உடையவர்; குறிப்பாக, ஏழை எளியோரிடம் அன்பும் இரக்கமும் உடையவர்; நேர்மை தவறாது நியாயம் வழங்குபவர்.

ஒரு நாள், அவருடைய அவை கூடியிருந்தபோது, அழுக்குப் படிந்து... கிழிந்த உடையுடன் ஒருவன் அவரிடம் வந்தான்.

“ஐயா... நான் ஒரு பிச்சைக்காரன். இரண்டு நாட்களாக யாரும் எனக்கு எதுவும் போடவில்லை. கொலைப்பட்டினி... நடக்கக்கூட முடியவில்லை... கண்கள் பஞ்சடைகின்றன... கால்கள் ஒன்றுடன் ஒன்று பின்னுகின்றன.. சாப்பிட நீங்கள்தான் ஏதாவது கொடுத்து என்னைக் காப்பாற்ற வேண்டும், மகாராஜா...” என்று கெஞ்சினான் பிச்சைக்காரன்.

காலிஃபா பிச்சைக்காரனையே சற்று நேரம் உற்று நோக்கினார். பட்டினி கிடந்ததால் தான், அவன் தள்ளாடி தடுமாறுகிறானே தவிர, அவனிடம் வேறு எந்த உடல் பலகீனமும் இல்லை; நல்ல ஆரோக்கியமானவன்தான் என்பதை அவர் புரிந்து கொண்டு விட்டார்.

பணியாள் ஒருவன் ஓடி வந்தான். அவனிடம் “இவரை அழைத்துப் போய், வயிறு நிறைய உணவு அளியுங்கள்...” என்று உத்தரவிட்டார் காலிஃபா.

பணியாள், பிச்சைக்காரனை அழைத்துப் போய் உணவுகளைப் பரிமாறி சாப்பிட வைத்தான். எழுந்திருக்க முடியாத அளவுக்கு வயிறு புடைக்கத் தின்றான் பிச்சைக்காரன். அவனிடமிருந்து நீண்ட ஏப்பம் வெளிப்பட்டது.

‘‘என்ன...? திருப்தியாகச் சாப்பிட்டாயா?’’ என்று கேட்டார் காலிஃபா.

“உண்டேன் பிரபோ... இது போதும்... இனி நான் இன்றைக்குப் பிச்சையெடுக்கப் போக மாட்டேன்...” என்றான் பிச்சைக்காரன்.



அதற்கு காலிஃபா, “இன்றைக்கு மட்டுமல்ல; நான் சொல்வதை நீ கேட்பதானால், இனி நீ என்றென்றுமே பிச்சையெடுக்க வேண்டிய அவசியம் இருக்காது... என்ன சொல்கிறாய்...?” என்று கேட்டார்.

பிச்சைக்காரன் சற்று நேரச் சிந்தனைக்குப் பிறகு சொன்னான். “அப்படியா...? சரி... கேட்டு நடக்கிறேன்..நான் என்ன செய்ய வேண்டும்...? சொல்லுங்கள்...?”

உடனே காலிஃபா, “முதலில் இங்கிருந்து நீ நேராகக் கடைவீதிக்

குப் போ.... உன் கையில் இருக்கும் பிச்சைப் பாத்திரத்தைக் கிடைக்கும் பணத்துக்கு விற்று விடு...'

அதைக் கேட்டுப் பிச்சைக்காரன், "ஐயய்யோ...! பிறகு நான் எதில் பிச்சை எடுப்பது...?" என்றான்.

குறுக்கிட்ட காலிஃபா, "இனி, நீ என்றென்றுமே பிச்சையெடுக்க வேண்டாம் என்பதற்கு நான் உபாயம் கூறப் போகிறேன்... நீ இப்படிக் கேட்கிறாயே...? சரி.... மேலே கேள்... கிடைக்கும் பணத்தைக் கொண்டு நீ ஒரு கோடாரி வாங்கிக் கொண்டு இங்கு வா..." என்றார்.

பிச்சைக்காரன், "சரி மகாராஜா..." என்றவாறு விடை பெற்றுக் கடைத் தெருவுக்குப் போனான். பாத்திரத்தை விற்றான். கிடைத்த பணத்திற்கு ஒரு கோடாரியை வாங்கிக் கொண்டு, மீண்டும் காலிஃபாவிடம் திரும்பி வந்தான்.

உயர்வு தந்தது!



ஜானகி மணாளன்

அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்ற காலிஃபா, "ம்... கோடரி வாங்கி விட்டாயா? சரி... இனி நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? தினசரி காலையில் எழுந்தவுடன், கோடாரியும் கையுமாக அருகிலுள்ள காட்டுக்குப் போ... உச்சிப் பொழுது தாண்டும் வரையில் அங்கு மரங்களை வெட்டு; பிறகு அவற்றைக் கட்டாகக் கட்டி நகரத்துக்குச் சுமந்து வா... அதைக் கடை வீதியில் விற்றுப் பொருள் ஈட்டு... அந்தப் பணம் உனது தினசரி உணவுத் தேவைக்குப் போதும்..." என்றார்.

உடனே பிச்சைக்காரன் அவசரப்பட்டுக் கேட்டான். "அந்த விறகு விற்றுப் போனால் சரி.. ஒரு சமயம் விற்காவிட்டால், எனது உழைப்பு வீண்தானே...?"

அதற்கு காலிஃபா, "அதுபற்றி நீ கவலைப்படாதே... என்றைக்கு உன் விறகு விற்கவில்லையோ, அன்றைக்கு அதை அரண்மனைக்குக் கொண்டு வந்து கொடுத்து விடு... என் கஜானாவிலிருந்து அதற்குரிய விலையை நான் தந்து விடுகிறேன்..." என்று உத்தரவாதம் அளித்தார்.

ஆனால், அதற்கெல்லாம் சந்தர்ப்பம் ஏற்படவே இல்லை.

காலிஃபா சொன்னது போலவே, அந்தப் பிச்சைக்காரன் தினசரி விறகு வெட்டப் போனான். மாலையில் அதைக் கடை வீதியில் விற்றான். அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு வயிறு நிறைய உணவு சாப்பிட்டான். நாளடைவில் அவனிடம் கொஞ்சம் பணம் மிச்சப்படத் தொடங்கியது. அவன் கையில் காசு சேரத் தொடங்கியது.

காசு சேரச் சேர, மேலும் மேலும் உழைக்க வேண்டும்; நிறையப் பொருள் ஈட்ட வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் ஏற்பட்டது. அவன் சலிப்பின்றி உழைக்கத் தொடங்கினான். அந்த உழைப்பு அவனுக்கு உயர்வைத் தந்தது.

எங்கள் ஊரில் நடந்தது!




என்றைக்கெல்லாம்...

வகுப்பில் பாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பள்ளி கையேடு கொண்டு வந்து கொடுத்தார்கள். "எல்லாரும் வாங்கி வச்சக்குங்க, வகுப்பு முடிந்ததும் பார்த்துக்குங்க" என்று கூறினார் ஆசிரியர். இதைக் காதில் வாங்காத நண்பன் வேகமாகப் புரட்டிப் பார்த்தான். "நான் சொன்னது கேட்கலையா? என்றைக்கெல்லாம் லீவுன்னு பார்க்கிறாயா?" என்று கோபமாகக் கேட்டார் ஆசிரியர். உடனே அவன் "சார், என்றெக்கெல்லாம் பள்ளி உண்டு என்பதைத்தான் ஆவலுடன் படித்தேன்" என்றான். ஆசிரியரே சிரிக்க ஆரம்பித்தார்.

நெல்லை, தி.க. வெங்கடசுப்பிரமணியன்.





இப்படியே போகலாமா?

நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்போது அந்த வழியாக வந்த ஒரு சிறுவன் "கொணலூருக்கு இப்படியே போகலாமா?" என்று கையை நீட்டிக் கொண்டே கேட்டான். அதற்கு அவர் "இப்படியும் போகலாம், கையைக் கீழே போட்டுட்டுக் கூடப் போகலாம்" என்றான் நண்பன். அந்தச் சிறுவனும் சிரித்தபடியே சென்றான்.

கீழ்மலை, ரா. கோதண்டராமன்.

எவ்வளவு நேரம்...?

ஆசிரியர் எங்களிடம் "ஒரு கேள்வி, பதில் படிக்க எவ்வளவு நேரம் ஆகும்?" என்று கேட்டார். ஒவ்வொரு மாணவனும் கால் மணி, அரை மணி என்று ஒவ்வொரு




நேரத்தைச் சொன்னார்கள். என் நண்பன் எழுந்து "கேள்வி-பதில்'ன்னு படிக்க எனக்கு ஒரு நொடி போதும்" என்றான். கண்டிப்பான ஆசிரியரே சிரித்து விட்டார்.

வரிக்கல், எம். ராஜதுரை.

ஐநூத்தி ஒன்னா?


நானும் தம்பியும் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது பக்கத்து வீட்டு மாமா "இந்தா 501 சோப்பு வாங்



கிட்டு வா" என்றார் தம்பியிடம். பணத்தை வாங்கிப் பார்த்த தம்பி, என்ன மாமா! ஐந்து ரூபாய்க்கு 501 சோப்பு தருவாங்களா?" என்று வியந்தபடி கேட்டான். கோபம் அடைந்த மாமா, "நான் 501ன்னு சொன்னது சோப்பின் பெயர். எண்ணிக்கை இல்லேடா, போய்ட்டு வா" என்றார்.

மேல்அருங்குளம், பி. தனசேகரன்.

அதாண்டா! இதாண்டா!




"**த**பால்காரர் தவறுதலாக வேறொருவரின் தபாலை எங்கள் வீட்டில் கொடுத்து விட்டார். நான் கடைக்குக் கிளம்பும் போது அந்தத் தபாலைப் பக்கத்துத் தெருவில் உள்ள உரியவரிடம் சேர்த்து விடுமாறு கூறினார் அம்மா. "அருணாச்சலம் யாருங்க? தபால் மாறி வந்துடுச்சு" என்று கேட்டுக் கொண்டிருக்கும்போது "அதாண்டா, இதாண்டா, அருணாச்சலம் நான்தாண்டா" என்று பாடியவாறு ஒரு சிறுவன் ஓடி வந்தான்!

குருசாமிபாளையம், கு.ச. செல்வராஜ்.

மாங்கோப்பா...

பவித்ரா ரொம்ப சுட்டி. மழலையாகப் பேசுவாள். வீட்டுக்கு யார் வந்தாலும் "வாங்கோன்னு" கேட்கணும் என்று சொல்லிக் கொடுத்தேன். அலுவலகத்திலிருந்து அப்பா வீட்டிற்கு வந்ததும் "மாங் கோப்பா" என்று மழலையாகக் கூறினாள். அப்பா புரியாமல் வெளியில் சென்று மாம்பழம் வாங்கி வந்து கொடுத்தார். மறுபடியும் "மாங்கோப்பா" என்றாள். "அதான் கேட்டதும் வாங்கிட்டு வந்து கொடுத்தேனே மறுபடியும் மாங்கோ கேட்டால் என்ன பண்றது?" என்று கேட்டார்




அப்பா. "வாங்கோ என்பதைத்தான் மழலையாக மாங்கோன்னு சொல்கிறாள்" என்பதை விளக்கினேன். மாங்கோவை வாங்கோ என்று மாற்ற ஆறு மாதம் ஆனது வேறு கதை!

இரணியல், சிவசெல்வி.

என்ன நடந்தது?


பள்ளி விட்டு வந்ததும் அன்று நடந்த பாடங்களை தினமும் கேட்பார் அம்மா. அன்றும் "இன்னிக்கு என்னவெல்லாம் நடந்தது?" என்று கேட்டார். என் அண்ணன் குறும்பாக "நான் நடந்தேன், பள்ளியில் படிக்கும் மாணவர்கள் நடந்தாங்க, டீச்சர் நடந்தார், ஏன் நீங்கள்கூட நடந்தீங்க" என்று சிரித்தபடியே கூறினான். எனக்கும் அம்மாவுக்கும் ஒரே சிரிப்பு.

மணக்காடு, ஜனனி.



பச்சரிசி!

பக்கத்து வீட்டுப் பாட்டி "பச்சரிசி ரெண்டு கிலோ வாங்கிட்டு வான்னு பட்டணத்திலிருந்து வந்திருந்த தன் பேரனிடம் பணத்தையும் பையையும் கொடுத்து




அனுப்பினார். சிறிது நேரத்தில் வெறும் பையுடன் திரும்பி வந்தான் அந்தச் சிறுவன். "ஏண்டா அரிசி வாங்கலே?" என்று கேட்டார் பாட்டி. "பச்சரிசி ஒரு கடையிலும் இல்லை" என்றான் பேரன். "காலையிலேதானேடா நான் பார்த்து விட்டு வந்தேன். அதுக்குள்ளவா எல்லா கடையிலும் வித்திடுச்சு!" என்று ஆச்சரியப்பட்டார் பாட்டி. "ஆமாம் பாட்டி! எல்லாக் கடையிலும் வெள்ளைக் கலர்ல தான் அரிசி இருக்கு. பச்சை அரிசியே இல்லை!" என் றான் அருமைப் பேரன். வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு சிரிப்பை அடக்க முடியலை!

துத்திப்பட்டு, சுதாகர்.

என்ன கறி?

எங்கள் ஊரில் பொங்கல் முடிந்ததும் 'கறி நாள்' கொண்டாடுவது வழக்கம். எல்லார் வீட்டிலும் அசைவச் சாப்பாடுதான்! பக்கத்து வீட்டு மாமா தம்பியிடம் "உங்கள் வீட்டில் என்ன கறி" என்று கேட்டார்.




என் குறும்புக்காரத் தம்பி "காய்கறி" என்று சொன்னவுடன் மாமாவின் முகம் ஏமாற்றமடைந்தது.

வரிக்கல் கிராமம், ஆ. குமார்.

கால் சரியாயில்லை!


நாற்காலி மீது அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் ஆசிரியர். அவரிடம் சென்று "சார்! கால் சரியா இல்லை" என்று சொன்னேன். தான் எழுதியதை ஒருமுறை படித்துவிட்டு "கால் சரியாகத்தானே போட்டிருக்கேன்" என்று சொன்னார் ஆசிரியர். "சார் நேற்று எரி



நின்று பல்பு மாட்டும்போது, நாற்காலியோட ஒரு கால் பாதி ஒடிஞ்சு போயிடுச்சு" அதைத்தான் சொன்னேன்" என்றவுடன் ஆசிரியர் பரபரப்புடன் வேகமாக எழுந்தார்.

வெள்ளை கிராமம், எம். ரவிக்குமார்.

குழம்பி குழம்பானது!



நானும் அக்காவும் பேசிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தோம். "அல்ஜிப்ரா கணக்கு ரொம்ப குழம்புது" என்று சொன்னாள் அக்கா. "குழம்புது" என்ற வார்த்தையை அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட பாட்டி, குழம்புதான் கேட்கிறாள் என்று நினைத்து மோர் சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்த அக்காவின் தட்டில் குழம்பை ஊற்றினார். அக்காவுக்கு அழுகையே வந்திடுச்சு! குழம்பு பிடிக்காதுன்னு தான் மோர் சாதம் சாப்பிட ஆரம்பித்திருந்தாள். கடைசியில் சாதத்தை வீணாக்க முடியாமல் அவஸ்தையுடன் சாப்பிடுவதைப் பார்த்த எனக்கு சிரிப்பு வந்துவிட்டது.

ராதா கிருஷ்ணபுரம், எஸ். செல்வி.

அலராம் அடித்தால்...

ஆங்கில ஆசிரியர் அலாரம் என்ற வார்த்தை எவ்வாறு ஏற்பட்டது என்பதை விளக்கினார். "ஆர்மியில் உள்ளவர்கள் எந்த நேரத்திலும் விழித்துக் கொண்டு தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆல் ஆர்ம் என்று சொல்லப்பட்டது" என்றார். பிறகு "அலாரம் அடித்தவுடன் நாம் செய்ய வேண்டியதென்ன" என்று கேட்டார். குறும்புக்கார மாணவன் ஒருவன் எழுந்து, "அலாரம் அடித்தவுடன்



அணைத்து விட்டு தூங்க வேண்டும்" என்றான். வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது.

திருவண்ணாதபுரம்,
தி.சு. வெங்கடசுப்பிரமணியன்.

காந்தி படம்



அந்த எழுத்தாளர் குழந்தைக் கவிஞரால் ஊக்குவிக்கப்பட்டவர். ஒருமுறை அந்த எழுத்தாளர் குஜராத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்றிருந்தார். காந்தியடிகள் வாழ்ந்த அந்த ஆசிரமத்தைத் தரிசித்தபோது, குழந்தைக் கவிஞருக்குக் காந்தியடிகளிடம் இருந்த ஈடுபாடு அவரது நினைவுக்கு வந்தது. அது கவிஞரின் பாட்டிலே காந்தி கதை நூல் வெளியான நேரம். அதனால் கவிஞருக்குப் பரிசளிக்க காந்தியடிகளின் மிகப் பெரிய உருவப் படம் ஒன்றை வாங்கினார். அந்தப் படம் உலகப் புகழ் பெற்ற படம். இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வண்ணப்படம். சி.என். ராவ் என்பவர் வரைந்து பம்பாய் டைம்ஸ் ஆப் இந்தியா பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது. அதை மடக்காமல் சென்னைக்குக் கொண்டு வருவது எளிதாக இருக்கவில்லை. இருப்பினும் எப்படியோ கொண்டு வந்து விட்டார்.

சென்னைக்கு வந்ததும் எழுத்தாளருக்கு ஒரு யோசனைத் தோன்றியது. இன்னும் இருபது நாட்களில் காந்தி ஜெயந்தி வருவதால் படத்தை கண்ணாடிச் சட்டம் போட்டுத் தந்தால், உடனே மாட்டி விட எளிதாக இருக்குமே என்று அவர் எண்ணினார். உடனே சூட்டோடு சூடாக படத்தை ஃபிரேம் போட்டு கவிஞர் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போனார். கையில் தந்து வணங்கினார்.

கவிஞர் கண் கலங்கினர். புனிதமான சபர்மதி ஆசிரமத்திற்குப் போய் என்னை நினைத்துக் கொண்டீர்களே! நினைத்துக் கொண்டதும் அல்லாமல் நான் எந்தப் படத்துக்காக ஏங்கிக் கொண்டிருந்தேனோ, அதையே வாங்கி கண்ணாடிச் சட்டம் போட்டு பரிசாக அளித்திருக்கிறீர்களே!" என்று திரும்பத் திரும்பக் கூறினார்.

அடுத்து வந்த அக்டோபர் 2, அந்த எழுத்தாளர் ஒரு நா[illegible]றப்பு விழாவில் பங்கு கொள்ள இருந்தார். அத[illegible] இரண்டு நாட்களுக்கு முன்னதாக கவிஞர் அவரை டெலிபோனில் அழைத்தார். "காந்தி ஜெயந்தியன்று நீங்கள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து வாங்கி வந்துள்ள காந்தி படத் திறப்பு விழா என்பதால் நீங்கள் அவசியம் கலந்து கொண்டுவிட்டு, பிறகு வேறு நிகழ்ச்சிக்கு போகலாம்" என்றார்.

காந்தி ஜெயந்தி நாள் காலை சுமார் எட்டு மணி. எழுத்தாளர் கவிஞர் வீட்டுக்கு வந்தார். கவிஞர் வீட்டுக் கூடத்தில் ஏராளமான சிறுவர், சிறுமியர், அந்தப் பகுதி பெரியவர்கள் கூடியிருந்தனர். மாலை போட்டு, துண்டு மூடி காந்தி படம். கவிஞர் பேசினார். "இப்பொழுது படத் திறப்புவிழா" என்று எழுத்தாளரை அழைத்தார். "படத் திறப்பாளரை அழைத்து வர வேண்டுமா?" என்று கட்டளையை எதிர்பார்த்து எழுந்தார்.


"படத் திறப்பாளர் ஏற்கனவே வந்து, இங்கேய இருக்கிறார்" என்று சிரித்த கவிஞர், "அது வேறு யாருமில்லை. நீங்களேதான். எங்கள் வீட்டில் இதைத் திறந்து வைக்க உள்ளன்புடைய நீங்களே முற்றிலும் தகுதி பெற்றவர்!" என்று நாற்காலியில் ஏற்றி விட்டார். திகைப்பு மாறாமல் துண்டை விலக்கி படத் திறப்பைச் செய்தார் அந்த எழுத்தாளர்.

குழந்தைக் கவிஞரின் இல்லத்தில் மிகப் பெரிய கூடத்தை அலங்கரித்து வரும் காந்தி படம், மனித நேயத்தை மதிக்கும் கவிஞரின் ஒப்பற்ற பணிவான சிறப்பை இன்றும்கூட மௌனமாக உணர்த்திக் கொண்டிருக்கிறது.


— ரே


தவளையும் தங்கப் பந்தும்!
அமைப்பு: எஸ். சுஜாதா
படம்: சசி
மச்சேந்திரன் அரசவையில் ஒருநாள் -
அரசே! நாடு முழுவதும் நல்ல மழை பெய்துள்ளது!
அப்ப இந்த ஆண்டு விளைச்சலுக்கு குறை இருக்காது!
ஆமாம்! மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.
நாடு முழுக்க சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன்!
மிகவும் நல்லது அரசே!
நான் திரும்பும் வரை பொறுப்பு தங்களுக்கே!
கவலை இன்றிப் போய் வாருங்கள்.
அன்றிரவு—
அப்பா! சுற்றுப் பயணம் செல்கிறீர்களாமே!
ஆமாம் கனகவல்லி!



காட்டாறு கரை முழு வதும் பூக்களால் நிரம்பி யுள்ளதாம்!
ஆமாம்மா. நல்ல மழை பெய் திருக்கே?
நானும் என் தோழிகளும் சில நாட்கள் அங்கு தங்கி விட்டு வரு கிறோமே?
தனியாக எதற்கம்மா?
நீங்களும் அப்பாவும் சென்றதும் தனியாக இருக் கணுமே? அதற்கு அங்கு செல்லலாமே!
சரி, கவனமாகச் சென்று வா!
மறுநாள் தோழிகளுடன் சென்றாள் கனகவல்லி.
தங்கப் பந்தால் விளையாடினார்கள்.
அப்போது -
ஐயோ! பந்து ஆற்றில் விழுந்து விட்டதே?



எப்படியாவது பந்தை எடுத்தாகணும்.
என்ன செய்வது?
நீர் வேகமா ஓடுது. ஆழமான ஆற்றில் இறங்க தயக்கமாயிருக்கு.
வேறு பந்து வாங்கிக்கலாம்.
இதன் அருமை தெரியுமா?
அப்படி என்ன இருக்கு இதுல?
இது என் பாட்டியின் பரிசு. சிறு வயது முதல் என்னிடம் இருக்கு!
அருமை புரியுது. ஆனால் அருகில் யாரும் இல்லையே?
இருவரும் போய் காவலர்களை அழைத்து வாருங்கள்!
இருவரும் சென்றனர்.
அழாதே கனகவல்லி!



சுற்றும் முற்றும் பார்த்தாள்.
குரல் கேட்டதே! யாரையும் காணோமே?
இதோ உன் எதிரில்!
ஒன்றும் தெரிய வில்லையே!
நல்லா பார்!
தவளைதான் இருக்கு!
தவளையேதான். தங்கப்பந்து தானே வேணும்!
ஆமாம்! உன்னால் முடியுமா?
கண்டிப்பாக முடியும். பதிலுக்கு என்ன தருவாய்?
எதைக் கேட்டாலும் தரேன்!
ஏமாத்த மாட்டாயே!
கண்டிப்பா மாட்டேன்! கேள்!




ஒரே ஒரு நாள் மட்டும் தங்கத்தட்டில் அரச உணவு உண்டு பட்டு மெத்தையில் படுக்கணும்!
என்ன துணிச்சல்!
வேறு வழியில்லே. சரி! உடனே எடுத்து வா.
ஒரே ஒரு நாள் மட்டும்தானே கேட்டேன்?
இதோ தங்கப் பந்தோடு வரேன்.
தங்கப் பந்துடன் கரை ஏறியது.
தவளையே! மனமார்ந்த நன்றி!
நான் கேட்டது...?
அற்பத் தவளைக்கு தங்கத் தட்டில் உணவா? பட்டு மெத்தையா?
ஒப்புக் கொண்டதால்தானே பந்தை எடுத்துத் தந்தேன்.
உன் ஆசை ஒரு நாளும் நிறைவேறாது!
வாக்குத் தவறாத மன்னரின் மகளா நீ?


அதோ தோழிகள் காவலருடன் வருகிறார்கள். உயிர் மேல் ஆசையிருந் தால் ஓடிப் போ.
பந்து எப்படிக் கிடைத்தது?
ஒரு ஆள் எடுத்துக் கொடுத்தான்! போகலாம் வாருங்கள்.
வருடங்கள் சென்றன. அரசவையில் ஒருநாள்–
ஆராய்ச்சி மணியின் சத்தம் கேட்கிறதே!
மன்னர் விரைந்தார்.
யாருமே இல்லை. அப்போ மணி எப்படி ஒலித்தது?
வியப்பாகத்தான் உள்ளது.



மன்னா நான்தான் மணியடித்தேன்!
தவளையா! ஆராய்ச்சி மணி அடிக்கும்படி உனக் கென்ன குறை?
நீங்கள் வாக்குத் தவறாத நேர்மையானவர்.
விஷயத்துக்கு வா தவளையே!
ஒரு பெண் என்னை ஏமாற்றி விட்டாள்.
விளக்கமாகச் சொல்!
கேட்டறிந்தார் மன்னர்.
வாக்குத் தவறியது குற்றம்தான்! அந்தப் பெண் யார்? தக்க தண்டனை அளிக்கிறேன்.
யாராக இருந்தாலுமா?
ஆமாம்! என்ன சந்தேகம் உனக்கு?
ராஜகுமாரி கனகவல்லிதான்!
என் மகளா?



இளவரசியை உடனே அழைத்து வாருங்கள்.
தயக்கத்துடன் வந்தாள் கனகவல்லி.
எதற்காக அழைத்தீர்கள் அப்பா?
தவளை சொல்வது உண்மையா?
நான் எந்தத் தவளையையும் பார்த்ததே இல்லை; ஒரே புளுகு!
தவளையே, ஆதாரம் இருக்கா?
இருக்கு. இந்தத் துணிக்குள் ராஜகுமாரியின் முத்து மாலையிலிருந்து விழுந்த ஒரு முத்து இருக்கு.




உண்மையை அறிந்தார் மன்னர் -
ஐயோ! அகப்பட்டுக் கொண்டேனே!
என் மகளாக இருந்தும் கொடுத்த வாக்கை மீறி விட்டாயே!
மன்னித்து விடுங்கள். ஒரு தவளைக் குப் போய்...
யாராக இருந்தாலும் தந்த வாக்கைத் தவறுவது குற்றம்.
தண்டனை வேண்டாம்பா.
பாதிக்கப்பட்ட தவளையே தண்டனை வழங்கட்டும்.
அப்படி யானால்?
அரசே! தண்டனை எதுவும் வேண்டாம்.
என் விருப்பப்படி ஒருநாள் அரண்மனையில் தங்கினாலே போதும்!
கனகவல்லி. தவளையாரை அழைத்துச் சென்று உபசரிப் பது உன் பொறுப்பு.
சரிப்பா!



கோபமாகச் சென்றாள் கனகவல்லி.
விருந்தில் -
தங்கத் தட்டு கேட்குதா உனக்கு?
அருமை! இம்மாதிரி அறுசுவை உணவு சாப் பிட்டு எத்தனை கால மாகி விட்டது?
இளவரசி, நீ சாப்பிடு. நான் ஓய் வெடுக்கிறேன்.
எனக்கு சாப்பிடத் தெரியும்? உன் வேலையைப் பார்.
இளவரசி வருவதற்குள் தவளை பட்டு மெத்தையில் படுத்தது.
அதைக் கண்ட இளவரசி தன்னை மறந்து -
ஆற்றுத் தவளையே! என்ன ஆணவம் உனக்கு? ச்சீ போ!
இளவரசி கையால் தட்டி விட்டாள்.


கீழே விழுந்த தவளை அழகிய இளவரசனாகியது.
உருவம் மாறி விட்டதே! எப்படி?
ஏன் மலைத்து விட்டாய்?
நீங்கள் யார்?
உன் தந்தையின் நண்பரான அண்டை நாட்டு அரச குமாரன் வீரேந்திரன்!
உங்களுக்கு ஏன் இந்த நிலை?
ஒருநாள் காட்டுக்குள் குதிரையில் வேக மாகச் சென்ற போது -
ஐயா! தாங்கள்?
திமிர் பிடித்த மனிதனே நில்.



தவத்தை கலைத்து விட்டு கேள்வி வேறு கேட்கிறாயா?
நான் எவ்விதத் துன்பமும் தரவில்லையே!
உன் குதிரையின் காலடிச் சத்தத்தால் என் தவம் கலைந்தது.
மன்னியுங்கள். தாங்கள் இருப்பதை நான் கவனிக்கவில்லை.
தாங்கள் பெரிய மகான். சாபமிடாதீர்கள்!
மன்னிப்புக் கிடையாது. இனி நீ தவளையாக மாறுவாய்!
விமோசனமே கிடையாதா?
இளவரசி யாராவது உன்னைத் தொட்டால் மீண்டும் மனிதனாவாய்.
சாபத்திலிருந்து விடுபடத்தான் இப்படி கஷ்டப்படுத்தினேன்.
மரியாதை இன்றிப் பேசியதுக்கு மன்னிப்பு உண்டா இளவரசரே?
கண்டிப்பாக



அங்கு வந்த மன்னர் -
வீரேந்திரா விஷயம் அறிந்தேன்! மகிழ்ச்சி!
என் மகளுக்கு தண் டனை போதுமா?
எல்லாம் நீதி வழுவாத தங்களால்தான். தவளை தானே என்று அற்பமாக எண்ணாமல், மக ளென்றும் பாராமல் தண்டனை தர யாருக்கு மனம் வரும்?
நீங்கள் இருவரும் சம்மதித்தால் இன்னுமொரு தண்டனை தருகிறேன்!
இன்னுமொரு தண்டனையா?
என்னை உங் கள் மருமகனாக ஏற்க வேண் டும்.
எங்களுக்குச் சம் மதம். கனகவல்லி உன் விருப்பம் என்ன?
தங்கள் விருப்பமே என் விருப்பம் அப்பா.
வீரேந்திரன் கனகவல்லி திருமணம் நடைபெற்றது.
கருத்து : கிரிம் பிரதர்ஸ்

தாகம்!

பண்டிதர் ஒருவர் ஊருக்கு செல்வதற்காக ரயில் நிலையத்துக்கு வந்தார்.

ஏற்கனவே அவர் டிக்கெட்டை முன் பதிவு செய்து விட்டதால் தனது டிக்கெட்டுக்குரிய பெட்டியைத் தேடிப் பிடித்து தனது இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டார்.

அவர் பண்டிதர் என்பதால் எந்தச் சொல்வானாலும் அதனைப் பிரித்துப் பொருள் கண்டு அதற்கொரு அர்த்தம் சொல்லுவார்.



ரயில் பெட்டியில் அமர்ந்த அவருக்கு திடீரென தாகம் ஏற்பட்டது. கீழே இறங்கித் தண்ணீர் குடித்து விட்டு வரலாம் என்று எழுந்தார். அதற்குள் ரயில் புறப்படத் துவங்கியது. சரி, அடுத்த ஸ்டேஷனில் தண்ணீர் குடிக்கலாம் என்று உட்கார்ந்து விட்டார்.

குபுகுபுவென ஓடத் துவங்கிய ரயில் அடுத்த ஸ்டேஷனில் நின்றது. ஸ்டேஷனின் பெயர்ப் பலகை கண்ணில் தென்பட்டது. 'தாழையூத்து' என்று எழுதியிருந்தது. உடனே அவர் தாழையூத்து என்றால் தாழ்வான ஊற்று, அப்படியென்றால் இதில் எங்கே தண்ணீர் இருக்கும்? என்று நினைத்தார். அடுத்த ஸ்டேஷனில் பார்ப்போம் என்று பேசாமல் உட்கார்ந்து விட்டார்.

ரயில் புறப்பட்டது. பண்டிதருக்கோ தாகம் கூடியது. அடுத்த ஸ்டேஷன் எப்போது வரும் என்று காத்துக் கொண்டிருந்தார். அடுத்த ஸ்டேஷனும் வந்தது. பெயரைப் பார்த்தார். நாரைக் கிணறு என்று எழுதியிருந்ததை வாசித்தார். நாரைக் கிணறு, நாலுங்கிணறு என்பது மருவிதான் நாரைக் கிணறு ஆகியிருக்கும், இங்கும் தண்ணீர் அருந்த வேண்டாம் என்று பேசாமல் அமர்ந்து கொண்டார்.

ரயில் கடகடவெனச் சென்றது. பண்டிதருக்கு நாவறட்சி ஏற்பட்டது. அடுத்த ஸ்டேஷனில் கண்டிப்பாய் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார். அடுத்த ஸ்டேஷனில் ரயில் நின்றது.

ஊரின் பெயரைப் பார்த்தார். நரிக்குடி என்றிருந்தது. நரி குடியிருக்கும் ஊரிலா நான் தண்ணீர் குடிப்பது? என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே ரயில் கிளம்பியது.

அடுத்த ஸ்டேஷன் பெயரைப் பார்த்ததும் அவருக்கு தலையில் இடி விழுந்து போல இருந்தது. அந்த ஊரின் பெயரோ 'பூதலூர்'.

இப்படியே அவர் தண்ணீர் குடிக்க முடியாமல் பயணம் செய்து கொண்டிருந்தார்!

— பாளை பசும்பொன்

வாண வேடிக்கை!


வானத்தில் வித்தை காட்டும் வாண வேடிக்கைப் பார்த்திருக்கிறோம். இது எப்போது தோன்றியது தெரியுமா? வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதர்கள் இதனைப் பயன்படுத்தினார்களாம்! அவர்கள் கரியை நெருப்பில் போட்டு வெப்பப்படுத்தி, அத்துடன் பொட்டாசியம் நைட்ரேட்டையும் போட்டு, அதிலிருந்து உண்டாகும் நெருப்பின் வர்ணஜாலங்களைக் கண்டு ரசித்தனர்.

'வாண வேடிக்கை' பட்டாசுகளின் மூலப் பொருள் பொட்டாசியம் நைட்ரேட்தான். இது எரிய ஆக்ஸிஜனை எடுத்துக் கொள்ளாது; ஆனால் ஆக்ஸிஜனை தன்னிடமிருந்து கொடுப்பதால் ஒளி விட்டு, சத்தத்துடன் எரிகிறது. இவை 'படார்' என்ற சத்தத்துடன் வெடிக்கவும், வெடிக்கும் போது குபுகுபுவென வெள்ளைப் புகை வரவும், வண்ண வண்ண தீப் பொறிகளை வானத்தில் வலம் வரச் செய்யவும், பொட்டாசியம் குளோரேட், பொட்டாசியம் பர்குளோரேட், கந்தகம், வெடி மருந்து, அலுமினியத்துகள் மற்றும் பல வேதிப் பொருட்கள் பொட்டாசியம் நைட் ரேட்டுடன் கலக்கப்பட்டன. அது மட்டுமல்ல, விசிலடிப்பது போன்ற ஒலிவரவும் கூட சில வேதிப் பொருட்கள் இத்துடன் இணைக்கப் படுகின்றன.

வாண வேடிக்கை பிறப்பெடுத்தது சீனா மற்றும் இந்தியா போன்ற கிழை நாடுகளில் தான். நாம் தீபாவளியின் போது வாங்கும் சீனா வெடி என்பது சீனி வெடி என்று மருவி விட்டது. அதற்கு பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு மத்தாப்பு மற்றும் வெடிகள் பரவின. சீனர்கள் போர்களில் கூட 'தீ தொழில் நுட்பம்' மிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தினர் என்று தெரிய வருகிறது. சீனர்கள் விழாக் காலங்களில், ஆகாயத்தில் 'வாண வேடிக்கை' மூலம் அருமையான வர்ண ஜாலங்களை பலரும் வியக்கும் வண்ணம் செய்து காண்பித்தனர். ஆனால் வெடி மருந்து கண்டு பிடிக்கப் பட்டது பதினான்காம் நூற்றாண்டில்தான். அதன் பின்னரே கந்தகம் மற்றும் கரிப் பொடியுடன், இவற்றை வெடிக்கச் செய்ய வெடி மருந்தும் கலக்கப்பட்டது.

19-ம் நூற்றாண்டில் கிளாடு லூயிஸ் பெர்தோல்லட் என்பவர், வாண வேடிக்கையின் போது கலர், கலரான தீப்பொறிகளைச் சிதறச் செய்ய பொட்டாசியம் குளோரேட் என்ற வேதிப் பொருளைக் கலந்தார். இவ்வகை வாண வேடிக்கைகள் பொழுது போக்கு விழாக்களில் பயன்படுத்தப் பட்டன.


தற்போது எல்லா நாடுகளிலும் மக்கள் தங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தைத் தெரிவிக்கும் விழாக்களிலும், சுதந்தரதின கொண்டாட்டங்களிலும், பட்டாசு, வாண வேடிக்கை விட்டு 'வான விளையாட்டு' நடத்துவது என்பது வாடிக்கையாகி விட்டது. மேலும் வானில் வண்ணம் கொட்டி, அந்தரத்தில் உருவங்களை உருவாக்கும் 'லேசரின் கைத்திறன்' வேறு இப்போது பிறப்பெடுத்து விட்டது.



— ஸ்வாதி

அட்டையில் : திவ்யா கண்ணன்

வண்ணப்படம் : ஸ்ரீஹரி



நேரு மாமா

நேரு மாமா நல்லவர்
நேர்மை உள்ளம் கொண்டவர்
கனிவு மிக்க பேச்சினால்
காலம் கடந்து நிற்பவர்.

நாட்டின் விடுதலை வேண்டியே
நாளும் சிறையில் இருந்தவர்
நாட்டை காந்தி வழியிலே
நடத்தி மேன்மை அடைந்தவர்.

– வரிக்கல், எம். ராஜதுரை.

குயிலே!

இனிய குரல் குயிலே
இறங்கி வாயேன் கீழே!


புதிய ராகம் இசைத்து;
போற்றிப் பாடு தமிழை

உனது ராகம் இனிமையே
ஊரே மயங்கிக் கேட்டிடும்

இந்த அழைப்பை ஏற்றிடு
இனிய ராகம் இசைத்திடு!

– தோப்புத்துறை, ந. ஆனந்தராஜ்.





கன்றுக்குட்டி

அம்மா என்றே கத்திடுமே!
அன்புடன் பாலைக் குடித்திடுமே!

சும்மா அருகில் சென்றாலே
சுற்றிச் சுற்றி வந்திடுமே!

தவிடு புல்லைத் தின்றபின்னே
துள்ளிக் குதித்துப் படுத்திடுமே!

பயம் ஏதும் இல்லாமல்
பக்கம் வந்து நக்கிடுமே!

– பெண்ணாட்டகரம், பென்னை சி. முருகன்.

பலூன்!

காற்று நிறைந்த பலூன் பார்
காணும் போது மகிழ்ச்சி பார்!

நீல நிற பலூன் பார்
நீண்ட தூரம் பறக்கும் பார்!

முந்திப் பறந்த பலூன் பார்
முள்ளில் பட்டு 'படீர்' பார்!

'படீர்' என்ற சத்தத்தால்
பதறும் என்னைப் பார்! பார்!

— சேலம், எம். கே.
வேங்கவேல்.



கூடிடுவோம்!


பாரில்லுள்ளோர் கூடிடுவோம்
இணைந்தே கீதம் பாடிடுவோம்!

வேற்றுமை என்பதை அழித்திடுவோம்
ஒற்றுமை உணர்வை
வளர்த்திடுவோம்!

அடிமைத் தளையை அறுத்திடுவோம்
அன்புப் பிணைப்பை
வளர்த்திடுவோம்

தன்நல உணர்வை அழித்திடுவோம்
ஒன்றே குலமென சாற்றிடுவோம்!

— தாம்பரம், எஸ். கல்யாணி.



கடிகாரம்

"எங்கள் வீட்டு கடிகாரம்
எழிலாய் நிற்கும் கடிகாரம்!
பள்ளி செல்லும் நேரத்தை
'பார்' எனக் காட்டும் கடிகாரம்

மணிக்கு ஒருமுறை ஓசையிட்டு
மணியை உணர்த்தும் கடிகாரம்!
காலத்தின் பெருமை
அறிந்தோர்க்கு
கைவிளக் காகும் கடிகாரம்!

— மோகனூர், எஸ். சரவணன்.





முன்னும் பின்னும்

யானைவரும் பின்னே
மணியோசை வரும் முன்னே.
தேர்வு வரும் பின்னே
படிக்க வேண்டும் முன்னே

அன்னை சொல்லும் முன்னே
படிக்க வேண்டும் கண்ணே.
நடக்கும் பாதை சிறந்தால்
நாடே வரும் பின்னே!

– சென்னை,
மு. தா. பிரபாகரன்.



ஓசை

கோவிலில் கேட்பது மணி ஓசை
கடலில் கேட்பது அலை ஓசை
வானில் கேட்பது இடி ஓசை
வாழ்க்கை சிறந்திட அருளோசை!

– வரிக்கல், அ. லோகநாதன்.

செஞ்சிக்கோட்டை


கோட்டை நல்ல கோட்டை பார்!
கோட்டை செஞ்சிக் கோட்டை பார்!
நாட்டை ஆண்ட மன்னர்கள்
நன்கு அமைத்த கோட்டை பார்

மலைகள் உள்ள கோட்டை பார்!
மதில்கள் நீண்ட கோட்டை பார்!
இலைகள் அடர்ந்த காட்டிலே
இருக்கும் செஞ்சிக் கோட்டை பார்!

குகைகள் உள்ள கோட்டை பார்
குதிரை கட்டும் லாயம் பார்!
பகைவர் வந்த போதிலே
பதுங்கிச் சென்ற சுரங்கம் பார்!

கசிந்து ஒழுகும் தேனைப் பார்
கற்பாறை மடுவில் சுனையைப் பார்!
தேசிங்கு ராஜன் கோட்டை பார்!
தினமும் மக்கள் கூட்டம் பார்!

– திருவண்ணாமலை,
கே. தெய்வசிகாமணி.




ஒன்பதாம் வீடு!

3. பாராட்ட அழைத்தார்!

சித்ராவின் அப்பா பசுபதி அப்படி நடந்து கொள்வார் என்பதை அம்புஜம் டீச்சரோ இல்லை பெரிய மேடமோ சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவ்வளவு ஏன், சித்ராவே கூடத் தன்னுடைய அப்பா அப்படி நடந்து கொள்வார் என்பதைத் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை. எல்லோருமே செயலற்றுப் போய் நின்றிருந்தார்கள்.

தங்கள் குழந்தையிடம் பொதிந்து கிடக்கும் தனித்திறமையை வகுப்பு ஆசிரியரோ அல்லது தலைமை ஆசிரியரோ பாராட்டினால் அதைக் கேட்டு அளவுக்கு மீறிய பெருமையால் பூரித்துப் போகும் பெற்றோர்களையே கண்டிருந்த அம்புஜம் டீச்சருக்கும், பெரிய மேடத்துக்கும் பசுபதியின் மாறுபட்ட செயல், அதிர்ச்சியாக இருந்தது. என்ன சொல்லி, எப்படி அவரைத் தேற்றுவது, அந்த இறுக்கமான சூழ்நிலையை எப்படி மாற்றுவது என்பது

வெ. நல்லதம்பி



ஒருவருக்கும் தெரியவில்லை. நிமிடங்கள் ஓடின. கடைசியில், அந்த இறுக்கமான சூழ்நிலையை உருவாக்கிய பசுபதியே, அதைக் கலைக்க முன்வந்தார்.

"என்னடா பெற்ற பெண்ணின் தனித் திறமையைப் பாராட்டுகிறோமே, அதைக் கேட்டு மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளாமல் காட்டுமிராண்டி போல், அந்தத் திறமையை ஊக்குவித்து வளர்க்காதீர்கள் என்று இப்படி ஒரு தந்தை கேட்கிறாரே என்று உங்களுக்கெல்லாம் ஒரே திகைப்பாக இருக்கிறது அல்லவா? அதற்குக் காரணமும் இருக்கிறது..." என்று நிறுத்தினார் பசுபதி.

எல்லோரும் அவர் மேற்கொண்டு கூறப் போவதைக் கேட்க ஆவலாகக் காத்திருந்தனர்.

"நான் மிகவும் கஷ்டப்பட்டு முன்னுக்கு வரத் துடிப்பவன். மாதத்தில் வெளியூரில் சுற்றும் நாட்களே அதிகம். சித்ரா எனக்கு ஒரே செல்லப் பெண். சித்ராவுக்கு இருந்த ஓவியத் திறமையை அவளுக்கு மூன்று வயதாகும்போதே கவனித்து விட்டேன். பென்சிலையும் கரிக்கட்டியையும் வைத்துக் கொண்டு வீட்டுச் சுவர் முழுக்கக் கிறுக்கித் தள்ளுவாள். என் மகள் பெரிய டாக்டராகவோ பொறியாளராகவோ வர வேண்டும் என்று நானும் என் மனைவியும் கனவு கண்டு வருகிறோம். அதனால் அவளுடைய ஓவிய ஆர்வத்தை நாங்கள் வளர்க்க முயலவில்லை. படம் வரையமாட்டாயே என்று அடித்து நகக்கவே பார்த்தோம். அடிவாங்கும்போது வலிதாங்காது "இனிமே வரைய மாட்டேன்" என்று கூறுவாள். ஆனால், வலி மறைந்ததும்



மறுபடி ஆரம்பித்து விடுவாள். இவளை வைத்துக் கொண்டு நாங்கள் பட்ட துன்பம் கொஞ்சநஞ்சம் அல்ல."

அந்த இடத்தில் அந்த நேரத்தில் பலருக்கு முன்பாக தான் அப்படிப் பேசுவது தவறாக இருக்குமோ என்ற சந்தேகம் சித்ராவின் தந்தை பசுபதிக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

"மேடம், நான் இப்படிப் பேசியதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். என் சித்ரா பெரிய படிப்புப் படித்து டாக்டராகவோ, பொறியாளராகவோ வர வேண்டும் என்று நானும் என் மனைவியும் கனவு கண்டுகொண்டிருக்கிறோம். அதைச் சிதைந்து போகும்படி அவளை ஓர் ஓவியராக ஊக்கி விடாதீர்கள். என் வேண்டுகோள் இதுதான்" என்று கிளம்பத் தயாரானார் பசுபதி.

"இருங்கள் பசுபதி. உங்கள் கனவு நிறைவேற நாங்கள் எந்தவிதத்திலும் இடையூறாக இருக்கவே மாட்டோம். கணக்குப் பிள்ளை வேலைக்கும், குமாஸ்தா வேலைக்கும் தனியான திறமைகள் தேவை இல்லை. ஆனால், ஒரு கலைஞன் உருவாக தனித்திறமை தேவை. எல்லோருக்கும் அது எளிதில் கிடைத்து விடாது. ஒரு லட்சம் மக்களில் ஒருவருக்கு மட்டுமே அப்படிப்பட்ட திறமையை இறைவன் வைத்துப் படைக்கிறான் என்று கதை கூட உண்டு. கலை ஆர்வமும், கலைத் திறமையும் இறைவன் அபூர்வமாக அருளும் நன்கொடை. இது எளிதில் கிடைக்காத பேறு. இதையா நீங்கள் வேண்டாம் என்கிறீர்கள்!" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கேட்டார் பெரிய மேடம் கோமதி.

"என் நிலையில் நீங்கள் இருந்தால், கண்டிப்பாக என் கருத்தை ஏற்பீர்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன் நெல்லுக்காரத் தெருவில் குடியிருந்தோம். வீடு வசதியானது. வாடகையும் குறைவுதான். அப்போ சித்ராவுக்கு ஆறு வயதிருக்கும். பள்ளிக்கூடத்தில் டிராயிங் போட வாங்கித் தந்திருந்த வண்ணப் பென்சில்களை வைத்து வீட்டுச் சுவரெங்கும் மூன்று இதழ், நான்கு இதழ் மலர் இலைகளையும், பூனை, நாய், குருவி உருவங்களையும் வரைந்து தள்ளியிருந்தாள். அவள்தான் செய்தாளா என்று நாங்கள் முதலில் பிரமித்துப் போனோம். வீட்டுக்கு வந்தவர்களெல்லாம் கூடத் திகைத்துப் போய்ப் பாராட்டினார்கள். ஆனால் என்ன நடந்தது தெரியுமா? அடுத்த மாத வாடகையை வாங்க வந்த வீட்டுக்காரர், சித்ராவின் கைவண்ணத்தைப் பார்த்தார். "உங்கள் பெண், சுவரையெல்லாம் கிறுக்கிக் கிறுக்கிப் பாழாக்குகிறாள். உடனே வீட்டைக் காலி பண்ணுங்கள்" என்று கூறிவிட்டார். உண்மையில் வெள்ளையடிக்காத அந்த அழுக்குச் சுவருக்கு என் சித்ராவின் கைவண்ணம்

அழகுக் கவசமாகவே இருந்தது. இருந்தாலும் அதை நான் சொல்ல முடியுமா? வேறு வீடு எளிதாகக் கிடைக்கவில்லை. கடைசியில் ஒருவழியாக ஐம்பது ரூபாய் அதிக வாடகையில் செக்குமண்டித் தெருவில் ஓர் இடம்பிடித்தேன்."

காப்பியும் பிஸ்கட்டும் வந்தன. அவைகளைத் தந்து பசுபதியை உபசரித்தார் பெரிய மேடம்.

''எத்தனை பெரிய கலாரசிகராக இருந்தாலும் வெள்ளையடித்த சுவரில் குடித்தனக்காரக் குழந்தைகள் எழுதுவதை எந்த வீட்டுக்காரரும் விரும்ப மாட்டார் சார்" என்றார் அம்புஜம் டீச்சர்.

''நானும் ஒப்புக் கொள்ளுகிறேன் மேடம். அதற்காக வீட்டையேவா காலி பண்ணும்படி வற்புறுத்துவது? செக்குமண்டித் தெருவிலும் கூட எனக்கு இதே கதி. ரயில் நிலையத் தெருவிலும், பெரிய ஆஸ்பத்திரித் தெருவிலும் கூட இப்படியே தான்! சுண்ணாம்படிக்கும் செலவைக் கூட நானே ஏற்கிறேன் என்று கூடச் சொல்லிப் பார்த்தேன். வீட்டுக்காரர் கேட்கவில்லை. காலி பண்ணியாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தி, தொந்தரவு தந்தார்கள். நானும், மாதத்தில் பாதி நாளுக்கு மேல் வெளியூர் போகிறவன். என் மனைவியால் என்ன பண்ண முடியும்? இப்போ நான் இருக்கும் அம்மன் கோவில் தெரு வீடு, ஆறாவது வீடு. என்னால், சித்ராவின் ஓவியத் திறமையை எப்படி ஊக்குவிக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள்?''

பசுபதி மீண்டும் தொடர்ந்தார்.

"சலங்கையும், மத்தளமும், வாத்தியக் கருவியும் வீடு தாங்காது என்பார்கள். நடனக் கலைஞர்களுக்கும், மிருதங்கக் கலைஞர்களுக்கும், கடம் வாசிக்கும் கலைஞர்களுக்கும் யாரும் குடியிருக்க எளிதில் வீடு தர மாட்டார்களாம். இந்தப் பட்டியலில் ஓவியத் திறமையுள்ள குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். இனிமேல் வீடு மாற்ற எனக்குச் சக்தியும் இல்லை; புதுவீடு தேடத் தெம்பும் இல்லை. அதோடு நாங்கள் இவளுடைய வருங்காலத்தைப் பற்றிக் கனவு காண்பது நடக்காமல் போக இந்த ஓவிய ஆர்வமும் ஒரு காரணமாக இருந்து விடக் கூடாது என்ற பயமும் இருக்கிறது. அதனால்தான் இப்படி ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்."

பசுபதி கிளம்பத் தயாராக எழுந்து நின்றார்.

"மிஸ்டர் பசுபதி, சித்ரா டாக்டருக்கோ பொறியாளருக்கோ படிக்க வேண்டும் என்பதற்காக அவளுக்குள் வளர்ந்து வரும் கலை ஆர்வத்தை நசுக்குவது எந்தவிதத்தில் நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை. பரதம் தெரிந்த எத்தனையோ டாக்டர்கள் இருக்கிறார்களே? பாடித் தேன்மழை பொழியும் டாக்டர்கள் கூட இருக்கிறார்களே? உலகம் புகழும் லியனார்டோ டாவின்சி ஓர் விஞ்ஞானியும் கூட! அவ்வாறு இவர்களைப் போல் ஏன் சித்ராவும் வரக்கூடாது?" - கேள்வி கேட்டு மடக்கியது அம்புஜம் டீச்சர்தான்.

பசுபதி ஒருகணம் நிதானித்தார்.

"மேடம், நீங்கள் கூறியவை எல்லாம் விதிவிலக்குகள். விதிவிலக்குகள் பொது விதியாகுமா? நீங்கள் கூறுவது பொது


''பெரும்பாலான மாணவர்களுக்கு நாளைக்கு மதியம் தலைவலி, ஜுரம் வரும் சார்."

''எப்படிச் சொல்றே?''

''நாளைக்கு 'டே-நைட்-கிரிக்கெட் மாட்ச் இருக்கே சார்!"

- சீர்காழி வி. ரேவதி





உண்மையானால், எல்லா டாக்டர்களும், பொறியாளர்களும் ஏன் கலைஞர் களாவதில்லை?"

இப்பொழுது பதில் கூறத் தெரியாமல் நின்றார் பங்கஜம் டீச்சர்.

"மிஸ்டர் பசுபதி, மகளைப் பற்றி உங்கள் எதிர்பார்ப்புகள் என்ன என்பதைப் புரிந்து கொண்டு விட்டோம். உங்கள் இலட்சியம் நிறைவேற இந்தக் கல்வி நிலையம் உறுதுணையாக இருக்குமே தவிர, தடைக்கல்லாக இருக்காது. இதை நீங்கள் நம்பலாம். இனி இந்தப் பள்ளியில் ஓவியம் தொடர்பான எதிலும் எங்களால் இயன்றவரை சித்ராவை நாங்கள் கலந்து கொள்ள வைக்க முயற்சி செய்ய மாட்டோம். அத்தனை ஏன்? சித்ராவின் கைவண்ணத்தைக் காட்டும் இந்த அழகு கொஞ்சம் வரவேற்புப் பலகையைக் கூட நீங்கள் விரும்பினால் உங்கள் கையாலேயே அழித்து விட்டுப் போகலாம். நாங்கள் வேறு யாரையாவது வைத்து எழுதிக் கொள்வோம். இன்னமும் உங்கள் சந்தேகம் தீராது என்றால், நீங்கள் அவளை வேறு பள்ளியில் சேர்க்க நானே உதவுகிறேன்." என்று நீலவண்ண டஸ்டர் துணியை நீட்டினார் பெரிய மேடம்.


பசுபதி பதறிப் போனார்.


"மேடம் மேடம். என் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் இத்தனை நேரம் பேசினேனே தவிர உங்கள் மனதை வருத்தப்படுத்த வேண்டும் என்று அல்ல. இதெல்லாம் அவளது படிப்புக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதுதான் என் நோக்கம். சித்ரா வரைந்த வரவேற்புப் பலகை இருக்கட்டும். அதை அழிக்க வேண்டாம்," என்று விடைபெற்றுச் சென்றார்.

அடுத்த நாள் விழா. சிறப்பு விருந்தினராக வருகை தந்த அமைச்சர், அந்த வரவேற்புப் பலகையை நின்று நிதானித்துப் பார்த்தார். அதன் அருகே நின்று புகைப்படம் எடுக்கச் சொன்னார். விழா மேடையில் அமர்ந்ததும், அந்த அழகு கொஞ்சும் வரவேற்பு எழுதிய ஓவிய ஆசிரியரை மேடைக்கு வரச் சொன்னார். தாம் நேரில் பாராட்ட வேண்டும் என்றார்.

பெரிய மேடம் விக்கித்து நின்றார்.


(தொடரும்)


IN NOVEMBER '97
GOKULAM
The monthly magazine for children
BLOOD — A MYSTERY
ROSES
APPLES
SCIENCE and LIFE
Rs. 5/- ONLY
47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal,
Chennai - 600 097





தீபாவளி




பொற்கதிரோன் காலையிருட் பூட்டுடைக்கும் நேரம்
போட்டியிட்டு வேட்டொலிகள் வாழ்த்துரைகள் கூறும்?
முற்றமெலாம் மாதரினம் தீட்டிவைக்கும் கோலம்
முளைத்துவரும் ஆதவன்முன் நாட்டியங்கள் ஆடும்!

அப்பமுடன் அதிரசங்கள், வடைகள், பணி யாரம்
ஆக்குகின்ற வாசனைகள் மூக்கில்வந்து மோதும்!
கொப்பளிக்கும் நுரையுடனே எண்ணெய், சிகைக் காயும்
குளித்துவிடும் குளிர்புனலும் கொல்லைவழி பாயும்!

புற்றுகளில் கிளம்பிவரும் ஈசல்களைப் போலப்
புதுப்படங்கள் வெளிக்கிளம்பித் திரையரங்கைத் தேடும்!
விற்பனரை வளர்த்துவிடும் பள்ளிகளும் கூட
விடுப்பளித்துக் கௌரவித்துத் தனிப்பெருமை சூடும்!

பத்திரிகை அத்தனையும் சிறப்பிதழாய் மாறும்,
பாராட்டுக் கட்டுரைகள், கவிதை மலர் தூவும்!
நித்தமிதே சொர்க்கசுகம் நிலைத்திடணும் போலும்
நெஞ்சிலொரு சுவைக்கனவு நிழற்படமாய் ஓடும்!

— தளவை இளங்குமரன்



கேட்கட்டுமா டாக்டர்?



● கோ. தியாகராஜன், கீழ்வேளூர்.

? சிறுவர்கள் பல் துலக்க பற்பசை, பற்பொடி எது உகந்தது?

! பற்பசை.

● எஸ். கல்யாணி, சென்னை - 45.

? ரத்ததானம் செய்தால் அந்த ரத்தத்தை நம் உடல் மறுபடியும் உற்பத்தி செய்ய எவ்வளவு நேரம் பிடிக்கும்?

தேன், நெய் தடவினால் முடி நரைக்குமா?

! 48 மணி நேரம்.

● செ. ராஜ்குமார், அன்சாரி நகர்.

? புகை பிடிப்பவர்களை விட அவர்களது மனைவியை அது அதிகம் பாதிக்கும் என்று என் நண்பன் கூறுகிறான். இது உண்மையா, டாக்டர்?

! உண்மைதான், ராஜ்குமார்! புகை பிடிப்பவர்களுக்கு அருகிலிருக்கும் மனைவி, குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் அது பாதிக்கும். புகை பிடிப்பவர்கள் வெளிவிடுகின்ற புகையை இவர்கள் சுவாசிக்க நேரிடுவதால் இந்த பாதிப்பு ஏற்படுகிறது. சிகரெட் மற்றும் பீடி புகை எந்த வழியில் நம் உடம்புக்குள் நுழைந்தாலும் அது ஆபத்தை உருவாக்கும் என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மருத்துவ விசயம்.

● ப. ரேகா, சென்னை - 28.

? ஈயச் செம்பில் அல்லது ஈயப் பாத்திரத்தில் ரசம் கொதிக்க வைத்து உண்பது உடம்பிற்குக் கெடுதல் என்று கூறுகிறார்களே, உண்மையா டாக்டர்?

! மிகவும் உண்மை! ஈயம் (Lead) நம் உடம்புக்குக் கெடுதல் செய்யும் உலோகம். ஈயப் பாத்திரத்தில் சமைக்கும் போது சிறிது சிறிதாக ஈயம் கரைந்து சமைக்கும் பொருளுடன் நம் உடம்புக்குள் சென்று வயிற்றுப் போக்கு, கடுமையான தலைவலி, தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி போன்ற பல கோளாறுகள் வெளிப்படலாம். ஆகையால் ஈயப் பாத்திரத்தில் உணவு சமைப்பது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல!

● ஸ்ரீதேவி, சென்னை - 23.

? முகத்தில் பூசப்படும் வாசனைக் கிரீம்களால் தோல் புற்றுநோய் வருமா, டாக்டர்?

! தரம் வாய்ந்த கிரீம்களால் ஆபத்தில்லை. தரக்குறைவான கிரீம்களைத் தொடர்ந்து பல வருடங்களுக்கு உபயோகித்தால், தோல் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புண்டு.

● **எஸ். அபிபுல்லா, மதுக்கரை.**

? சாப்பிட்ட பின்பு மலம் கழிக்கச் செல்வது உடல் நலத்திற்கு நன்மையா? தீமையா... டாக்டர்?

! தீமைதான்.

● **செ. மலர்விழி, மதுரை – 1.**

? வகுப்பில் ஒரே இடத்தில் இருக்கும் என் போன்ற மாணவ மாணவிகளுக்கு மூலநோய் வர வாய்ப்பு உண்டா, டாக்டர்?

! இல்லை மலர்விழி. மூலநோய்க்கு இது காரணமல்ல! பள்ளிப் பருவத்தில் இருப்பவர்களுக்கு மூல நோய் வருவது வெகு அபூர்வம். பயப்பட வேண்டாம்.

● **ப. ராமகிருஷ்ணன், காயக்காடு.**

? எனக்கு அடிக்கடி வாய்ப்புண் வருகிறது. இதைத் தவிர்க்க ஒரு வழி சொல்லுங்கள், டாக்டர்!

! அடிக்கடி வாய்ப்புண் வருவதற்கு இன்னமும் திட்டவட்டமான காரணம் எதுவும் தெரியவில்லை என்றாலும் வைட்டமின் சத்துக்குறைவு, ரத்த சோகை இந்த இரண்டும் வாய்ப்புண்ணுக்கு முக்கிய காரணங்களாகக் கருதப்படுகிறது. இவை தவிர வைரஸ் தொற்று, மலச்சிக்கல், மன இறுக்கம் போன்றவற்றாலும் வாய்ப்புண் வருவதற்கு வாய்ப்புண்டு. கீரைகள், பழங்கள், காய்கறிகள் அடிக்கடி சேர்த்துக் கொண்டால் வாய்ப்புண் வருவது குறையும். தினமும் பால், பேரீச்சம்பழம் சாப்பிடும் பழக்கத்தை மேற்கொள்வது நல்லது. இரவில் இரண்டு வாழைப்பழம் சாப்பிட்டு வர, மலச்சிக்கல் ஏற்படாது. மன இறுக்கத்தைக் குறைக்க இறை வழிபாடும், தியானமும் உதவும். வாயை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொண்டால் வைரஸ் தொற்றுக்கு இடமிருக்காது.

● **டி.பி. பெருமாள், திண்ணப்பட்டி.**

? டாக்டர், தேன், நெய் போன்றவற்றை தலையில் தேய்த்து விட்டால் முடி நரைத்து விடும் என்கிறார்களே, உண்மையா?

! உண்மையில்லை. தேன், நெய்க்கும் முடி நரைப்பதற்கும் தொடர்பில்லை. முடி நரைப்பது அவரவர் ஜீன் (Gene)களைப் பொறுத்த விசயம். முடியில் உள்ள 'மெலனின்' (Melanin) என்ற நிறமியால்தான் நமக்கு முடி கறுப்பாக உள்ளது. மெலனின் உற்பத்தி குறைந்து விட்டால் முடி நரைக்கத் தொடங்கும். மெலனின் உற்பத்தி தொடர்வதும், நிற்பதும் ஜீன் அமைப்பைப் பொறுத்தது. பொதுவாக நமக்கு 40 வயதில் முடி நரைக்கத் தொடங்கும்; பரம்பரை காரணமாக சிலருக்கு 30 வயதில் – ஏன், இதற்கு முன்பே கூட – முடி நரைத்து விடலாம்.



டாக்டர் கு. கணேசன்



தொகுதி - I





ஒளிந்திருக்கும் தீபாவளி பட்சணங்களைக் கண்டு பிடியுங்கள்! - போட்டி




தொகுதி - II



ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097

இங்கு இரண்டு தொகுதிகளாகப் பதினாறு படங்கள் உள்ளன. இவற்றில் முதல் தொகுதியில் உள்ளவற்றின் முதல் எழுத்தையும், இரண்டாவது தொகுதியில் உள்ளவைகளில் இரண்டாவது எழுத்தையும் எடுத்துப் பொருத்தினால் உங்களுக்குப் பிடித்த 'தீபாவளி பட்சணங்கள்' கிடைக்கும். பட்சணங்களின் பெயர்களை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 30.11.97. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



எனக்கும் என் தங்கைக்கும் ரொம்ப, ரொம்பப் பிடிச்சது 'அதுதான் கவிதா' படக்கதைதான். தனக்கு துன்பம் செய்தவங்களையும் மன்னிக்கும் மகாத்மா குணம் நிறைந்த கவிதாவை எங்கள் அக்காவாகவே இன்று வரை நினைக்கிறோம்.

சிவபாக்யா,
சிவகண்மணி,
கருப்பம்புலம்.

'எப்பப்பாரு' கதையல்ல. உண்மைச் சம்பவம்தான். என் வீட்டில் நான் எப்பொழுதும் டீ.வி. பார்த்துக் கொண்டேயிருப்பேன். கதையைப் படித்ததிலிருந்து டீ.வி. பார்ப்பதைக் கொஞ்சம் குறைத்திருக்கிறேன்.

ச. மலர்விழி,
கரூர்.

டால்பின் பற்றிய தகவல்களை படித்து வியந்து போனேன். டால்பினை சாதாரணமாக நினைத்துக் கொண்டிருந்த எனக்கு அதன் அருமை பெருமைகளை உணரவைத்து விட்டீர்கள்!

எஸ். சௌமியன்,
தூத்துக்குடி.

பெற்றோரே பெருஞ் செல்வம் என்பதை எடுத்துக்காட்டியது 'வேண்டாத பட்டியலில்' கதை. பிருந்தாவனக் கதையரங்கத்தில் 'வடை' கதை புதிய பரிணாமத்தைக் காட்டியது.

மு. பூபாலன்,
மூஞ்சூர் பட்டு.

புறா கட்டுரையும், அட்டைப் படமும் சூப்பர்! எங்கள் ஊரில் நடந்தது பல சுவையான தகவல்களைத் தந்துள்ளது.

ஜோ. தேன்மொழி,
தா.சு. குப்பம்.

'இவனுக்கே' கதை ரத்த தானத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டியது.

பி.எஸ்.டி. சரவணன்,
பத்தமடை.

திருடனைப் பிடித்த நவீனுக்கும், அவன் தம்பி, தங்கைக்கும் ஒரு சபாஷ்!

எஸ். ரகுமான்ஷா,
திட்டச்சேரி.

பூவை அமுதனின் 'கரும்பு தின்ன...' கதை படிப்பின் அவசியத்தையும், அமலநாதனுக்கு படிக்க வழியையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

எம். லிங்கதுரை,
மேட்டுப்பாளையம்.

'ஒன்பதாம் வீடு' தொடர்கதையில் சித்ரா கஷ்டப்படும் போதும், கண்கலங்கும் போதும் எனக்கு அழுகையாக வந்தது.

ஜெ. தெபொராள்,
6-ஆம் வகுப்பு,
கிராப்பட்டி,
திருச்சி.

'மூழ்கினால் அழுகல்' கதையில் உப்பு நீரில் முட்டை மூழ்கி விடும் என்ற எளிய அறிவியல் உண்மையை வைத்து காளியப்பன் பண்ணையாரை ஏமாற்றியது வேடிக்கையாக இருந்தது.

உமாதேவி,
பழனி.

'குருவியின் பரிசு' கதையில் அற்புதமான கற்பனைவளம் பளிச்சிட்டது.

எல். பாரதி,
பரமக்குடி.


பொன்னும், பொருளும் உண்மையான கருவூலம் அல்ல. நமக்கு உணவளிக்க பயன்படும் ஏர் கலப்பையே உண்மையான கருவூலம் என்று மன்னருக்கே உணர்த்திக்காட்டிய விவசாயி அற்புதம்!

எஸ். நாகராஜன்,
என். ராஜி,
மேலப்பாதி.

இன்லண்ட் கடிதத்தில் போட்டிகளுக்கு விடைகளை எழுதி அனுப்பலாமா?

ச. செல்வராஜ்,
குருசாமி பாளையம்.

தாராளமாக எழுதி அனுப்பலாம். – ஆர்.



சபாஷ் கங்குலி!

சஹாரா கோப்பையை இந்தியா வென்ற உற்சாகத்தில் இருந்தான் விஜய். தொலைக் காட்சியில் ஹைலைட்ஸ் காட்டப்படும் போதெல்லாம் சலிக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான். சௌரவ் கங்குலியின் அதிரடி பந்து வீச்சில் ஆழ்ந்திருக்கும் போது அஜய் உள்ளே நுழைந்தான்.

''யாருப்பா இந்த கங்குலி? தூள் கிளப்புறாரே!'' என்று ஆச்சரியப்பட்டான்.

''மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞர். ஒரு நாள் ஆட்டத்திற்கு இவர் ஏற்றவர்தானா என்று கூட முன்பு பலரும் சந்தேகித்த துண்டு. இப்ப இவர்தான் இந்திய கிரிக்கெட் அணியிலேயே ஸ்டார் ப்ளேயர்'' என்று கங்குலி புராணத்தை எடுத்து விட்டான் விஜய்.

''ஒரே போட்டித் தொடரில் 4 முறை ஆட்ட நாயகன் பட்டத்தைக் கைப்பற்றி இருக்கார். ஒரே ஒரு தடவைதான் சக ஆட்டக்காரர் ஜடேஜாவிற்கு விட்டுக் கொடுத்துட்டார்'' என்று அஜய் தொடர்ந் தான்.

''ஆமாம். 6 ஆட்டத்தில் பேட்டைப் பிடித்து 222 ரன்கள் குவிச்சுட்டார். 5 ஆட்டத்தில் பந்து வீசியதில் 15 விக்கெட்டுகளை எடுத்துட்டார்'' என்று மகிழ்ந்தான் விஜய்.

''இது போல பேட்டிங் - பௌலிங் இரண்டிலும் சிறப்பாய் விளையாடி ரெகார்ட் வைச்சிருக்கிற இந்தியர்கள் இது வரைக்கும் நாலு பேர்தான்.''

''யாரந்த நாலு பேர்?'' என்று குறுக்கிட்டான் விஜய்.

''நம்ம கபில் தேவ், மொகீந்தர் அமர்நாத், ரவி சாஸ்திரி இவங்கதான். மனோஜ் பிரபாகர் கூட கங்குலியோட சாதனைக்குப் பின்னால்தான் வர்றாரு.''

''ஆனா கபில் தேவ் இதுபோல 5 தொடர்களில் வெளுத்துக்கட்டியிருக்காரு. நம்ம கங்குலி இனி வரப் போகிற ஆட்டங்களிலும் நல்லா விளையாடி இந்தியாவிற்கு வெற்றி கிடைக்கச் செய்யணும்'' என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தான் விஜய்.

''கங்குலி 16 ரன் கொடுத்து 5 விக்கெட் எடுத்ததும் சிறப்பானதுதான். வேறெந்த இந்திய மிதவேகப் பந்து வீச்சாளரும் இதுபோல செய்ததில்லையே!''

''இந்த மாதம் இந்தியா - பாகிஸ்தான் ஓய்வு பெற்ற வீரர்கள் பங்குபெறும் கிரிக்கெட் போட்டி நடக்குதே. அதில் நம்ம பெருந்தலைகள் எப்படி விளையாடுறாங்கன்னு பார்ப்போம்'' என்று கூறியபடியே விஜய் பாடப் புத்தகத்தைக் கையிலெடுத்தான்

— விளையாட்டுப் பையன்

படம் : சாரி

கிரிக்கெட் டேட்டா

** உலகில் அதிக ரன் எடுத்த ஆட்டக்காரர் ஆலன் பார்டர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பார்டர் 156 டெஸ்ட் ஆட்டங்களில் 265 முறை விளையாடி 44 முறை ஆட்டமிழக்காமல் 11174 ரன்களைக் குவித்திருக்கிறார். அதிகபட்ச ரன்கள் 205. 27 முறை சதமும், 63 முறை அரை சதமும் அடித்த பார்டரின் ரன் சராசரி 50.56.*


** அதிக ரன் எடுத்ததில் இரண்டாவது இடத்தில் இருப்பவர் நமது சுனில் கவாஸ்கர். 125 ஆட்டங்களில் 214 முறை ஆடி 16 முறை ஆட்டமிழக்காமல் 10122 ரன்கள் சேர்த்திருக்கிறார். அதிகபட்ச ரன்கள் 236*. 34 சதங்களும் 45 அரை சதங்களும் அடித்திருக்கும் கவாஸ்கரின் ரன் சராசரி 51.12.*

** இவர்கள் இருவரையும் தவிர வேறெவரும் பத்தாயிரம் ரன்களைத் தாண்டவில்லை. தற்போது விளையாடி வருபவர்களில் அதிக ரன் (6116) எடுத்து முன்னிலை வகிப்பவர் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மார்க் டெய்லர். அதே அணியில் விளையாடி வரும் துணைத் தலைவர் ஸ்டீவ் வாஹ் 5960 ரன் எடுத்துள்ளார்.*

சிரிப்...


"நீ கேட்ட வெடியைத்தான் உங்க அப்பா வாங்கிக் கொடுத்துட்டாரே, இன்னும் ஏன் அழுதுகிட்டு இருக்கே?"

"எங்க அப்பா வாங்கிக் கொடுத்தது வெங்காய வெடியாச்சே! அதான் இப்படி கண்ணுல தண்ணி வருது!"



"பென்சில் மத்தாப்பு கூடவே ஒரு பிளேடும் இலவசமா தர்றாங்களே எதுக்கு?"

"இது பென்சில் மத்தாப்பு ஆச்சே! சீவ சீவத்தான் எரியும்! அதனால்தான்!"





"குதிரைக்கு பிடிக்காத மத்தாப்பு எது தெரியுமா?"

"சாட்டை!"

— கடலூர் கன்னியப்பன்



"தீபாவளிக்கு அவனிடம் ஊசி பட்டாசு கடன் வாங்கி வெடிச்சது ரொம்ப தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"எதற்கெடுத்தாலும் குத்தி குத்தி காட்டறானே!"

சிரிப்...



"தீபாவளிக்கு வெடிக்க எங்க அப்பாவிடம் பட்டாசு கேட்டது ரொம்ப தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"கோபத்துல படபடன்னு வெடிக்கிறார்!"

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் ஐந்தாவது சிறுகதை

தானாக...

மு. சித்ராதேவி

ஸ்ரீ வித்யா மகளிர் மேல் நிலைப் பள்ளி ஆறாம் வகுப்பில் புதிதாகச் சேர்ந்திருந்தாள் பூங்கொடி. அப்பள்ளியில் நடக்கும் ஒவ்வொரு சிறு செயலும் அவளுக்கு வித்தியாசமாயிருந்தது. பிசகாமல் நேரம் தவறாமை கடைப்பிடிக்கப்படுவது, எத்தனை வசதியானவர் வீட்டுப் பெண்களாக இருந்தாலும் சிறு நகை கூட அணிய அனுமதிக்கா உறுதி, ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தனி ஆசிரியர் வருவது, அங்குள்ள தளராத கட்டுப்பாடுகள் என்று எல்லாமே அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. பள்ளி ஆரம்பித்து ஒரு வாரம்தான் ஆகியிருந்ததால் மாணவிகள் தங்களுக்குள் நெருங்கிப் பழக சரியான வாய்ப்பில்லாமல் இருந்தது. ஆனாலும் பூங்கொடி தன்னுடைய கலகலப்பான பேச்சால் எல்லோரிடமும் நன்கு அறிமுகமாகியிருந்தாள். அதோடு, நுழைவுத் தேர்வின்போது அவளே அதிக மதிப்பெண் பெற்றிருந்ததால் மற்ற மாணவிகளின் வேண்டுகோளின் படி பூங்கொடியே தற்காலிகமாக வகுப்புத் தலைவி பொறுப்பை ஏற்றாள்.

இடைவேளை மணி அடித்ததும் மாணவிகள் வெளிக் காற்றை சுவாசிக்க வேகமாக வெளியே வந்தனர். வகுப்பிற்குள் யாரும் இருக்கிறார்களா என்று பொறுப்போடு நோட்டமிட்ட பூங்கொடி நான்காவது வரிசை பெஞ்சின் மீது தலை வைத்து யாரோ ஒரு மாணவி விசும்புவதைக் கேட்டதும், மெதுவாக அருகில் வந்தாள். அவளைப் பூங்கொடிக்குத் தெரியும். வெளியூர் மாணவி ஜெயந்தி. விடுதியில் தங்கிப் படித்து வந்தாள். தோளைத் தொட்டு, "ஜெயந்தி! ஏன் அழுகிறாய்?" என்று பூங்கொடி பரிவுடன் கேட்டாள்.

"எங்கம்மாவைப் பார்க்கணும்" என்றாள் ஜெயந்தி அழுகையுடன்.

"இதபார் ஜெயந்தி, உனக்கே இவ்வளவு வேதனையாக இருந்தால் உன்னைப் பெற்றவர்களுக்கு எவ்வளவு பிரிவுத் துயர் இருக்கும்? பெரிய படிப்புப் படிப்பதற்காகத்தானே உன்னை விடுதியில் தங்க வைத்திருக்கிறார்கள்? இப்படி



அழுது கொண்டிருக்க நீ என்ன சின்னப் பாப்பாவா?" என்று அவளுக்கு ஆறுதல் கூறி வெளியே அழைத்துச் சென்றாள்.

அந்த அன்புக் கண்காணிப்பும் ஆறுதலும் ஜெயந்திக்கு இதமாக இருந்தது. அதன்பின் ஜெயந்திக்குத் தேவையானவற்றைக் கவனித்து எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்து அவளுடைய உயிர்த் தோழி ஆனாள் பூங்கொடி. முதல் மாதத் தேர்வின் முடிவு வெளியானது. அனைவரும் எதிர்பார்த்தபடி பூங்கொடியும் ஜெயந்தியும்தான் முதலிரண்டு இடத்தைப் பிடித்திருந்தனர். மற்ற மாணவிகள் தங்கள்

பாராட்டைத் தெரிவித்தனர்.


அன்று பூங்கொடிக்கு உடல்நிலை சரியில்லை. பள்ளிக்கு வரமுடியவில்லை என்று விடுப்பு விண்ணப்பம் அனுப்பியிருந்தாள். துணைத் தலைவியான ஜெயந்திதான் வகுப்பைப் பார்த்துக் கொண்டாள். மதிய இடைவேளையின் போது மாணவிகள் கதையடித்துக் கொண்டிருந்தனர். பூங்கொடி வேறு இல்லாததால் ஜெயந்தி பொழுதுபோகாமல் கையில் உள்ள பதிவேட்டைப் புரட்டிக் கொண்டே வந்தாள். ஒவ்வொரு பெயராகப் பார்த்துக் கொண்டே வந்தாள். பூங்கொடி என்றிருந்த இடத்தில் விரலை நகர்த்தியவள் அவளுக்கெதிரே ஜாதி என்றிருந்த இடத்தில் தற்செயலாக நிறுத்திப் பார்த்தாள். அங்கு எழுதியிருந்தது அவளுக்கு வித்தியாசமாய்ப்படவே அருகிலிருந்த ஹேமாவிடம், "வேடுவர்னா என்ன?" என்று கேட்டாள். அவளுக்கும் தெரியவில்லை. தன் பக்கத்தில் இருந்தவளிடம் கேட்டாள். தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமாய் மாணவிகள் தங்களுக்குள்ள ஐயத்தைப் பரிமாறிக் கொண்டனர். ஒருவருக்கும் உறுதியாகத் தெரியவில்லை.

மறுநாள் வகுப்புக்குச் சற்று முன்னதாகவே வந்த மாணவிகளில் ஒருத்தியான சந்திராவிடம், நேற்றுத் தெரியாத கேள்விக்கு விடை இருந்தது! "எங்கம்மாகிட்ட கேட்டேன். வேடுவர்னா மிருகம் பறவைகளை வேட்டையாடும் காட்டு மக்கள் இனமாம். படிப்போ நாகரீகமோ, பண்பாடோ இல்லாதவங்க. பூங்கொடி பக்கத்தில் உட்காராதீங்க! ஏதாவது சொறி சிரங்கு வந்திடும்னு சொன்னாங்க. அவங்க தீபாவளி பொங்கல்னாத்தான் குளிப்பாங்களாம்" என்றாள் அவள். அதையே ராஜி உறுதிசெய்தாள். பானு ஒத்துப் போனாள். மாணவிகள் தங்களுக்குத் தெரிந்தவற்றைக் கூறி நகைத்துக் கொண்டிருந்தனர்.

தூரத்தில் பூங்கொடி வருவதைப் பார்த்த ஒருத்தி, "ஏய் வர்றா, வர்றா" என்று எச்சரிக்க மாணவிகள் தங்கள் புத்தகங்களைத் திறந்து வைத்துக் கொண்டு படிப்பது போல் பாசாங்கு செய்தனர். "குட் மார்னிங்" என்று கூறிக் கொண்டே வகுப்பறையினுள் நுழைந்த பூங்கொடி, தனக்கு யாருமே பதில் வணக்கம் கூறாததுடன் தலையைக் கூட நிமிர்த்தாமல் அமர்ந்திருந்த காட்சி பூங்கொடிக்குப் புதுமையாக இருந்தது.

"என்னடி ஆச்சு இவளுகளுக்கெல்லாம்!" என்று தன் உயிர்த்தோழி ஜெயந்தியிடம் உரிமையோடு கேட்டாள் பூங்கொடி.

"உன் உடம்பு எப்படி இருக்கிறது பூங்கொடி?" என்று பேச்சை மாற்றினாள் ஜெயந்தி. அவள் முகத்தில் கூட பழைய அன்பு இல்லை. பார்வையில் கூட இதுநாள் வரை இல்லாத ஒரு அலட்சியம். ஒதுங்கிக் கொள்ளும் பாவனை!



"ஒரே புதுமையா இருக்கே! என்னமோ நடந்திருக்கு. அது என்ன?" என்று பிடிவாதமாகக் கேட்டாள் பூங்கொடி. ஜெயந்தி நடந்தவை அனைத்தையும் கூறினாள். பின்பு ஆதரவுடன் அவளுடைய தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டு நகர்ந்தாள்.

பூங்கொடிக்கு பூமி தன் கால்களிலிருந்து நழுவுவதைப் போல் இருந்தது. 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று அன்று பாரதி ஏன் குழந்தைகளைப் பார்த்துப் பாடினார் என்பதை இன்று பூங்கொடி புரிந்து கொண்டாள்.

அன்று பூங்கொடி யாருடனும் பேசவில்லை; பழகவில்லை. அடுத்து வந்த வாரத்தில் பள்ளிக்குச் செல்வதே கூட பூங்கொடிக்கு தண்டனையாக இருந்தது. எல்லோரும் அவளைப் பார்த்து தங்களுக்குள் இரகசியமாகப் பேசிக் கொண்டதை அவளால் கவனிக்க முடிந்தது. விடுமுறைக்கு வீட்டிற்குச் சென்று வந்த ஜெயந்தியின் நடவடிக்கைகளில் கூடுதலாக சற்று மாறுதல் தென்படவே பூங்கொடி மிகவும் மனம் நொந்து போனாள். அன்று மதியம் தன்னை ஓய்வு அறையில் சந்திக்கும்படி வகுப்பு ஆசிரியர் கூறியதும் பூங்கொடி ஆசிரியரைக் காணச் சென்றாள்.

வணக்கம் தெரிவித்து விட்டுக் கைகளைக் கட்டி நின்றாள் பூங்கொடி. "என்ன பூங்கொடி! இந்த மாதத் தேர்வில் குறைவான மதிப்பெண் வாங்கி இருக்கிறாய்?" என்று ஆசிரியர் கேட்டார். பூங்கொடி தலைகுனிந்து மௌனமாக நிற்கவே, "ஏம்மா, உங்களுக்குள்ளே ஏதாவது மனக்கசப்பா? நேற்றுக் கூட சில



மாணவிகள் வந்து ஜெயந்தியையே வகுப்புத் தலைவியாக்கி விடுங்கள்" என்று கேட்டார்களே! அதற்கு ஏற்றார் போல் நீயும் குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறாய்! உனக்கு என்ன ஆச்சம்மா?" என்று பரிவுடன் கேட்டார்.

கண்ணீருடன் நடந்தவைகளைத் தயங்கித் தயங்கி வேண்டாவெறுப்பாகக் கூறினாள் பூங்கொடி. பிரச்சனை பெரிதாய் இருப்பதை உணர்ந்த ஆசிரியர், "அவர்களிடம் நான் பேசுகிறேன்" என்று கோபத்துடன் கூறினார்.

கண்களைத் துடைத்துக் கொண்ட பூங்கொடி, "வேண்டாம் வேண்டாம். அச்சுறுத்துவதாலோ தண்டிப்பதாலோ வேண்டாவெறுப்பாக அவர்கள் என்னிடம் பேசலாம். ஆனால் அது நிரந்தரமானதல்ல. அத்தகைய மாற்றம் எனக்குத் தேவை இல்லை. உள்ளத்திலிருந்து வரும் உண்மையான அன்பும் நட்பும்தான் உறுதியானது. என்னுடைய நட்பும், அன்பும் அவர்களுடைய மனதை மாற்றி அவர்களைத் தானாகவே என்னிடம் வரவழைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. "அதைப் பெறுவதற்கு நான் எவ்வளவு நாளானாலும் காத்திருப்பேன்," என்று கூறிவிட்டு வெளியே வந்தாள்.

"எல்லாம் அந்தப் பதிவேட்டினால் வந்த வினை. அதைத்தான் மாற்ற வேண்டும்" என்று நினைத்தாள்.


பாடவேளையின் போது வந்த வகுப்பு ஆசிரியரும் மாணவிகளுக்கு அறிவுரைகளை வழங்கினார். அவர்கள் தங்கள் மனப்போக்கை மாற்றிக் கொள்வதன் அவசியத்தை உணர்த்தி நியாயப்படுத்தினார். அதற்குப் பலன் இருந்தது. ஒருசிலர் பூங்கொடியிடம் தாங்களாகவே பட்டும் படாமலும் பழக முன்வந்தனர்.

இருந்தபோதிலும் அவள் தொட்டதைத் தொடவோ, அவள் குடித்த தண்ணீர் டம்ளரை எடுத்து நீர் பிடித்துக் கொடுக்கவோ கூட பலரும் தயங்கியதை புத்திசாலியான பூங்கொடி கண்டுபிடிக்கத் தவறவில்லை. அவர்களுக்கெல்லாம் தலைமை வகித்து மௌனமாக வழிநடத்தியவள் பவானி. பூங்கொடி மனம் வருந்துவதைப் பார்த்துப் பார்த்து மகிழ்வதில் அவளுக்குத் தனி ஆர்வம் இருந்தது. பூங்கொடி விரும்பியிருந்தால் ஆசிரியரிடம் கூறி அவளுக்குத் தண்டனை வாங்கித் தந்திருக்கலாம். ஆனால் அதை அவள் விரும்பவில்லை. தானாக மனம் மாற வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

ஸ்ரீ வித்யா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் புதுப்பிக்கப்பட்ட சோதனைக் கூடம், நூலகம் மற்றும் புதிய கட்டடம் ஆகியவற்றின் திறப்பு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட இருந்தது. நன்கொடை வசூலித்து கட்டிடங்கள் கட்டப்பட்டதால் பெற்றோர்களும் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். மாணவிகளும் தங்களது திறமைகளைக் காட்ட இருந்தனர்.

திங்கட் கிழமை காலையில் விழா ஆரம்பிக்க இருந்தது. ஞாயிற்றுக்கிழமை விழாவிற்கான வேலைகள் துரிதமாக நடந்தன. வேலைகளில் ஒத்தாசை செய்வதற்கு விருப்பமுள்ள மாணவிகள் அழைக்கப்பட்டிருந்தனர். பூங்கொடியும் வந்து பார்வையாளர்கள் அமர்வதற்கு நாற்காலிகளைப் போட்டு வரிசைப்படுத்திக் கொண்டிருந்தாள். பவானியும் ஜெயந்தியும் கூட தன் நெருங்கிய தோழிகளுடன் வந்திருந்தனர். வழக்கப்படி பவானி, அடிக்கடி தன் குத்தல் பேச்சுக்களால் பூங்கொடியை வம்புக்கு இழுக்க முயன்று மகிழ்ந்து கொண்டிருந்தாள். ஆனால் பூங்கொடி எதையுமே கண்டுகொள்ளாமல் தனக்கிடப்பட்டிருந்த வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

மதிய உணவுக்கான நேரம். "அடி அவள் சாப்பிடுவதற்குள் நாம் சாப்பிட்டுக் கைகழுவி தண்ணீர் குடிச்சிடுவோம்"



"ஏண்டி! ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கே?"

"சினிமாவில் பாடப் போறேனே."

— நெற்குப்பை கி. மனோகரன்

என்று பவானி வழிகாட்ட ஜெயந்தியும் மற்றவர்களும் முதலில் தண்ணீர் பிடித்து வைத்துக் கொண்டனர். ஓட்டலில் இருந்து உருளைக்கிழங்கு வறுவல் வரும் என்று அவர்களைக் காக்க வைத்தாள் ஒருத்தி.

பூங்கொடி, கை, கால் கழுவித் தண்ணீர் எடுத்து வந்தாள். சாப்பாட்டு டிபன் பாக்ஸைப் பிரிப்பதற்குள் எங்கிருந்தோ வந்த நாய் ஒன்று அவள் தடுக்குமுன், தண்ணீரைக் குடிக்க முயன்று டம்ளரைக் கவிழ்த்து தண்ணீரைக் கொட்டி விட்டது! எத்தனை தாகம் இருந்தால் அது அப்படிச் செய்திருக்கும் என்று எண்ணி இரங்கிய பூங்கொடி, நாயை விரட்டாமல் கொஞ்சம் எடுத்து அதற்கு சாதம் வைத்தாள். இதற்குள் கொட்டிய நீரை நக்கிக் குடித்த நாய், பரிதாபமாக தலையைச் சாய்த்து விழுந்தது!

ஓடிவந்த வாட்ச்மேன் பாபு பதறினர். நாய் அவருடையதுதான். "உணவில் நஞ்சு கலந்திருக்கு" என்று அள்ளித் தூக்கிக் கொண்டு ஓடினார்.

உணவில் விஷமா! பூங்கொடி பதறி நின்றாள். அவள் வைத்த சாதத்தை நாய் தொடக்கூட இல்லை. நீரைக் குடிக்கும் வரை அது நன்றாகத்தான் இருந்தது. நீரை நக்கிக் குடித்தபிறகே இந்த கதிக்கு ஆளானது. அப்படியானால் நீரில்தான் விஷம் கலந்திருக்கா?

பவானியும் ஜெயந்தியும் மற்றவர்களும் இதே நீரைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது நினைவுக்கு வந்தது. யாராவது குடித்திருந்தால்... பூங்கொடி அவர்கள் இருந்த இடத்திற்கு பதைபதைக்க ஓடினாள். பவானி நீரைக் குடிக்க டம்ளரை எடுத்து வாயருகே கொண்டு போனாள்.

"குடிக்காதே பவானி...!" என்று கத்திக் கொண்டே ஓடி வந்த பூங்கொடி அவள் டம்ளரைத் தட்டி விட்டாள். எல்லோரும் அவளை வெறுப்புடன் பார்த்தனர். பூங்கொடி அதைப் பொருட்படுத்தவில்லை.

"தண்ணீரில் ஏதோ விஷம் கலந்திருக்கு போலிருக்கு. இதைக் குடிச்சதும் வாட்ச்மேன் பாபுவோட நாய் மயங்கி விட்டது. மருந்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறார். அதான் உங்களை எச்சரிக்க வந்தேன்."

பூங்கொடி நொடியில் செய்தியைப் பரப்பி, எல்லோரையும் எச்சரிக்கை செய்தாள். நல்ல காலம் எல்லோரும் கை கால் கழுவியிருந்தார்களே தவிர, யாரும் குடிக்கவில்லை.

பணியாளர்களை வைத்து நான்காவது தளத்தில் கட்டப்பட்டிருந்த தண்ணீர்த் தொட்டியைப் பார்த்தபோது, நீரில் நீலம் கலந்திருந்தது. ஒரு பெரிய கருநாகம் செத்து மிதந்து கொண்டிருந்தது!

"பூங்கொடி, நீ தாழ்த்தப்பட்ட குலம் என்பதற்காக, நீ தொட்ட நீரைக் கூட எல்லோரும் தொடாமல் இருக்கும்படி பார்த்து வேற்றுமையை வளர்த்தேன். மறைமுகமாகக் கிண்டலடித்து உன் மனதை வேதனைப்படுத்தினேன். நீ மனம் வருந்தியதையும், கண்ணீர் சிந்தியதையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். இப்போ கூட முதல்ல தண்ணீர் பிடிச்சு வந்தோம். நீ மட்டும் மனம் வைத்திருந்தால் நஞ்சு கலந்த நீரைக் குடிக்க வைத்து, வேடிக்கை பார்த்து, பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நீ அப்படிச் செய்யவில்லை. காரணம், நீ அன்புமயமானவள். பிறரை நேசிக்க மட்டும்தான் உனக்குத் தெரியுமே தவிர, பழிக்குப் பழிவாங்க அல்ல. எங்களை மன்னித்து விடு பூங்கொடி" என்று கண்ணீர் பொங்கப் பூங்கொடியின் கையைப் பற்றிக் கொண்டாள் பவானி.


நீர்த் தொட்டியில் கலந்திருந்த நஞ்சு மட்டுமா சுத்தமானது? மாணவிகளின் மனத்தில் தேங்கிக் கிடந்த நஞ்சும் கூட கழுவப்பட்டு சுத்தமானது!



''பாத்ரூம்'லே தண்ணீரைச் சிந்திக்கிட்டே இருக்கானே, அவன் பெயர் என்ன?''

''சிந்து பாத்.''

— மு.ப. கௌதம் பாரதி



டாக்டர் பூவண்ணனின் **சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி - 3, பக். 320, ரூ. 150/- பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பார்க் 4வது கிராஸ் சாலை, சாயிபாபா காலனி, கோயமுத்தூர் - 641 011.**

விதவிதமான மலர்களால் பூச்செண்டு கட்டிக் கொடுத்து நல்வாழ்த்துத் தெரிவிப்பது மரபு. இதுபோலவே இந்தப் புதுமையான சிறுவர் இலக்கியக் களஞ்சியப் பூங்கொத்தின் 3ஆம் தொகுதியில் ஏழு பாடல்கள், ஆறு சிறுகதைகள், நான்கு நாடகங்கள், ஒரு சித்திரக்கதை, நான்கு கட்டுரைகள், ஒரு நாவல் என்ற வண்ண மலர்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஏழு பாடல்களில் ஒன்று என்றும் நிலைத்திருக்கும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் ''நாம் இந்தியரே'' பாடல், ''நாட்டுக்கு என்ன செய்தாய்?'' நாவல் கோகுலத்தில் தொடர்கதையாக வெளிவந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் பாராட்டைப் பெற்றது. அருமையான தொகுப்பு. இதிலுள்ள ஒவ்வொன்றும் எந்த ஆண்டு எந்தப் பத்திரிகையில் முதலில் வெளிவந்தது அல்லது எந்த ஆண்டு எந்தப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது என்ற விவரங்கள் தரப்படுவது அவசியம். தொகுதியின் நோக்கம் அப்பொழுதுதான் நிறைவேறும். கடைசித் தொகுதியில் இது பற்றிய தகவல்கள் இணைக்கப்பட்டால் கூடப் போதும்.

விண்வெளியில் வீர காவியங்கள், டாக்டர் க. இந்திரகுமார், பக். 258, ரூ. 100/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

விண்வெளி ஆராய்ச்சி வளர்ச்சியை அதன் தொடக்கத்திலிருந்து தொடங்கி, கோள்களைப் பற்றி, புராண, இலக்கியக் கதைகளாக விளக்கி, அறிவியல் செய்திகளைத் தந்து விமான விட்டத்தில் யூரிககாரினின் மரணத்தோடு புத்தகம் முடிக்கப்பட்டுள்ளது. ஏராளமான திகைப்பூட்டும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விளக்கப் படங்களும், புகைப்படங்களும் சுவை கூட்டுகின்றன. உழைப்பின் கனத்தை நூல் முழுக்கக் காண முடிகிறது. தரமான தயாரிப்பு. அயல் நாட்டுத் தயாரிப்பு களுக்கு இணையாக உள்ளது.

நல்வாழ்க்கைக்குப் புத்தரின் அறிவுரைகள், தொகுப்பு பாலமுருகன், பக். 80, ரூ. 15/- சங்கர் பதிப்பகம், 21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 49.

சாக்கிய முனியாகிய புத்தர்பிரானின் அருளுரைகளின் தொகுப்பு. படிப்போர் மனத்தைப் பண்படுத்தி, சிறந்த வாழ்வு வாழத் தூண்டுபவை. நல்ல முயற்சி.

எங்கும் அறிவொளி, பேராசிரியர் எ. சோதி, பக். 144, ரூ. 30/- நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 605 003.

கல்வியின் இணையிலாப் பெருமைகளை மிக அருமையாக விளக்கும் பத்து நாடகங்கள் இத்தொகுப்பில் உள்ளன. எல்லாமே அறிவொளி இயக்கத்தின் அவசியத்தை மனத்தில் பதியவைக்கும் சக்தி மிக்க உத்திகள். நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனடைய வேண்டிய பொறுப்பு, அறிவொளி இயக்கத்தினருடையது. படிக்க மட்டுமல்ல, நடித்துப் பயனடையவும் பொருத்தமான நாடகங்கள்.

அறிஞர்கள் சொன்ன அருமையான குட்டிக் கதைகள், தொகுப்பாளர் எஸ்.எஸ். வாசன், பக். 112, ரூ. 21/- மணிமேகலை பிரசுரம், 4, தணி காசலம் சாலை, தி. நகர், சென்னை - 17.

குட்டிக் கதைகளுக்கு தனியான சிறப்பு உண்டு. உணர்வதற்குக் கடினமான தத்துவங்களை மிக எளிதாக உணர்த்தும் சக்தி பெற்றவை இவை. இதன் காரணமாகவே உலக நாடுகளில் பலரும் தங்கள் போதனைகளைக் குட்டிக் கதைகள் வாயிலாகத் தந்துள்ளனர். இந்தத் தொகுப்பில் இராமகிருஷ்ணர், பெரியார், விவேகானந்தர், பாரதியார் ஆகிய நால்வரும் கூறிய கதைகளில் மிகச் சிறப்பானவைகளைத் தொகுத்துத் தந்திருக் கிறார்கள். மிக எளிய நடை. படிக்க மட்டுமல்ல, படித்துவிட்டு மற்றவர்களுக்குக் கதையாகவும் கூறவல்லவை.

குரங்கின் கூத்து, சொமித்ரோ சர்க்கார், தமிழில் வ. கீதா, பக். 28, ரூ. 40/- தாரா பதிப்பகம், 43/3, கடற்கரை சாலை, கலாக்ஷேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை - 90.

மிகவும் பிரபலமான நாடோடிக் கதையான ''வாலு போச்சு கத்தி வந்தது டம் டம் டம்'' கதை. மிக அற்புதமான படங்களுடன், கண்கவர் வண்ணத்தில், கெட்டித் தாளில், பார்த்தவுடனே படிக்கத் தூண்டும் வகையில், வெளிநாட்டுத் தயாரிப்புகளுக்கு இணையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. பெருமைப்படத் தக்க தயாரிப்பு.

— ரே



விடை தெரியாது விழித்தவர்!

அந்த உலகப் பெருந்தலைவருக்குக் குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்கும். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் குழந்தைகளோடு குழந்தையாய் மாறி அவரும் அவர்களுடன் விளையாடி பொழுது போக்குவார். அயல்நாடுகளுக்கு அவர் விஜயம் செய்யும்போது அந்த நாட்டு குழந்தைகளைச் சந்திக்கவும் தவறாமல் நேரம் ஒதுக்கப்படும்.

அந்த உலகப் பெருந்தலைவர் ஜப்பானுக்குச் சென்றபோது குழந்தைகளுக்காக நடத்தப்படும் அனாதை இல்லம் ஒன்றுக்குச் சென்றார். அங்கே ஏராளமான குழந்தைகள். அத்தனை பேரும் அனாதைகள் என்பதை அறிந்தபோது அவர் உருகிப் போனார்.


ஒரு ஏழு வயதுச் சிறுவன் நிலோபா இவர் போனபோது, பயன்படுத்தப்பட்ட கடித உறைகளில் இருந்து தபால் தலை இருக்கும் பகுதியை வெட்டிக் கொண்டிருந்தான்.

“என்ன பண்றே? உனக்கு ஏதாவது உதவி பண்ணட்டுமா?” என்று தலைவர் அன்புடன் கேட்டார்.

“இதிலிருந்து தபால் தலைகளைத் தனியாகப் பிரித்து எடுக்க வேண்டும். உங்களால் முடியுமா?”

“கண்டிப்பா” - தபாலைக் கையிலெடுத்து, ஒட்டியிருந்தத் தபால் தலையைக் கைகளால் பிய்த்து எடுக்க முயன்றார்.

நிலோபா பதறினான். “இப்படிப் பிரிக்கக் கூடாது! தபால் தலை பிய்ந்து விடும். தண்ணீரில் போட்டு ஊற வைச்சா, தானா பிரிக்க வந்துடும். அப்புறம் பெரிய நியூஸ்



பேப்பரில் வைத்து அழுத்தி எடுத்தால் ஈரம் போய்டும். காய்ந்து விடும். அப்பத் தான் சுருக்கம் இல்லாம ஆல்பத்தில் ஒட்ட வரும்'' என்று செய்முறையை விளக்கினான்.

"சரி, அப்படியே பண்றேன்'' - தலைவர் சிறுவனுடன் உட்கார்ந்து தபால் தலை ஒட்டிய பகுதியை தண்ணீரில் ஊற வைத்து, காத்திருந்து, பிரித்து எடுத்து, உலர்த்தி அவன் கையில் தந்தார்.

"பரவா இல்லே....!'' என்று பாராட்டினான் சிறுவன் நிலோபா.

இன்னொரு அறை. அங்கே கால் ஊனமுற்ற ஒரு சிறுமி. பெயர் நிலோஹ்சி.

"உனக்கு என்ன பிடிக்கும்?'' - தலைவர்தான் சிறுமியிடம் கேட்டார்.

"விடுகதை போட''

"சரி ஒரு விடுகதை போடேன்?''

சிறுமி ஜப்பானிய மொழியில் விடுகதை போட்டாள். அதை அருகில் இருந்த ஜப்பானிய அதிகாரி, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னார். தலைவர் மூளையைக் குடைந்து கொண்டார். விடையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பரிதாபமாக, ஆனால் மன மகிழ்ச்சியோடு விழித்தார்.

''விடையைக் கண்டு பிடிக்க நான் உதவட்டுமா?'' என்று கேட்டார் அதிகாரி.

"வேண்டாம். வேண்டாம். நானே கண்டுபிடிக்கப் பார்க்கிறேன். முடியவில்லை என்றால் ஒப்புக் கொண்டு விடுகிறேன். நீங்கள் உதவி பண்ணாதீர்கள். இதில் உள்ள மகிழ்ச்சி போய் விடும்''

தலைவர் பரிதாபமாகத் தவிப்பது சிறுமிக்கு இரக்கத்தைத் தந்திருக்க வேண்டும்.

"பரவாயில்லை. உடனே தான் பதில் சொல்ல வேண்டும் என்பதில்லை. அப்புறம் சொன்னால் போதும். ஆனால், முயற்சி சொந்தமானதா இருக்க வேண்டும்!''

சிறுமியின் சலுகையை சிரமேற்கொண்டு தலைவர் நகர்ந்தார். பிறகு பல அரசியல் நிகழ்ச்சிகள். சிறுமி போட்ட விடுகதை மனதிலேயே நின்று விடை காணத் தவித்துக் கொண்டிருந்தது.

விமானத்தில் இந்தியாவுக்குத் திரும்பி வரும்போது சட்டென்று விடை தெரிந்து விட்டது! டெல்லிக்குத் திரும்பி வந்ததும் முதல் காரியமாக அந்தச் சிறுமிக்கு விடையை எழுதி அனுப்பினார். பத்து நாட்களில் பதில் வந்தது நிலோஹ்சியிடமிருந்து.

"சரியான விடை! பாராட்டுகள்! நூற்றுக்கு நூறு மதிப்பெண். விடையை நீங்களே சொந்தமாக முயன்று கண்டு பிடித்திருப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.''

தலைவர் யாரென்பதை சொல்லியா தெரிந்து கொள்ள வேண்டும்? அவர்தான் குழந்தைகளின் மனங்கவர்ந்த நேருஜி. நிலோஹ்சியின் பாராட்டுக் கடிதம், பல ஆண்டுகள் வரை நேருவின் வரவேற்பு அறையை அலங்கரித்திருந்தது.

— ரே

ஆதாரம்: பிகானீர் புலட்டின்

இவ்வளவுதானா?

ஏ.ஆர்.எம். ஹில்மி

அப்பாவுக்கு இரக்கமே இல்லையா? ஏன் இப்படிச் செய்து விட்டார்? சோமன் மனதுக்குள்ளேயே பொருமினான்.

''எனக்கு அவசரமான வேலை இருக்கிறது. நீயே போய் வங்கியில் என் கணக்கில் இந்த நூறு ரூபாயைப் போட்டு விட்டு வா'' என்று எவ்வளவு எளிதாகச் சொல்லி விட்டார் அப்பா.

அப்பாவின் உத்தரவு அவனுக்குப் பெரிய சோதனையாக இருந்தது. அதற்குக் காரணமும் இருந்தது. எந்த ஒரு புது வேலையையும் அவன் தானாகச் செய்ய மாட்டான். மற்றவர்கள் சொன்னாலும் தயங்கி எப்படியோ நழுவி விடுவான். அப்பா செய்யச் சொன்ன வங்கி வேலை அவன் இதுவரை செய்து அறியாதது. வங்கிக்கு அவன் எப்பவோ ஒரு முறை, அதுவும் அப்பாவோடுதான் போயிருக்கிறான். அங்கே பணத்தை எப்படி எடுக்க வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும், பணத்தை எப்படி போட வேண்டும் என்பது எல்லாம் அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆனாலும் அவன் விருப்பத்திற்கு மாறாக அப்பா இந்த வேலையை அவன் தலையில் கட்டி விட்டார். அவன் தான் இதைச் செய்தாக வேண்டும்.

அம்மாவிடம் கேட்டுப் பார்த்தால் என்ன? யோசிக்கவில்லை. உடனே போய்க் கேட்டான்.

“ஐயையோ உன் அப்பாவுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. நீயே தான் வங்கிக்குப் போய் விட்டு வாயேன். பத்தாம் வகுப்பு படிக்கிற பையனுக்கு இதுகூடவா தெரியாது'' என்று கை விரித்து விட்டாள் அம்மா.


ஆனாலும் அப்பவும் ஒரு நப்பாசை. ஏதாவது காரணத்திற்காக வங்கிக்கு விடுமுறையாக இருக்கக்கூடாதா, நாம தான் போயாகணுமா? என்று எண்ணினான் சோமன்.

தூரத்தில் வங்கியின் பெயர் தெரிந்ததும் சோமனின் இதயம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது.

வங்கியின் முன்னால் தயக்கத்தோடு சோமன் நின்றான். உள்ளே செல்வதற்கு அவன் கால்கள் தயங்கின.


எப்படியாவது வங்கிக்குப் போகாமல் வீட்டிற்குத் திரும்ப முடியுமா? என்று சோமன் நினைத்துக் கொண்டிருந்த போது ஒரு பாட்டி வங்கிக்குள் நுழைந்தாள்.

பக்கத்து தெருவில் உள்ள பங்களாவில் வேலை பார்க்கும் பாட்டியாச்சே! பாட்டிக்கு கையெழுத்துக் கூட சரியாகப் போட முடியுமா என்பது



சந்தேகம்தான்! இந்தப் பாட்டி எவ்வளவு தைரியமாக வருகிறாள்! பாட்டியே வங்கிக்குத் தனியே வந்து பணம் போடவோ, எடுக்கவோ செய்கிறாளே!

பாட்டியையே அவன் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் மீது அவனுக்குப் பொறாமை



யாக்கூட இருந்தது.

அதே நேரத்தில் தன் மீது ஆத்திரம், ஆத்திரமாகவும் வந்தது. எவ்வளவு நேரம்தான் இப்படி நிற்பது?

நடப்பது நடக்கட்டும் என்று சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

பணம் போடுபவர்களும், பணம் எடுப்பவர்களும், வேறு வேலைக்கு வந்தவர்களுமாக வங்கி மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

யாராவது பணம் போடுகிறார்களா? என்று பார்த்தான் சோமன்.

பாட்டிக்கு அங்கு ஏகப்பட்ட வரவேற்பு! வங்கி ஊழியர்களே உதவி செய்தார்கள். இங்கு உள்ளவர்கள் உதவியும் செய்வார்கள் போலிருக்கிறதே! ஆனால் பாட்டியைப் போல பணம் போட வேண்டும். கொஞ்சம் உதவுறீங்களா? என்று யாரிடமாவது கேட்பதற்கும் அவனுக்கு வெட்கமாக இருந்தது.

வெவ்வேறு வண்ணங்களில் நீளமான படிவங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. வருபவர்கள் அதில் ஏதாவது ஒன்றைக் கிழித்து எடுத்துக் கொண்டு ஏதோ எழுதிக் கொடுத்தார்கள்.

முதலில் படிவத்தை நிரப்பிக் கொடுக்க வேண்டுமோ? ஏதோ அவனுக்குக் கொஞ்சம் புரிவது போலத் தோன்றியது. சற்றுத் தைரியம் பிறந்தது. ஆனால் நமக்கு வேண்டியது எந்தப் படிவம்?

முதலில் நாமாக படிவங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து, நமக்குத் தேவையான படிவம் எதுன்னு கண்டு பிடிக்க முயலலாம். முடியவில்லை என்றால் யாரிடமாவது உதவி கேட்கலாம் என்று பார்க்கத் துவங்கினான்.

வெளிர் மஞ்சள் நிறத்தில் உள்ள ஒரு தாளை மட்டும் கிழிக்க முயன்

றான். அவன் கைகள் ஆடின. எனவே தாள் பாதிதான் வந்தது. மீதி கட்டியிருந்த நூலுடன் ஒட்டிக் கொண்டது. மீண்டும் சற்று நிதானமாக படிவத்தைக் கிழித்து எடுத்துச் சென்று கவுண்டரின் மேல் வைத்து படிக்கத் துவங்கினான்.

படிவத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் ஒரு கேள்வி என்பது அவனுக்குப் புரிந்தது.

தேதி என்ற இடத்தில் காலண்டரை ஒருமுறைப் பார்த்து மீண்டும் உறுதி செய்து கொண்டு தேதியை முதலில் எழுதினான். கைகள் நன்கு வியர்த்து விட்டது. கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு மீண்டும் படித்தான். வங்கிக் கணக்கு எண், பெயர், தொகை என்று ஒவ்வொன்றாக அவனுக்குச் சிக்கல்கள் அவிழ்ந்து கொண்டே சென்றன.

பூ! இவ்வளவுதானா?

படிவத்தைப் பூர்த்தி செய்தாகி விட்டது. பணத்தையும் படிவத்தையும் யாரிடம் கொடுக்க வேண்டும்? என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவன் பார்வை இரும்பு வலைகள் பின்னப்பட்ட கூண்டு அறைகள் மீது விழுந்தது.

பூர்த்தி செய்த மஞ்சள் படிவம், பணம், வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றைச் சேர்ந்தார்ப்போல் ஒரு கவுண்டரில் யாரோ ஒருவர் கொடுப்பதைப் பார்த்தான். அவனுக்கு விளங்கிவிட்டது. அவனும் அதே போல் சேர்த்துக் கொடுத்தான். கணக்குப் புத்தகத்தைத் திருப்பித் தர மாட்டாரா?

சோமனுக்கு மனம் வேகமாக அடித்துக் கொண்டது. ஒருவர் அந்தப் புத்தகத்தையும் மஞ்சள் படிவத்தையும் எடுத்துச் செல்வது தெரிந்தது. எங்கு எடுத்துச் செல்கிறார்?

இப்படியே வீட்டிற்குச் செல்வதா? அல்லது இங்கேயே காத்திருப்பதா?

அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது, அவன் அப்பாவின் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதுபோல் இருந்தது.

சோமன் உடனே புரிந்து கொண்டு கவுண்டர் அருகே விரைந்தான். கணக்குப் புத்தகத்தையும் அவன் கொடுத்த மஞ்சள் படிவத்தின் பாதியையும் அவனிடம் கொடுத்தார். வாங்கிக் கொண்டு வெளியே வந்தபோது ஏதோ பெரிதாகச் சாதித்து விட்டது போல் சந்தோஷமடைந்தது மனசு.

இவ்வளவுதானா! இதற்காகத்தான் இவ்வளவு பயந்தோமா என்று தனக்குள் சிரித்துக் கொண்டான் சோமன்.

எந்த வேலையும் பழகுவதற்கு முன் மலைப்பாகத்தான் இருக்கும். படித்த எனக்கே மலைப்பாக இருந்தால் படிக்காதவர்களுக்கு எப்படி இருக்கும்? இனி வங்கி சம்பந்தமான உதவி யார் கேட்டாலும் நானே செய்து கொடுப்பேன் என்று தனக்குள் கூறிக் கொண்டான் சோமன்.


பாட்டி, தான் வந்த வேலையை முடித்துக் கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தாள். பாட்டியின் மீது அவனுக்கு மதிப்பு பெருகியது.



"வானொலிக்கு எதிர்ப்பதம் என்ன?"
"தெரியலை நீயே சொல்லுடா."
" 'போ'னொலி"

— பா. ஜெயக்குமார்

குறுக்கெழுத்துப் புதிர் விடை




கண்டு பிடியுங்கள்!

1. ரவீந்திர நாத் தாகூர் ஆரம்பித்த பல்கலைக் கழகம் எது?
2. குஜராத்தில் உள்ள வன விலங்கு சரணாலயம் எது?
3. தெற்காசியாசிவில் உள்ள ஏழு நாடுகளின் கூட்டமைப்பின் பெயர் என்ன?
4. காவிரி நதி உற்பத்தியாகும் மலை?
5. வந்தே மாதரம் பாடலை இயற்றியவர்?
6. யுரேகா என்ற வார்த்தையைக் கேட்டதும் நினைவுக்கு வரும் விஞ்ஞானி?
7. பஞ்சாப் சிங்கம் யார்?
8. தமிழ் நாட்டில் பறவைகள் சரணாலயம் உள்ள இடம்?

— பா. மைதிலி,
ஏழாம் வகுப்பு,
பெண்கள் உயர் நிலைப்பள்ளி,
மானாமதுரை.

விடை : 1. சாந்தி நிகேதன், 2. கிர்காடுகள், 3. சார்க், 4. குடகு, 5. பங்கிம் சந்திர சட்டர்ஜி, 6. ஆர்க்கிமிடிஸ், 7. லாலா லஜபதிராய், 8. வேடந்தாங்கல்.



சிங்கமான நட்பு!

லண்டனில் 1951 ஆம் வருடம் விலங்குகளின் காட்சி ஒன்று நடைபெற்றது. அதைக் காண ஒரு தம்பதியர் தமது செல்ல நாயுடன் வந்தனர். பார்த்துக் கொண்டே வந்தபோது சிங்கக் கூண்டின் எதிரே வந்தனர். அவர்களுடன் வந்த நாய் திடீரென சிங்கத்தின் கூண்டுக்குள் புகுந்து விட்டது! நாயைக் கண்டதும் முதலில் சிங்கம் கர்ஜித்தது. அந்த நாய் பயந்து போய் கூண்டின் ஒரு மூலையில் சென்று முடங்கிக் கொண்டது. உடனே சிங்கம், என்ன நினைத்ததோ, நாயின் அருகே சென்று பரிவுடன் அதை நக்கியது. அச்சமயம் உணவு வேளை. சிங்கக் கூண்டுக்குள் மாமிசம் எடுத்து வீசப்பட்டது. அதில் ஒரு சிறு துண்டைக் கவ்வி எடுத்து நாயின் எதிரே வைத்தது சிங்கம். அப்போதுதான் நாயின் பயம் கொஞ்சம் குறைந்தது. மெல்ல சிங்கம் வைத்த மாமிசத்தை அது சாப்பிட்டது. சிங்கம் தூங்கியதும் நாயும் அங்கேயே தூங்கியது! நாயை வெளியே கொண்டு வர எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பலனில்லை. நாய் வெளியே வர மறுத்தது. அதை வெளிக் கொணர முயன்றவர்களை சிங்கமும் உறுமி விரட்டியது. எனவே பேசாமல் இருந்து விட்டனர். ஒரு ஆண்டு வரை இரண்டும் ஒன்றாகவே ஒரே கூண்டுக்குள்ளே வசித்தன. ஒருநாள் நாய்க்குக் கடுமையான காய்ச்சல் கண்டு அது கூண்டுக்குள்ளேயே இறந்து விட்டது! அதை வெளியே எடுத்து விட்டனர். அதன் பிரிவால் சிங்கமும் ஏழு நாட்கள் உணவு எதையும் தொடாது மறுத்து அதுவும் செத்துப் போனது!

இதுதானே உண்மை நட்பு!

— ஏழ்வரைக்கடியான்

அழகி

புல்மேடு என்று ஒரு கிராமம். அங்கே அண்ணன் தம்பி இருவர் வாழ்ந்தார்கள். அண்ணன் ஒரு வெள்ளை ஆட்டுக்குட்டி வளர்த்தார். தம்பி ஒரு கறுப்பு ஆட்டுக்குட்டி வளர்த்தார்.

வெள்ளாடும் கறுப்பாடும் ஊரைச் சுற்றியிருந்த பசும்புல் மேடுகளில் மேயும். கறுப்பு ஆட்டுக்குட்டிக்கு தன் 'நிறம் கறுப்பு என்று கவலை.

வெள்ளைக் குட்டிக்கு தன் நிறம் பற்றிப் பெருமை. கறுப்புக் குட்டியை 'ஏ கறுப்பா! என்று ஏளனம் செய்யும். முட்டி முட்டித் தள்ளும்.

கறுப்பாடு ஒன்றும் பேசாது.

வெள்ளாடு வேறு ஆடு மாடுகளையும் மதிக்காது. 'கறுப்பாட்டை கறுப்பா என்று கேலி பேசாதே' என்று அவை கூறினால் வள்ளென்று விழும்' அவனைப் பேசினா உங்களுக்கென்ன?' என்று கேட்கும்.

கறுப்பாடு யார் என்ன சொன்னாலும் அமைதியாக இருக்கும். அதன் பொறுமையான குணத்தைக் கண்டு அனைவருக்கும் அதன் மேல் அன்பு.

இதனால் வெள்ளாடு மேலும் கோபமடைந்து கறுப்பாட்டை முட்டும்.

வெள்ளாட்டுக் குட்டியின் தொந்தரவைத் தாங்க முடியாத கறுப்பாட்டுக் குட்டி ஒருநாள் ஊரை விட்டே புறப்பட்டு விட்டது.

இரவு நேரத்தில் ஒரு மாவுமில் வாசலில் படுத்துக் கொண்டது. மாவு சிந்திக் கிடந்த இடத்தில் புரண்டு உருண்டு தூங்கி எழுந்ததால் மாவு ஒட்டி அது வெள்ளையாகத் தெரிந்தது.

இன்னும் விடியவில்லை. இருட்டில் ஒரு மாட்டு வண்டியில் போன இரண்டு பேர் வண்டியை நிறுத்தினார்கள்.

ஒருவன் சொன்னான், "டே நம்ம முதலாளிக்குத் தேவையான வெள்ளாட்டுக் குட்டி இங்கே இருக்குடா. பிடிச்சித் தூக்கிப் போடு வண்டியில."


கறுப்பாட்டுக் குட்டியை வெள்ளை என்று பிடித்துத் தூக்கி வண்டியில் போட்டான் இன்னொருவன்.

கறுப்பாட்டுக் குட்டிக்குப் பயம். ஆனால் மாவு ஒட்டிய தன்னுடல் வெள்ளையாகி இருந்ததைப் பார்த்து சந்தோஷம். தன்னை வெள்ளை நிற ஆடு என்று வண்டிக்காரன் சொன்னது கேட்டு அதற்குப் பெருமை.

ஆனால் அதன் பின் வண்டிக்காரனும் மற்றவனும் பேசிய பேச்சு அதைக் குலை பதறச் செய்தது.

ஒருவன் சொன்னான்: "நம்ம முதலாளிக்கு வெள்ளாட்டுத் தோல் என்றால் கொள்ளை ஆசை. இதைக் கொண்டு போய் உயிரோட தோலை உரிச்சி கொடுத்திடுவோம்."

நடுநடுங்கிக் கொண்டிருந்த அது தன் ஊர்ப் பக்கம் வண்டி போனதைக் கண்



மன்னிச்சிடு கறுப்பா!

டது. அப்போது தன்னுடன் மேயும் வெள்ளாட்டுக் குட்டி எதிரே வந்ததைப் பார்த்தது.

"இதையும் பிடிச்சி உள்ளே போடுடா" என்றான் வண்டிக்காரன். வெள்ளாட்டுக் குட்டியைப் பிடித்து வண்டிக்குள் போட்டான் மற்றவன் .

அது கத்துக் கத்தென்று கத்தியது.

"கத்தவா செய்றே? வா வா உன் தோலை உரிக்கிறேன். உன் தோல்னா எங்க முதலாளிக்கு ரொம்பப் பிடிக்கும்" என்றான் வண்டிக்காரன்.

பயந்து போன வெள்ளாட்டுக் குட்டிக்கு உடனிருந்த கறுப்பாட்டுக் குட்டியை அடையாளம் தெரியவில்லை.

ஆனால் கறுப்பாட்டுக் குட்டி அதன் அருகில் சென்று ஒட்டி நின்று அதன் பயத்தைப் போக்கியது.

வண்டி போய்க் கொண்டே இருந்தது.

இரவு வந்தது.

வண்டி ஊர் ஓரம் இருந்த சாயப்பட்டறைப் பக்கம் நின்றது. வண்டிக்காரன் மற்றவனிடம் "தம்பி இரவு இங்கே தங்கிக் காலையில் போவோம்'' என்றான்.

சாயப்பட்டறை ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு அவர்கள் சாப்பிடப் போனார்கள்.

அப்போது கறுப்பாட்டுக்குட்டி, "இது தான் சமயம், துள்ளி வெளியே வா!" என்றது. அது சொல்லும்போதே தானும் துள்ளி வெளியே குதித்தது.

அங்கே சிறிய நீர்த்தொட்டி இருந்தது. தண்ணீரில் மூழ்கிய அது மீண்டும் துள்ளி வெளியே குதித்தது.

என்ன வியப்பு! அதன் மேல் ஒட்டியிருந்த மாவெல்லாம் போய்க் கறுப்பாடாக நின்றது.

அதன் பின்னாலேயே வெள்ளாட்டுக் குட்டி யும் குதித்தது. அது இப்போது கறுப்பாட்டுக் குட்டியை அடையாளம் கண்டு கொண்டது.

அது சொன்னது: ''கறுப்பாட்டுக்



குட்டியே, இனி உனக்கு ஒரு ஆபத்தும் இல்லை. வெள்ளை நிறமான என்னைத் தான் தோலை உரித்துக் கொல்வார்கள்."

வெள்ளாட்டுக் குட்டியின் வேதனையைப் பார்த்தது கறுப்பாட்டுக் குட்டி.

சிறிது யோசித்துவிட்டு பக்கத்தில் இருந்த தொட்டிகளை எட்டி எட்டிப் பார்த்தது. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நிறம். கறுப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள் என்று இன்னும் சில நிறங்கள்.

வெள்ளைக் குட்டியைப் பார்த்து, "அண்ணே, கறுப்பு நிறத் தொட்டிக் குள்ளே குதி" என்றது கறுப்பாட்டுக் குட்டி.

உடனே வெள்ளை கறுப்புத் தொட்டியில் குதித்தது. மறுநொடியில் திரும்ப வெளியே குதித்தது.

அது கறுப்பாகி நிறம் மாறி நின்றது!

"சரி சரி, வா. நம்ம ஊருக்கு ஓடிப் போயிடுவோம்" என்று வெள்ளாட்டுக் குட்டியை வெளியே அழைத்துக் கொண்டு கறுப்பாடு சாலையில் நடந்தது.

எதிரே சாப்பிட்டுவிட்டு வண்டிக்காரர்கள் திரும்பி வந்தார்கள். அவர்கள் இருவரும், "அடடா, இந்தக் கறுப்பாடுகள் ரெண்டும் வெள்ளாடுகளா இருக்கக் கூடாதா? - நம்ம முதலாளிக்கு ரெண்டு வெள்ளாட்டுத் தோல் கிடைக்குமே?" என்று கவலைப் பட்டவாறு பேசிக் கொண்டு போனார்கள்.

அவை இரண்டும் தாங்கள் பிடித்து வந்த ஆடுகள்தான் என்பதை அவர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஆட்டுக்குட்டிகள் இரண்டும் தப்பித்தோம். பிழைத்தோம் எனறு ஊர் போய்ச் சேர்ந்தன.

கறுப்பாட்டுக் குட்டியிடம் வெள்ளாட்டுக் குட்டி, "தம்பி நீதான் என்னைக் காப்பாத்தினே. நீ அன்பானவன்- அறிவானவனும்கூட. அதனால்தான் என்னை நிறம் மாத்தித் தப்பிக்க வச்சே. நான் ஆணவம் பிடிச்சி உனக்குத் துன்பம் கொடுத்தேன். நீ அதையெல்லாம் மனசில வச்சிக்கலே. நீ மட்டும் தப்பிச்சி வராம நானும் தப்பிக்க வழி சொல்லி என்னையும் அழைச்சிட்டு வந்தே, என்னை மன்னிச்சிடு" என்றது.

கறுப்பாட்டுக் குட்டிக்கு ரொம்ப மகிழ்ச்சி.



பாதுகாப்பாய்க் கொண்டாடுவோம்!

❒ பட்டாசுகளை எப்போதும் திறந்த வெளியில் கொளுத்துங்கள்.

❒ பட்டாசுகளை தரையில் வைத்து பக்கவாட்டில் நின்று கொண்டு கொளுத்தவும். அதன் மீது குனிந்து கொளுத்தக் கூடாது.

❒ மத்தாப்புகளை உடலில் படாதபடி எட்டிப் பிடிக்கவும்.

❒ பட்டாசுகளை வெடிக்கும்போது தளர்வான ஆடைகளை அணியாதீர்கள்.

❒ கையில் பட்டாசைப் பற்ற வைத்து தூக்கிப் போட்டு பிடிக்கக் கூடாது.

❒ மத்தாப்பு கொளுத்தி முடித்த பின் கம்பிகளை அப்படியே போடக் கூடாது. யாராவது மிதித்தால் கால் புண்ணாகிவிடும். குப்பைத் தொட்டியில் போட்டு விடுங்கள்.


❒ சமையலறையில் பட்டாசுகளை வைக்காதீர்கள்.


❒ வீட்டில் வளர்க்கும் நாய், பூனைகளின் அருகில் பட்டாசுகளை வெடிக்காதீர்கள்.

❒ பற்ற வைத்த உடன் பட்டாசு வெடிக்காவிட்டால் கையில் எடுத்துப் பார்க்காதீர்கள்.


❒ பட்டாசு வெடித்து முடித்தபின் கைகளை சோப்புப் போட்டுக் கழுவி விடுங்கள்.







"நான்
எதைச்
செய்தாலும்
நாலு
பேருக்கு
தெரியும்படி
தான்
செய்வேன்!"



"மாப்பிள்ளைக்கு தீபாவளி பரிசாக நாலு காலுக்கும் தங்கக் காப்பு,
இடுப்புக்கு தங்க பெல்ட், துதிக்கைக்கு வைர மோதிரம் வேணுமாம்!"
— சுதர்ஸன்,

"ஆயிரம் பட்டாசு சர
வெடியிலே அறு நூற்று
முப்பத்தி நாலுதான்
வெடிச்சது. வெடிக்காத
பட்டாசை எடுத்துட்டு
போய் கொடுத்திட்டு வேற
வாங்கிட்டு வரேன்!"



பட்டாசு!

எஸ். ஆர். ஜி. சுந்தரம்

காட்சி - 1

வசந்த் : குமார்! மணி ஏழு ஆகப் போறது! அப்பா இன்னும் வரலையேடா...

குமார் : நிச்சயமா பட்டாசு கடைக்குத்தான் போயிருப்பார்! சந்தேகமேயில்லை.

சாதனா : அப்படிச் சொல்ல முடியாது. அப்பா வழக்கம் போல ஆபீஸ்லே ஓவர்டைம் செய்ய உட்கார்ந்திருப்பார்! இன்னும் தீபாவளிக்கு மூணு நாள் தான் இருக்கு! எல்லாரும் பட்டாசு வாங்கிட்டாங்க.

அம்மா : என்ன அப்பாவைப் பத்தி பேச்சா...? அப்படியே கொஞ்சம் பின்னால திரும்பிப் பாருங்க!

எல்லோரும் : அட, அப்பா வந்தாச்சா?

வசந்த் : ஹை... அப்பா, என்ன மூட்டை பெரிசா இருக்கு... பட்டாசா?

குமார் : மூட்டையைப் பார்த்தா ஆயிரம் ரூபாய்க்கு பட்டாசு இருக்கும் போல இருக்கு!

அப்பா : ம்... ஆயிரம் ரூபாய்க்குத்தான்.

எல்லோரும் : பிரிங்க... பிரிங்க!

அப்பா : ஆனா இது நீங்க நினைக்கறபடி பட்டாசு இல்லே... தீபாவளிக்கு புது துணிமணி!

குமார் : என்னப்பா நீங்க... பட்டாசு என்ன ஆச்சு?

அம்மா : உங்கப் பாவுக்கு நான்தான் 'போன்' பண்ணி பட்டாசு வாங்கிக் கிட்டு வர வேணாம்னு சொல்லிட்டேன்.

வசந்த் : ஏன்?

அம்மா : போன வருஷம் அப்பா வாங்கிக்கிட்டு வந்த பட்டாசுலே வெடி நிறைய இல்லே; இது இப்படி, அது அப்படின்னு ஆளுக்கு ஆள் குறை சொன்னீங்க இல்லே, ஞாபகமிருக்கா?

குமார் : ஆமாம்!

அம்மா : அதனால இந்த வருஷம் உங்களுக்கு என்னென்ன பட்டாசு வேணும்னு தெளிவா சொன்ன பிறகுதான் அப்பா போய் வாங்கிக்கிட்டு வருவார்!

குமார் : அதுவும் நல்ல ஐடியா. இப்பவே என்னென்ன பட்டாசு வேணும்னு நானே சொல்லிடறேன். யானை வெடி, லக்ஷ்மி வெடி, ஆட்டம்பாம், எலக்ட்ரிக் வெடி, ஊசி வெடி, குருவி வெடி எல்லாம் மும்மூணு டஜன்! ஹா... முக்கியமானது சொல்ல மறந்துட்டேன்... பத்தாயிரம் வாலா பட்டாசு மூணு! இன்னும் ஏதாவது புதுசா



வந்திருந்தா அந்த வெடியும் மூணு டஜன்! எங்க மூணு பேருக்கும் இது போதும்!

வசந்த் : போடா அதெல்லாம் முடியாது! உனக்கு வேணும்னா வெடியா வாங்கிக்க... அப்பா, எங்களுக்கு விஷ்ணு சக்கரம், தரைச்சக்கரம், சட்டிவாணம் - இப்படி வெடியில்லாம வாண



வகைகள்ளே என்னென்ன வகை வந்திருக்கோ, அத்தனையும் அஞ்சு அஞ்சு டஜன்! எனக்கும், சாதனாவுக்கும் அது போதும்! வெடியை விட வாணங்கள்தான் நல்லது... ஏன்னா வெடியை மத்தவங்க வெடிச்சா கூட, நம்ம காதால கேட்டுக்கலாம். ஆனா இந்த வாணங்களை நாம கிட்டே வச்சு கொளுத்தினாதான், கண்ணால பார்த்து நல்லா ரசிக்கலாம்! இல்லையா சாதனா?

சாதனா : ஹூம்... நீ அதையெல்லாம் வாங்கிக்க... எனக்கு வேணாம்! நான் மெதுவா யோசிச்சு சொல்றேன்!

அம்மா : இதுலே யோசிக்க என்ன இருக்கு? தீபாவளி பட்டாசுன்னாலே ரெண்டு வகைதானே. ஒண்ணு காதைக் கிழிக்கற மாதிரி வெடிக்கும்! மத்தது 'புஸ்' ஸுன்னு எரிஞ்சு பூப்பூவா, தோரணம் தோரணமா, கலர் கலரா, பல வடிவத்திலே தீபப்பூக்களா மாறும். உனக்கு இதுலே இஷ்டமில்லேன்னா எதுலே இஷ்டம்?

சாதனா : நான் யோசிச்சுத்தான் சொல்வேன்!

அம்மா : அப்போ ஒண்ணு செய்யுங்க. இவங்க மூணு பேருக்கும் ஆளுக்கு இருநூறு ரூபாய் கொடுத்துடுங்க... அவங்க அவங்க வேணும்கிறதை வாங்கிக்கட்டும்!

அப்பா : அதுவும் நல்ல யோசனைதான். இந்தாங்க ஆளுக்கு இருநூறு ரூபாய்! பத்திரமா வச்சுக்கிட்டு காலையிலே போய் வாங்கிக்கிட்டு வாங்க!

மூவரும் : சரிங்கப்பா!


அப்பா : ஒரு நிமிஷம் நில்லுங்க! இந்த இருநூறு ரூபாய்க்கும் நீங்க பட்டாசு வாங்கறதோ வேறு ஏதாவது வாங்கறதோ உங்க இஷ்டம்! ஆனா நீங்க வாங்கப் போறது எதுவாயிருந்தாலும் அதனால மத்தவங்களுக்கு எந்தத் தீங்கும் நேரக் கூடாது; தீபாவளியன்னைக்கு நம்மையும் மத்தவங்களையும் சந்தோஷப்படுத்தறதா, பாராட்டும்படியா இருக்கணும்; நடக்கற காலகட்டத்துக்கேத்த பொருளாகவும் இருக்கணும்! அப்படிப்பட்ட பொருளை யார் வாங்கிக் காண்பிக்கிறீங்களோ அவங்களுக்கு நான் தனியா ஒரு பரிசும் தரப் போறேன்!

குமார் : என்ன பரிசுப்பா?

அப்பா : இப்போ சொல்ல மாட்டேன்... சரி, சரி இப்பவே உங்க லிஸ்டை ரெடி பண்ணி வச்சுக்குங்க!

அம்மா : ஏங்க தீபாவளி பட்டாசு வெடிக்கறதுலேயும் ஒரு போட்டியா! நீங்க சொன்ன அந்தப் பொருள் எதுங்க?

அப்பா : சொல்ல மாட்டேன்! பொறுத்துப்



பார்த்துட்டு வந்துடுவோம். (தன் மேல் யாருக்கும் சந்தேகம் வராமல் இருக்க தலையணைகளை நீளவாட்டில் வைத்துப் போர்த்திவிட்டு, குமாரின் படுக்கைப் பக்கம் வருகிறான். பெட்டியை மெதுவாகத் திறந்து பார்க்கிறான்) ம்!... என்ன பெரிசா வாங்கிட்டான்... எல்லாம் வழக்கமா வாங்கற பட்டாசுகள்தான்... புதுசா எதுவும் இல்லே... அதனால அப்பாவோட பரிசு நிச்சயமா இவனுக்குக் கிடைக்காது. (பெட்டியை மூடுகிறான்)

ஆமாம்! இந்தக் குமார் எப்பவும் மூஞ்சியை மூடிக்கிட்டுத் தூங்க மாட்டானே இன்னிக்கு மட்டும் இப்படி ஏன் மூஞ்சியை மூடிக்கிட்டு தூங்



பார்!

காட்சி - 2

(இரவு நேரம்! மணி பன்னிரெண்டு)

வசந்த் : (தனக்குத் தானே) ம்..! அப்பா ஏதோ சிறப்புப் பரிசு தரப் போறதா சொன்னாரே! அது என்னவாயிருக்கும்? அதை நாம எப்படியாவது வாங்கிடணும். ம்! இந்த குமாரோட பட்டாசுப் பெட்டி, என் பெட்டியை விட பெரிசா இருக்கற மாதிரி இருக்கு. என்னென்ன பட்டாசு வாங்கியிருப்பான்? புதுசா ஏதாவது இருக்குமோ? படுக்கைக்கு பக்கத்துலேயே வச்சுக்கிட்டுத் தூங்கறானே.. ம்.. விடிஞ்சா தீபாவளி! சரி, நைசா போய் ஓசைப்படாம பெட்டியைத் திறந்து

கறான்! (போர்வையை ஒதுக்கிப் பார்க்க தலகாணிகள் இருப்பதைக் கண்டு) ஐய் யய்யோ... நம்ம ஐடியாவே இவனுக்கும் வந்திருக்கு போலிருக்கு. வந்திருக்கும்... வந்திருக்கும், தம்பிதானே! அப்போ இவனும் என் பட்டாசுப் பெட்டியை பார்க்கப் போயிருப்பானோ? ...அச்சச்சோ ஆமாம். அதோ குமார் என் பட்டாசுப் பெட்டியைப் பாத்துட்டு மூடிக்கிட்டிருக் கானே! டேய் குமார்! இங்கே என் படுக்கைப் பக்கம் என்ன செய்யறே?

குமார் : ம்... நீ ஏன் என் படுக்கைப் பக்கமா போனே?

வசந்த் : அது வந்து... வந்து... ஹாங்... ஒரு எலி அந்தப் பக்கமா ஓடிப் போச்சு! உன் பட்டாசைக் கடிச்சுடப் போறதேன்னு விரட்டப் போனேன்!

குமார் : நானும் இந்தப் பக்கமா வந்த பூனையை விரட்டத்தான் வந்தேன்!

வசந்த் : நீ ஏன்டா பூனையை விரட்டப் போனே. அந்தப் பூனையே எலியை விரட்டியிருக்குமில்லே!

குமார் : நீதான் எலியை முன்னாடியே விரட்டிட்டியே...

வசந்த் : சரி வா! தூங்கப் போகலாம்!



இரண்டு தலைநகர்!

சவுதி அரேபியாவுக்கு இரண்டு தலைநகரங்கள் உண்டு. அந்த நாட்டின் அரசர் வசிக்கும் ரியாத் ஒரு தலைநகர். நிர்வாக காரியங்களுக்கு மற்றொரு தலைநகரம். அதன் பெயர் ஜெட்டா.

– இரா. திலீப், திருச்சி – 14.

காட்சி - 3

(தீபாவளி தினம்! விடியற்காலை நேரம்! மூவரும் தங்கள் பட்டாசுப் பெட்டிகளை வெளியே தெருவிற்கு எடுத்து வந்து வெடிக்கத் தொடங்குகிறார்கள்.)

குமார் : அப்பா அம்மா இங்கே பாருங்க! நான் வெடிக்கற வெடிகளை எல்லாரும் ரசிக்கறாங்க. ரெண்டு காதையும் மூடிக்கிட்டு, எப்போ, எப்படி வெடிக்கும்னு ஆர்வமா கண்கொட்டாம கவனிக் கறாங்க! இதோ பாருங்க, இது முயல் வெடி-16! முயல் மாதிரியே துள்ளித் துள்ளிக் குதிக்கும். பதினாறு முறை துள்ளி, ஒவ்வொரு துள்ளலுக்கும் ஒரு வெடியா வெடிக்கும்! பாத்தீங்களா? எப்படி? இதோ இது கங்காரு வெடி! சுத்திக்கிட்டே வெடிக் கும்... பாருங்க, எல்லாரும் சிரிக்கறாங்க! இதோ, இது பிரும்மாஸ்திர வெடி! ஒரு அம்பா கிளம்பி, பல அம்புகளா பிரிஞ்சு வெடிச்சுக்கிட்டே நூறு அடி தூரம் போகும்!

பெண் குரல் : டேய்... யாருடா இது... கண்மண் தெரியாம வெடி வெடிக்கறது! இன்னும் கொஞ்சம் இருந்தா என் புடவை மேலே பட்டிருக்கும்!

அப்பா : குமார்! பட்டாசு வெடிக் கும்போது எப்படி எப்படியெல்லாம் முன்னெச்சரிக்கையா இருக்கணும்னு சொல்லியிருக்கேன் இல்லே, ம்! மன்னிப்பு கேளு!

குமார் : மன்னிச்சிடுங்க மாமி! கவனிக் காம கொளுத்திட்டேன்!

வசந்த் : குமார், நீ கொஞ்சம் நிறுத் திக்கோ... நான் இந்த வாணவேடிக்கை களை கொளுத்தறேன்... எல்லாரும் பாருங்க, இது 'பவுண்டன்' வாணம். நீரூற்று மாதிரியே சீறிக் கிளம்பி, நூல் நூலா மாறி வளைஞ்சு அருவி மாதிரி அழகா கீழே விழும்! இது சக்ராயுதம்! தலைக்கு மேலே கிளம்பி 'சர் சர்'னு சக்கரம் மாதிரி சுத்திக்கிட்டே வட்டம் போடுது! இது மின்னல் வாணம்! (மின்னல் மாதிரி 'பளிச்'சென்று கோடு போட்டுக் கொண்டு வளைந்து வளைந்து போகிறது! அப்பொழுது ஒரு மாட்டின்

மேல் பட்டு விடுகிறது)

மாட்டுக்காரர் : ஏய், என்ன வாணம்டா இது? இவ்வளவு நேரம் மாடு கயிற்றை அறுத்துக்கிட்டுப் போயிருக்கும்! தூக்கிக் குப்பையிலே போடு அதை!

சாதனா : வசந்த்! நீயும் கொஞ்சம் நிறுத்திக்கோ... இப்போ நான் கொளுத்தப் போறதை பாருங்க!

குமார் : சாதனா என்ன இது? அவ்வளவு பெரிய பெட்டியையே நடுத் தெருவிலே வைக்கறே? உள்ளே இருக்கறதை வெளியே எடுத்து ஒவ்வொண்ணா வெடி!

சாதனா : இந்தப் பெட்டியே ஒரே ஒரு வெடிதான்... கொளுத்தறேன் பாருங்க!

வசந்த் : சாதனா சீக்கிரம் ஓடி வந்துடு. வெடிச்சுடப் போறது?

குரல் 1 : அடேடே அட்டைப் பெட்டி அலேக்கா மேலே உஸ்ஸுன்னு எழும்பறது!

குரல் 2 : இப்போ அட்டைப் பெட்டி கழண்டு கீழே விழறது பாருங்கோ! கலர் கலரா காகிதப் பூக்களும் நம்மமேல விழறது.

குரல் 3 : அங்கே கவனிங்க... 'மிலிடரி மார்ச்' சத்தம் கேக்கறது!

குரல் 4 : ஏய் ஏய்! அதோ பாருடா பெட்டியிலேயிருந்து ஒரு சாரணச் சிறுவன் பொம்மை வெளியிலே வந்திருக்கு. அவன் நம்ம இந்திய சுதந்தரப் பொன் விழாக் கொடியை பிடிச்சுக்கிட்டு நிக்கறான் பார்!

குரல் 5 : அட பொம்மை அப்படியே காத்துல பறக்கறதே!

சாதனா : வந்தே மாதரம்! வந்தே மாதரம்!


குடும்பத்தினர் : வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

மற்றவர் : வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

(இந்த 'வந்தே மாதர' கோஷம், பொம்மை பறந்து செல்லும் வழியெல்லாம் தொடர்கிறது)

குமார் : சாதனா! பிரமாதம்! நீ கொளுத்தினது ஒரே வெடிதான்! ஆனா எல்லாரையும் அசர வச்சுட்டே!

வசந்த் : 'வந்தே மாதரம்!' கோஷம் போட்டு கைதட்டும்படியா செய்துட்டே!



"காலம் காலமா நான்தான் காட்டு ராஜா!"

"அந்தக் காலம் மலை ஏறிப் போச்சு. இப்ப நான்தான் காட்டு ராஜா."

"எதனால அப்படிச் சொல்றே...?"

"உன்னை வலைக்குள்ள மாட்ட வைக்கிற மனிதன் எனக்குப் பயந்து தான் வலைக்குள்ள புகுந்துக்கறானே!"

— சித்திரவேலு

குமார் : இதனால யாருக்கும் எந்தத் தீங்கும் இல்லே. எல்லோரையும் சந்தோஷப்பட வச்சுட்டே - சுதந்தரப் பொன் விழா ஆண்டுக்கு ஏற்ற வெடி!

அப்பா : அப்போ நீங்களே சாதனாவின் சாதனையைப் பாராட்டறீங்க. அப்படித்தானே?

வசந்த் : ம்! எங்க தங்கையாச்சே! உங்க சிறப்புப் பரிசை அவளுக்கே கொடுங்க!

அப்பா : இப்படி ஒரு வெடியை நானும் கடையிலே பார்த்தேன்... மாதிரிக்கு அவங்க கொளுத்திக் காண்பிச்சதையும் பார்த்தேன்... உங்க மூணு பேருலே யாராவது ஒருத்தராவது இந்த வெடியை வாங்கிக்கிட்டு வரணும்னு ஆசைப்பட்டேன்... அதை மனசுலே வச்சுக்கிட்டுத்தான் பரிசுக்கான நிபந்தனைகளையும் சொன்னேன்!

குமார் : நீங்க ரொம்ப தந்திரமான அப்பாதான். ம்! பரிசை எடுங்க, நாங்க பாக்கணும்!

அப்பா : இதோ இந்த 'வாக்-மேன்'தான் நான் தரும் சிறப்புப் பரிசு! கூடவே பாரதியாரின் தேசபக்திப் பாடல்கள்!

குமார், வசந்த் : சாதனா... உனக்கு எங்கள் நல்வாழ்த்துகள்!


எப்படி? எதற்கு? ஏன்?



பூனையின் கண்கள் இரவில் மின்னுவது எப்படி?

வெளிச்சம் இல்லாத இரவில் நம்மால் பார்க்க முடியாது. ஆனால் பூனையார்க்கு அப்படியல்ல. வெளிச்சமே இல்லாத இரவிலும், துல்லியமாக 'ஜம்'மென்று பார்ப்பார்; எலி பிடித்து விருந்தும் உண்பார்; எப்படி? எந்த இரவாக இருந்தாலும் நட்சத்திர ஒளி அல்லது நிலவு வெளிச்சம் அல்லது ஏதாவது ஒரு ஒளி தொலை தூரத்திலாவது மிகச் சன்னமாகத் தெரியும். அந்த ஒளிக்கதிர் பூனையின் கண் விழியில் பட்டு பிரதிபலிக்கிறது. எவ்வாறு என்பதை நீங்கள் அறிவீர்களா? வாகனங்களின் நம்பர் தகடு அல்லது சாலைக்குறியீடுகள் அல்லது, விளம்பர வாசகங்களில், இரவில் வெளிச்சம் பட்டால், அவை 'பளபள' வென்று பிரதிபலிக்கின்றன அல்லவா? அவைகளில் வெளிச்சம் பட்டால் ஒளிரும்படியான ஃப்ளோரசென்ட் (Fluoresent) வண்ணம் பூசப் பட்டிருக்கின்றன. அதேபோல, பூனையின் விழித்திரையிலும், ஒரு 'சிறப்பு வேதிப்பூச்சு' பூசப்பட்டிருப்பதால், இரவில் ஒளி படும்போது பிரதிபலிக்கிறது. எனவே பிரதிபலிக்கும் ஒளியில் பூனையார் இரை பிடித்து சாப்பிடுகிறார். நாம் இரவில் பூனையின் விழியைப் பார்க்கும் போதும், நெருப்புக் கோளங்கள் போல் விழிகள் பளபளவென்று மின்னுகின்றன. பூனை மட்டுமல்ல, பூனை இனத்தைச் சேர்ந்த புலி, சிறுத்தை மற்றும் சிங்கம் போன்றவற்றின் கண்களும் இதே சிறப்பைப் பெற்றவைதான்.

பூக்களின் பலப்பல நிறங்கள்... எதற்கு?



பூக்களைப் பார்ப்பது என்றால் நமக்கெல்லாம் ரொம்ப இஷ்டம்தானே! அவைகளும் உங்கள் இனத்தைச் சேர்ந்தவைதானே! எப்படி என்கிறீர்களா? மிக மிக மென்மையானவை உங்களைப் போல! மென்மையான, அழகான பூக்களைப் பார்த்து ரசிக்காதவர் யார்? முட்களை உடைய கள்ளிச் செடிகளும்கூட, கண்ணைக் கவரும் அழகான வண்ணப் பூக்களைத் தருகின்றனவே! பொதுவாக பகலில் மலரும்

பூக்கள் பளிச் சென்று பல வண்ணங்களில் பிரகாசமாக இருக்கின்றன. எதற்காக இந்தப் பூக்கள் இப்படி பல வண்ண ஆடைகளை போர்த்திக் கொண்டிருக்கின்றன? தேனீக்களையும், பூச்சிகளையும் சில பறவைகளையும் கவருவதற்காகத்தான்! ஏன்? பூக்கள் பூப்பதே தன் இனத்தை பெருகச் செய்வதற்குத்தான். அதற்காக பூவிலுள்ள மகரந்தத் தூள் வேறொரு பூவிலுள்ள சூல் முடியில் பட்டு, மகரந்த சேர்க்கை நடந்து, கருவுறுதல் நடக்க வேண்டும். இப்படி மகரந்தத் தூளை ஒரு பூவிலிருந்து இன்னொரு பூவிற்கு இடம் மாறச் செய்ய, பூச்சிகள் அல்லது தேனீக்களின் உதவி தேவை. இதற்காகவே, இவைகளைக் கவர்வதற்காகவே பூக்கள் தங்களிடம் தேனைப் பெற்றிருக்கின்றன. பூக்கள் இருக்கும் இடம் தேனீக்கள் மற்றும் பூச்சிகளுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே, பளீரென்ற நிறங்களில் பூக்கள் பூக்கின்றன. தேனருந்த வரும் பூச்சிகளின் இறகுகளில் ஒட்டும் மகரந்தம், அவை வேறொரு மலருக்குத் தாவும்போது, அதிலுள்ள பூவின் சூல் முடியில் படுகிறது; மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. இரவில் பூக்கள் வேறு நிறங்களில் இருந்தால், பூச்சிகளுக்கு அவைகளைக் கண்டுபிடிப்பது கடினம். எனவே இரவில் மலரும் பூக்கள், பூச்சிகளுக்குத் தெரிவதற்காக பளிச் சென்ற 'வெள்ளை' நிறத்தில் பூக்கின்றன!


ஏலக்காய்



ஏலம் விலை மதிப்புள்ளது; இது ஒரு வாசனைப் பொருள். மலைப் பகுதிகளில் குளிர்ந்த இடங்களில் விளைகிறது. நாம் பொதுவாக இனிப்பு பொருளுடன் சுவை கூட்டவும், வாசனைக்காகவும் ஏலக்காயைக் கலக்கிறோம். ஆனால் இதற்குள்ள மருத்துவ குணங்களை நாம் கணக்கில் எடுத்துக் கொள்வதே இல்லை. இதனை வாயில் போட்டு மென்றால், இதன் சுவையும் மணமும், மனதையும் மூளையையும் புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்கிறது. மேலும் ஏலக்காய் உட்கொள்வது இதயத்திற்கு மிகச் சிறந்த டானிக்காகும். ஏலம் நுரையீரல்களைப் பலப்படுத்துவதுடன், மிகச் சிறந்த 'இருமல் போக்கி'யாகவும் செயல்படுகிறது. பொதுவாக இந்தியாவில் ஏலக்காய், உணவுக்குப் பின் தரப்படுகிறது. இதனை உண்டால் செரித்தலை நன்கு தூண்டி விடுகிறது; அத்துடன் மூச்சையும் புதுப் பொலிவுடன் புத்துயிர்ப்புடன் இருக்க வைக்கிறது. ஏலத்திற்கு மருத்துவ குணங்கள் இருந்தாலும் இதனை மிகக் குறைந்த அளவிலேயே நாம் உபயோகிக்க வேண்டும். மருந்தை அளவாகத்தானே உட்கொள்வோம்! அதுபோல்தான் ஏலமும்!

காய்ச்சல் ஏன் வருகிறது?

காய்ச்சல் என்பது, ஒரு நோயின் அறிகுறி. அவ்வளவே! காய்ச்சலே நோய் அல்ல. நம் உடலின் வெப்பநிலை எத்தனை டிகிரி என்று உங்களுக்குத் தெரியுமா? 98.4°F. இந்த வெப்ப நிலையை அப்படியே வைத்திருக்க உதவுவது நம் இரத்தம்தான். வெயில் காலத்தில் மட்டும் உடல் வெப்ப நிலையை அதிகரிக்க விடாமல் காப்பாற்ற இரத்தத்தின் துணைக்கு வியர்வைச் சுரப்பிகளும் வேலை செய்கின்றன. நம் உடலின் 'பாதுகாவல் படை வீரர்கள்' இரத்தத்திலுள்ள வெள்ளையணுக்கள்தான். நம் உடலில் ஏதேனும் கிருமிகள் அல்லது அந்நியப் பொருட்கள் நுழைந்து விட்டால், அவற்றை வெளியேற்ற, வெள்ளையணுக்கள், அவற்றை சூழ்ந்து கொண்டு, அவற்றுடன் சண்டையிடும். இதனால் உடலின் வெப்பநிலை 98.4°F ஐ விட அதிகரிக்கும். வெப்பநிலை உயர்வதால், உடலுக்குள் நுழைந்த கிருமிகள் கொல்லப் படும். எனவே காய்ச்சல் வருவதன் மூலம், உங்கள் உடலில் 'நோய் எதிர்ப்புத் திறன்' இருப்பது நிரூபணமாகிறது.



- எஸ். மோகனா



கலக்கல் பலகாரம்!

சென்ற வருடம் தீபாவளி பலகாரத்தில் நான் செய்த புதுமையான பலகாரம் இது. இந்த தீபாவளிக்கு நீங்களும் செய்து சாப்பிடலாம். இதைச் செய்வதற்கு அம்மாவின் உதவியை கேட்டு நச்சரிக்க வேண்டியதில்லை! அம்மா செய்த பலகாரங்களிலேயே இந்தப் பலகாரத்தை செய்து விடலாம்!


தேவையான பொருட்கள் :

மிக்சர் அல்லது காராபூந்தி அல்லது ஓமப்பொடி - 1 கப்
முறுக்கு - 1
லட்டு - 1
வெங்காயம் சிறியது - 1 (நறுக்கிக் கொள்ளவும்)
தக்காளி சிறியது - 1 (நறுக்கிக் கொள்ளவும்)
கொத்தமல்லி, கறிவேப்பிலை - சிறிது

செய்முறை :

முதலில் மிக்சரை பாத்திரத்தில் கொட்டவும். முறுக்கை சின்னச் சின்ன துண்டுகளாக உடைத்துப் போடவும். லட்டை உடைத்து மிக்சருடன் கலக்கவும். நறுக்கிய வெங்காயம், தக்காளி, கொத்தமல்லி, கறிவேப்பிலைகளைத் தூவி சாப்பிடலாம். சுவையாக இருக்கும். செய்வதற்கு எளிது. தேவையானால் சிறிது எலுமிச்சை சாறும் சேர்த்துக் கொள்ளலாம். சாப்பிட்ட பின் உங்கள் அனுபவத்தை எழுதுங்கள்.

— பி. திவ்யா,
ஏழாம் வகுப்பு,
திருமோகூர்,
மதுரை மாவட்டம்.



அம்மா அதிர்ந்தாள்!

கண்ணனும் தம்பி மணியும் அம்மாவுடன் ரயிலில் சென்று கொண்டிருந்தனர். கண்ணன் திடீரென, "அம்மா! சற்று முன்பு கடந்து போன ரயில்வே ஸ்டேஷன் பெயர் என்னம்மா?" என்று கேட்டான்.

"என்னைத் தொந்தரவு செய்யாதேடா, கண்ணா! எனக்குத் தெரியாது. நான்தான் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேனே, கவனிக்கவில்லை" என்று கூறினாள் அம்மா.

"போன ஸ்டேஷனிலே தம்பி மணி இறங்கிட்டான்.. அப்பக்கூட நான் உங்களைத் தொந்தரவு செய்யவில்லை. அதான் ஸ்டேஷன் பேரையாவது தெரிஞ்சுக்கலாமுன்னுதான் கேட்டேன்!" என்று கண்ணன் கூற, அம்மா அதிர்ந்து போனாள்!

— ராமரத்தினம்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription : (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


பட்டாசைப்
பார்த்து
பயப்பட
மாட்டேன்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka